
கல்கி
மணியம்
KALKI
மே 31, 1953
4 அணா

தனது உறுதியான, வெண்மையான பற்களைப்பற்றி பெருமைப்பட்டுக் கொண்டிருந்தான் . . .



. . . ஆனால், இப்பொழுது

சிரிக்கவே அச்சப்படுகிறான்!

ஈறுகளை அசட்டை செய்வதால் பற்களின் ஆரோக்கியம் பாதிக்கப்படுகிறது. உங்கள் பற்கள் இப்பொழுது எவ்வளவு உறுதியாகவும், ஆரோக்கியமாகவும் இருந்தாலும் ஈறுவியாதிகள் ஏற்பட்டால் அவைகள் அழிந்துபோகின்றன. உங்கள் மென்மையான ஈறுகளை எஸ். ஆர். டூத்பேஸ்ட் உபயோகித்து பாதுகாத்துக்கொள்ளுங்கள்—இதுவே ஆரோக்கியமான ஈறுகளில் ஆரோக்கியமான பற்களை இருக்கச்செய்யும் ஒரு நிச்சயமான வழி. உலகெங்கும் பல் வைத்தியர்கள் ஈறு வியாதிகளை சிகிச்சைசெய்ய உபயோகிக்கும் ஸோடியம் ரிஸினோலியேட்* எஸ். ஆர். டூத்பேஸ்டில் தான் அடங்கியிருக்கிறது. எஸ். ஆர். டூத்பேஸ்ட் உங்களுக்கு இரட்டிப்பு பாதுகாப்பளிக்கிறது. —உறுதியுள்ள ஆரோக்கியமான ஈறுகளில் பற்களை ஒழுங்காகவும், வெண்மையாகவும் இருக்கச்செய்கிறது.



எஸ். ஆர். டூத்பேஸ்ட் உபயோகித்து உங்கள் சிரிப்பை கவர்ச்சியுடையதாகச்செய்யுங்கள்.



பெரிய சைஸிலும் இப்பொழுது கிடைக்கிறது.

* ஸோடியம் ரிஸினோலியேட் பாக்டீரியாவை எதிர்ப்பதோடு பாக்டீரியாவினால் ஏற்படும் விஷத்தன்மையைத் தடுக்கும் சக்தியையும் அளிக்கிறது.

3SR. 103-50 TM

கல்கி பொருளடக்கம்

மலர் 12 } இதழ் 44 }   1953 மே 31   { விஜய ஸ்ரீ { வைகாசி 18உ


ஜூன் 5ம் தேதி முதல்
சென்னை
சித்ரா
பிராட்வே
லக்ஷ்மி
(அமிஞ்சிக்கரை)
மற்றும் தென்னாடெங்கும்
தயாரிப்பு அண்டு டைரக்ஷன்..
ஜோசப் பள்ளிப்பாட்
ஸி. ஸி. புரொடக்ஷன்ஸ்
முயற்சி

கல்கி

மலர் 12 | தமிழ்த் திருநாடு தன்னைப் — பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா. —பாரதியார் | இதழ் 44

பலே மலையாளிகள்!

மலையாளிகள் ரொம்ப கெட்டிக்காரர்கள், அசாத்திய புத்திசாலிகள், பலே கைகாரர்கள், — என்றெல்லாம் சொன்னால், நமக்கு அதிசயம் ஒன்றும் ஏற்படாது. "மலையாளிகளின் சாமர்த்தியம் தெரிந்தது தானே?" என்போம். ஆயினும், சென்ற வாரத்தில் நம் கேரள சகோதரர்கள் காட்டியிருக்கும் புத்திசாலித்தனம் நம் எல்லாரையும் பிரமிக்கச் செய்வதாகவே இருக்கிறது.

மொழிவாரிப் பிரிவினை வெறி இந்தியாவின் பல இடங்களிலும் தற்சமயம் உச்ச நிலையை அடைந்திருக்கிறது. வங்காளிகள், பீஹாரிகள், மகாராஷ்டிரர்கள், கன்னடியர்கள்,—இப்படித் தூர தூரங்களில் உள்ளவர்களை அந்த வெறி பிடித்தாட்டுகிறது. நம் ஆந்திர சகோதரர்களைப் பற்றியோ சொல்ல வேண்டியதில்லை. அவர்கள் தானே இந்த வெறியாட்டத்திற்குத் தலைமை வகித்து வழிகாட்டி உதவியவர்கள்? "உடனே பிரியுங்கள்; பிரிக்காவிட்டால் பட்டினி கிடப்போம்; ரயிலைத் தடுப்போம்; கல்லை எறிவோம்; மண்டையை உடைப்போம்; நாக்கைப் பிடுங்கிக் கொள்வோம்!" என்றெல்லாம் நாலு திசைகளிலிருந்தும் கோஷங்கள் கிளம்புகின்றன.

இத்தகைய சூழ்நிலையில், நம் மலையாள சகோதரர்கள் மாகாண மகாநாடு கூடி என்ன தீர்மானித்திருக்கிறார்கள் தெரியுமா?

"ஆந்திரா பிரிந்த பின்னர் எஞ்சிய சென்னை இராஜ்யத்திலேயே நாங்கள் இருப்போம். திருவாங்கூர்—கொச்சியையும் சென்னை இராஜ்யத்தோடு சேர்த்து விட விரும்புகிறோம்" என்று தீர்மானம் செய்திருக்கிறார்கள்.

இத் தீர்மானத்துக்கு மேற்படி மாகாண அரசியல் மகாநாட்டில் எதிர்ப்பு இல்லாமற் போகவில்லை. சிலர் சாங்கோபாங்கமாக எதிர்வாதங்களைச் சொல்லத்தான் செய்தார்கள். ஆனாலும் வோட்டு எடுத்தபோது, சுமார் பதினைந்து பேர்தான் தீர்மானத்தை எதிர்த்து வோட்டுச் செய்தார்களாம்!

"மற்றப் பெரும்பாலான பிரதிநிதிகள் தீர்மானத்தை ஆதரித்து அதை நிறைவேற்றி வைத்தார்கள். தீர்மானம் நிறைவேறிய செய்தி மகாநாட்டில் பெருத்த உற்சாக ஆரவாரத்தை உண்டாக்கியது!" என்று பத்திரிகை விவரங்கள் கூறுகின்றன.

இவ்விதம் நம் மலையாள சகோதரர்கள் தீர்மானம் நிறைவேற்றியதில் அவர்களுடைய அதிசயமான கெட்டிக்காரத்தனம் வெளியாகின்றதல்லவா?

இத்தகைய வெறும் தீர்மானம் ஒன்று நிறைவேறியதிலேயே மலையாள சகோதரர்களுக்கு அனுகூலம் இருக்கிறது.

ஏற்கெனவே பண்டித ஜவாஹர்லாலுக்கு மலையாளிகள் என்றால் ஒரு தனி அபிமானம் உண்டு. காஷ்மீருக்கு அடுத்தபடியாக மலையாளத்தின் மீது அவருக்குப் பிரேமை என்று சொல்லக் கூடியதாயிருந்தது. இனி, மலையாளம் காஷ்மீரத்தையும் மிஞ்சி அவருடைய அன்பைப் பெற்றுவிடும். "இந்தியா தேசத்திலேயே மலையாளிகள்தான் புத்திசாலிகள்; விசால மனப்பான்மையுள்ளவர்கள்" என்று ஜவாஹர்லால்ஜி முடிவு செய்தால், அதில் அதிசயம் ஒன்றும் இராது. அவ்வளவு தூரத்துக்கு ஜவாஹர்லால்ஜியின் அபிமானத்தைப் பெறுவது இலேசான காரியமா? அதில் உள்ள அநுகூலந்தான் அலட்சியம் செய்யக் கூடியதா?

இது போகட்டும். தீர்மானத்தின்படி காரியத்திலும் நடந்து விட்டாலோ மலையாள சகோதரர்களுக்கு இன்னும் பல சௌகரியங்கள் ஏற்படும்.

மலையாளம் உணவுப் பற்றுக்குறைப் பிரதேசம்; வரவுக்கு மிஞ்சிச் சர்க்கார் செலவு செய்ய வேண்டியதாயிருக்கும் பிரதேசம். ஆகையால் தனி மாகாணமாயிருப்பதைக் காட்டிலும் சென்னை இராஜ்யத்தில் சேர்ந்திருப்பதால், "நீ அவல் கொண்டு வா! நான் உமி கொண்டு வருகிறேன்! இரண்டு பேரும் ஊதி ஊதித் தின்போம்" என்ற பழமொழியில் அடங்கியுள்ள அநுகூலம் அவர்களுக்கு ஏற்படத்தான் செய்யும்.

மலையாளத்தில் உத்தியோகப் படிப்புப் பெற்றவர்கள் அதிகம். ஒரு சிறிய மாகாணத்தில் அவ்வளவு பேருக்கும் உத்தியோகம் கிடைப்பது கஷ்டம். சென்னையைப் போன்ற பெரிய இராஜ்யத்தில் சேர்ந்திருப்பதால் படித்த வகுப்பினருக்கு உத்தியோக வசதிகள் அதிகம் ஏற்படும் அல்லவா!

இப்படி யெல்லாம் இன்னும் பல அநுகூலங்கள் இருக்கத்தான் செய்கின்றன. ஆயினும் அவற்றை உணர்ந்து பார்த்துச் சரியான தீர்மானத்தைச் செய்யக் கெட்டிக்காரத்தனம் வேண்டுமே!

"எல்லாரும் மொழி வாரிப் பிரிவினை கேட்கிற போது, நாம் மட்டும் ஏன் சும்மா இருக்க வேண்டும்? நாமும் 'மலையாள ராஜ்யம் வேண்டும்' என்று கூச்சல் போடுவோம்!" என்று எண்ணும் பொதுக் கூச்சலுக்கு மாறுபட்ட ஒரு தனிக் கோஷம் எழுப்புவதற்கு எவ்வளவோ தைரியம் வேண்டும் அல்லவா!

அதுமட்டுமல்ல; மேற்படி தீர்மானம் "தமிழர்களோடு சேர்ந்து வாழலாம்; வாழ முடியும்!" என்ற நம்பிக்கையை வெளியிடுகிறது.

நம் மலையாள சகோதரர்களின் இந்த நம்பிக்கையையும் அதற்கு அடிப்படையாக உள்ள விசால மனப்பான்மையையும் பாராட்டியே தீரவேண்டும்.

* * *

ஆந்திரா பிரிந்த பின்னர் எஞ்சும் சென்னை ராஜ்யத்தில் மலையாளிகள் சேர்ந்திருக்க வேண்டும் என்று தமிழர்கள் வற்புறுத்த விரும்பவில்லை. மலையாளிகள் சேர்ந்திருப்பதினால் தமிழர்களுக்கு எவ்வித அநுகூலமும் இல்லை. பிரதிகூலமும் பண நஷ்டமும் உண்டு என்று சொல்வதும் தவறாகாது.

ஆனால் எல்லாப் பிரச்னைகளையும் லாப நஷ்டக் கணக்கைக் கொண்டே ஆராய்ந்து முடிவு செய்வது தமிழ் மக்களுடைய புராதனப் பண்பாட்டுக்கு உகந்ததன்று.

"செல்விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல் விருந்து வானத்தவர்க்கு"

என்று தமிழ் மறை கூறுகிறது.

ஆகையால் "உங்களுடன் சேர்ந்திருக்கிறோம்" என்று சொல்லுகிறவர்களை இதய பூர்வமாக வரவேற்றுத் தமிழர்கள் தங்களுடன் வைத்துக் கொள்வார்கள் என்பதில் சந்தேகமில்லை.

ஒரு காலத்தில் சேர நாடும் செந்தமிழ் நாடாகவே இருந்தது என்பதை நாம் மறந்து விடக் கூடாது. மலையாள மொழியோ தமிழன்னையின் செல்வப் புதல்விதான்! பிறந்த வீட்டிலேயே வந்திருக்கிறேன் என்று சொல்லும் செல்வப் புதல்வியை எந்த அன்னைதான் "போ" என்று விரட்டி யடிப்பாள்! தமிழன்னை நிச்சயமாக அவ்விதம் சொல்ல மாட்டாள்!

மலையாள அரசியல் மகாநாட்டில் தீர்மானம் என்னமோ நிறைவேறி விட்டது. இதனாலேயே மலையாளத்து மக்கள் அனைவரும் அதை ஒப்புக் கொண்டு விட்டார்கள் என்று நாம் எடுத்துக் கொள்ள முடியாது. முக்கியமாக, தற்போது தனி இராஜ்யமாக இயங்கும் திருவாங்கூர்—கொச்சி ராஜ்யப் பிரஜைகள் தங்களுக்கு மேற்படி தீர்மானம் சம்மதம் என்பதை ஐயந்திரிபுக் கிடமின்றி வெளியிட்டு ஊர்ஜிதம் செய்ய வேண்டும். அவ்விதம் ஏக மனதாக, அல்லது ஏறக்குறைய ஒரு மனதாக, மலையாள சகோதரர்கள் தமிழர்களோடு சேர்ந்திருக்க விரும்புகிறார்கள் என்று ஏற்பட்டால், தமிழர்கள் அன்போடும் ஆதரவுடனும் அவர்களுடைய விருப்பத்தை நிறைவேற்ற முன் வருவார்கள் என்று நம்புகிறோம்.

புதிய மோகம் அன்று; பழைய உறுதிதான்!

ஸோஷலிஸக் கொள்கைக்குத் தமிழ் நாட்டில் எவ்வளவு பேராதரவு இருக்கிறது என்பது சமீபத்தில் நமக்கு வந்திருக்கும் நேயர்களின் கடிதங்களிலிருந்து தெளிவாகிறது. ஆனால் இது நமக்கு வியப்பை அளிக்கவில்லை. நாம் எதிர்பார்த்தபடிதான் இருக்கிறது. தமிழ் மக்களிடையே ஸோஷலிஸக் கொள்கைக்கு இவ்வளவு ஆர்வமும் ஆதரவும் இருந்தும், தமிழ் நாட்டில் ஸோஷலிஸக் கட்சி நல்ல முறையில் இயங்கி வலுப்பெற வில்லையே என்பதுதான் ஏமாற்றமான விஷயம்.

"ஸோஷலிஸக் கொள்கை மீது இந்தப் புதிய மோகம் ஏன்?" என்று ஒரு நேயர் கேட்டிருக்கிறார். "கல்கி" யைத் தொடர்ந்து படிக்காதவர்கள்தான் இவ்விதம் எண்ணுவார்கள்.

"ஸோஷலிஸ அடிப்படையில் அமையும் சமுதாயந்தான் மனித குலத்தின் நன்மைக்கு உகந்தது" என்பது நமது பழமையான உறுதியான அபிப்பிராயம். சுதந்திர இந்தியாவின் பிரச்னைகளை யெல்லாம் நல்ல முறையில் தீர்த்து வைத்து, இந்தப் புராதன நாட்டை உன்னத நிலைமைக்குக் கொண்டுவரக் கூடியதும் ஸோஷலிஸக் கொள்கைதான் என்பதில் நமக்கு எள்ளளவும் சந்தேகமில்லை.

காங்கிரஸின் மூலமாகவே ஸோஷலிஸக் கொள்கை இந் நாட்டில் அமுலுக்கு வரக்கூடும் என்ற நம்பிக்கையினால்தான் நாம் காங்கிரஸையும் காங்கிரஸ் ஆட்சியையும் ஆதரிக்கிறோம். நேருஜி காங்கிரஸின் தலைவராகவும் அரசாங்கத் தலைவராகவும் இருந்து வரும் வரையில் மேற்படி நம்பிக்கை நமக்கு இருந்து வரும்.

ஸோஷலிஸ்ட் கொள்கையைக் காங்கிரஸ் அமுலுக்குக் கொண்டு வரும் என்ற நம்பிக்கை நமக்கு இருந்த போதிலும், அதனால் ஸோஷலிஸ்ட் கட்சிக்கு நாட்டில் இடமில்லை என்று கருதவில்லை.


ஸோஷலிஸ சமுதாயத்தை அமைப்பதையே முதன்மையான இலட்சியமாகக்கொண்ட ஸோஷலிஸ்ட் கட்சி தனித்து இயங்க வேண்டியது மிகவும் அவசியமாகும். காங்கிரஸோடு இக் கட்சி ஒத்துழைத்து இயங்கினால்,—அரசாங்க நிர்வாகத்திலும் நேருஜியுடன் சேர்ந்து உழைத்தால்,—காங்கிரஸை ஸோஷலிஸ்ட் பாதையில் அதிக தீவிரமாகச் செலுத்துவதற்கு உதவியாயிருக்கும்.

தனித்து இயங்கினால், காங்கிரஸை ஸோஷலிஸ்ட் இலட்சியப் பாதையிலிருந்து அதிகம் விலகிப் போகாமல் பார்த்துக் கொள்ளலாம்.

காங்கிரஸ் தன்னுடைய கடமையில் தவறிவிட்டால், தேசம் அந்த ஸ்தாபனத்திடம் வைத்திருக்கும் நம்பிக்கை அடியோடு பொய்த்துப் போய் விட்டால், காங்கிரஸுக்குப் பதிலாகச் சர்க்காரை ஏற்று நடத்தத் தகுதி வாய்ந்த அகில இந்திய ஸ்தாபனம் ஸோஷலிஸ்ட் கட்சி ஒன்றுதான்.

ஆதலின் மேற்கூறிய பொறுப்பை ஏற்று நடத்தக்கூடிய அளவில் ஸோஷலிஸ்ட் கட்சி நாட்டில் வேரூன்றி வலுப்பெற்று வளர வேண்டியது மிகவும் அவசியமாகும்.

புதிய விருந்தினர்!



ஆந்திரப் பிரிவினைக்குப் பின் எஞ்சியுள்ள சென்னை மாகாணத்தில் திருவாங்கூர்—கொச்சியையும் சேர்த்து விடலாம் என்று மலையாளப் பிரதேச அரசியல் மகா நாட்டில் மிகப் பெரும்பான்மை ஆதரவுடன் ஒரு தீர்மானம் நிறைவேறி யிருக்கிறது.

சோஷலிஸ்ட் கட்சித் தலைவர் ஸ்ரீ ஜயப்பிரகாச் நாராயணனிடமும் நமக்கு எப்போதுமே விசேஷ மதிப்பு உண்டு. 1948-ம் ஆண்டில் ஸ்ரீ ஜயப்பிரகாச் தமிழ் நாட்டிற்கு விஜயம் செய்தபோது வெளியான "கல்கி" இதழ்களைப் பார்த்தால் இதனை நன்கு அறியலாம்.

ஸ்ரீ ஜெயப்பிரகாச் தேசபக்த தீரர்; அறிவாற்றல் மிக்கவர்; நிர்மாண வேலைத் திறமையும் வாய்ந்தவர்.

அவருடைய சகாக்களான ஸ்ரீ அசோகமேத்தா முதலியவர்களும் சிறந்த இலட்சிய வாதிகள். நிர்மாணத் திறமையும் படைத்தவர்கள். 1942-ம் ஆண்டு இயக்கத்தில் இவர்கள் செய்த சாகஸச் செயல்களை என்றும் மறக்க முடியாது.

ஸ்ரீ ஜயப்பிரகாச் நாராயண் தேசத்தின் பொது நலத்தை முன்னிட்டுத் தம் கட்சியின் நலத்தைக் கூட ஓரளவு விட்டுக் கொடுக்கக்கூடியவர் என்பதைச் சில உதாரணங்களினால் கண்டோம்.

ரயில்வே ஊழியர்களின் தொழிலாளர் சங்கமும், தபால் – தந்தி இலாகா சிப்பந்திகளின் ஸ்தாபனமும் ஸ்ரீ ஜயப்பிரகாசின் பூரண செல்வாக்கின்கீழ் இருந்தன. அந்தத் தொழிலாளர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்காகப் பொது வேலை நிறுத்தம் செய்ய வேண்டிய சந்தர்ப்பங்களும் நேரிட்டன. ஆயினும் வேலைநிறுத்தம் செய்வதால் தேசத்தின் பொது நலம் பாதகம் அடையும் என்று உணர்ந்து, வேலை நிறுத்தம் நேராமல் ஸ்ரீ ஜயப்பிரகாச் தடுத்தார். இது அவருடைய தேச சேவைகளிலே தலை சிறந்த தேச சேவை என்று சொன்னால் மிகையாகாது.

ஆச்சாரிய கிருபளானியும் அறிவாளிதான்; தேசபக்தர்தான். ஆனால் உருப்படியான காரியம் எதுவும் அவரால் செய்ய முடியாது. ஆகையினாலேயே "உருப்படாதவர்" என்று அவரைப் பற்றிக் குறிப்பிட்டிருந்தோம். அவர் நீண்டகாலம் காங்கிரஸின் அக்கிராசனராக இருந்தார். ஆனால் அந்த ஸ்தாபனத்தைத் தூய்மைப் படுத்துவதற்கோ, பலப்படுத்துவதற்கோ அவரால் சிறிதும் முடியவில்லை. பிரஜா கட்சியை அவர் அமைத்து நடத்தியதும் அவ்வளவு இலட்சணமாகத்தான் இருந்தது. யார் என்ன பேசினாலும், என்ன செய்தாலும், அவற்றில் குற்றம் கண்டுபிடித்துப் பேச்சிலே வெளுத்து வாங்குவதுடன் அவர் திருப்தி அடைந்து விடுகிறார். இத்தகைய இயல்பு படைத்தவர்களால் உருப்படியான காரியங்கள் செய்ய முடியாது.

ஸ்ரீ ஜயப்பிரகாச் நாராயண் இப்போது ஈடுபட்டிருக்கும் காரியத்தைப் பாருங்கள். ஆச்சாரிய வினோபா பாவே ஆரம்பித்த 'பூமிதான இயக்கம்' ஸோஷலிஸக் கொள்கைக்கு ஓரளவு ஆக்கந்தரக் கூடியது என்று கண்டார். உடனே அதில் உற்சாகமாக ஈடுபட்டார். ஹைதராபாத் இராஜ்யத்தில் ஊர் ஊராகச் சென்று பூமிதான இயக்கத்துக்கு நிலமும் பணமும் கால் நடைகளும் சேகரித்தார்.

இலட்சியவாதிகள் காரிய நிர்வாகத் திறமை உள்ளவர்களாயும் இருக்க முடியும் என்பதற்கு ஸ்ரீ ஜயப்பிரகாச் நாராயண் சிறந்த உதாரண புருஷராக விளங்குகிறார்.

*　　*　　*

தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில், இங்கே சோஷலிஸ்ட் கட்சியின் நிர்வாகிகளும் பிரசாரகர்களும் நேருஜி முதலிய மாபெரும் தேசபக்தத் தலைவர்களைக் காரசாரமாகக் கண்

டிப்பதுடன் தங்கள் கடமை தீர்ந்து விட்டது என்று எண்ணுகிறார்கள். ஸோஷலிஸ்ட் கொள்கைகளை மக்களிடையே பரப்புவதற்கும், கட்சியைப் பலப்படுத்துவதற்கும் உகந்த காரியங்களை அவர்கள் இதுவரையில் நல்ல முறையில் கையாளவில்லை. இதனால் சோஷலிஸக் கொள்கைகளுக்குத் தமிழ் நாட்டில் நல்ல ஆதரவு இருந்தும், அதற்குத் தகுந்த அளவில் ஸோஷலிஸ்ட் கட்சி அமைப்பு பலம் பெறவில்லை.

வருங்காலத்தில் தமிழ் நாட்டில் சோஷலிஸ்ட் கட்சி புத்துயிர் பெற வேண்டுமென்று விரும்புகிறோம். நாட்டு மக்களின் உள்ளத்தில் நன்றாக வேரூன்றி அவர்களுடைய அபிமானத்தைப் பெற்றுத் தழைத்தோங்கி வளர வேண்டும் என்று விரும்புகிறோம். காங்கிரஸைச் சோஷலிஸ்ட் பாதையிலிருந்து அதிகம் விலகிச் செல்லாமல் பார்த்துக் கொள்வதற்கும், காங்கிரஸ் தன் கடமையில் தவறி விட்டால், அதன் ஸ்தானத்தில் அரசாங்கத்தையே ஏற்று நடத்துவதற்கும் தகுதி பெறும் அளவில் சோஷலிஸ்ட் கட்சியானது புனர்நிர்மாணம் பெற்று வலிமை அடைய வேண்டும் என்றும் விரும்புகிறோம்.

இலங்கையில் பரபரப்பு

இலங்கையிலிருந்து மிக முக்கியமான செய்திகள் சென்ற வாரத்தில் கிடைத்திருக்கின்றன.

ஆனால் அந்த முக்கியமான செய்திகளை அனுப்புவோர் இருவித மனோபாவங்களைக் கொண்டவர்களாகப் பிரிந்து நிற்கிறார்கள்.

"இலங்கையில் இந்தியர் பிரச்னை திருப்திகரமாகத் தீரும் கட்டத்தை நெருங்கி விட்டது. இலங்கை சர்க்காருக்கும் இந்திய சர்க்காருக்கும் சமரச உடன்பாடு ஏற்பட்டு விட்டது. அதன்படி இலங்கைத் தோட்டங்களில் வேலை செய்யும் இந்தியத் தொழிலாளி சகோதரர்கள் தாங்கள் இழந்துவிட்ட பிரஜா உரிமையையும் வாக்குரிமையையும் திரும்பப் பெற்று விடுவார்கள்!" என்று ஒரு சார்பினரான நிருபர்கள் செய்தி அனுப்பியிருக்கிறார்கள்.

மற்றொரு சார்பினரான நிருபர்களோ, "அநியாயம்! அநீதி! மூன்றரை லட்சம் இந்தியர்களுக்கு இலங்கையில் வசிக்கும் உரிமையே பறிபோய் விடப் போகிறது!" என்று சோகத் தொனியுடன் செய்தி அனுப்புகிறார்கள்.

முன்னவர்கள், இந்திய ஹை கமிஷனர் ஸ்ரீ ஸி.ஸி. தேஸாய் இந்த அபாரமான காரியத்தைச் சாதித்து விட்டார் என்று பாராட்டுகிறார்கள்.

பின்னவர்கள், "ஸ்ரீ ஸி. ஸி. தேசாய் மூன்றரை லட்சம் இந்தியர்களுக்குத் துரோகம் செய்து விட்டார்!" என்று சாபம் கொடுக்கிறார்கள்.

ஸ்ரீ ஸி. ஸி. தேசாய் எப்படிப் பட்டவரா யிருந்தாலும், பண்டித ஜவாஹர்லால் நேரு இந்தியர்களுக்குத் துரோகம் இழைக்கும் ஒப்பந்தம் எதிலும் கையெழுத்திடமாட்டார் என்பது நமது பரிபூரண நம்பிக்கை.

ஜவாஹர்லால்ஜி ஓர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டாரானால், அது மொத்தத்தில் இந்தியர்களுக்கு அநுகூலமானதாயும் தர்ம நியாயமான நிபந்தனைகளைக் கொண்டதாயும் இருக்கத்தான் வேண்டும்.

சமரச ஒப்பந்தம் என்று ஏற்படும்போது, சிற்சில அம்சங்களில் இரு சாராரும் விட்டுக் கொடுக்கும்படிதான் இருக்கும்.

அவ்விதமே, புதிதாக ஏற்படப் போகும் ஒப்பந்தமும் ஓரளவு இரு சாராரும் விட்டுக் கொடுக்கும் ஒப்பந்தமா யிருக்குமே தவிர, இந்தியர்களுக்குத் துரோகம் செய்யும் ஒப்பந்தமா யிருக்க முடியாது; இலங்கை சர்க்காரின் பிடிவாதத்தை ஊர்ஜிதம் செய்யும் ஒப்பந்தமாகவும் இருக்க முடியாது.

இன்று வரையில் (அதாவது மே 25வரையில்) வந்திருக்கும் செய்திகளிலிருந்து புதிய ஒப்பந்தத்தின் நிபந்தனைகளைப் பற்றி நாம் ஊகித்து அறியக்கூடியவையாக இருப்பது இவைதான்.

1. இலங்கைத் தோட்டத் தொழிலாளிகளின் பிரஜா உரிமைக் கோரிக்கை பெரும்பாலும் அங்கீகரிக்கப்படும். சுமார் ஆறு லட்சம் இந்தியர்கள் இலங்கைப் பிரஜைகளாக ஒப்புக் கொள்ளப் படுவார்கள்.

2. மற்றுமுள்ள மூன்றரை லட்சம் இந்தியர்கள், (கொழும்பு முதலிய நகரங்களில் வியாபாரத் துறைகளில் ஈடுபட்டுள்ளவர்களும், மாதச் சம்பளம் தினச் சம்பளம் பெற்றுப் பலவித அலுவல்கள் செய்து கொண்டிருப்பவர்களும்) பிரஜா உரிமை பெறமாட்டார்கள். அதுமட்டுமல்ல; அவர்கள் இலங்கையில் வசித்துத் தொழில் செய்வதற்கு வேண்டிய வாசபெர்மிட்டும் புதுப்பிக்கப்பட மாட்டாது. சில வருஷ காலத்தில் அவர்கள் படிப்படியாகத் தாய் நாட்டுக்குத் திருப்பி அனுப்பப் படுவார்கள்.

முதல் நிபந்தனை உண்மையாகுமானால், அதற்காக நாம் மகிழ்ச்சி அடையத்தான் வேண்டும். ஏனெனில் இலங்கைத் தீவின் செல்வ வளம் பெருகுவதற்குக் காரணமா யிருந்தவர்கள் தோட்டத் தொழிலாளி இந்தியர்கள். இலங்கை சர்க்காரின் கோரிக்கைப்படி இந்திய சர்க்காரால் அனுப்பப் பெற்றவர்கள். தலைமுறை தலைமுறையாக இலங்கையில் வாழ்ந்து வருகிறவர்கள். தாய் நாட்டில் வீடு வாசல்கள் இல்லாதவர்கள். இவர்களுக்கு இலங்கைப் பிரஜா உரிமை அளிக்க மறுத்தது சர்வ தேசிய தர்மங்களுக்கே விரோதமான அநீதியாகும். அந்த அநீதி நிவர்த்தி செய்யப்பட்டால், அது குறித்து நாம் மகிழ்ச்சியடையாமலிருக்க முடியாது.

அடுத்தபடி, கொழும்பு முதலிய நகரங்களில் வசிக்கும் இந்திய வியாபாரிகள் முதலியோர் இந்தியாவுக்கு விரட்டியடிக்கப்பட்டால், அவர்கள் பெருத்த கஷ்ட நஷ்டங்களை அடைவார்கள் என்பது உண்மைதான். அது மட்டுமன்று; அவர்கள் திரும்பி வந்து சேரும் இடங்களிலும் கஷ்டம் ஏற்படும். அவர்களுக்கு அடைக்கலம் தந்து ஜீவனோபாயம் அளிக்கும் கடமை இங்குள்ள சர்க்கார்களுக்கு ஏற்படும். அந்தக் கடமையை நிறைவேற்றுவது எளிதாகவும் இராது.

இப்படியெல்லா மிருந்தபோதிலும் இலங்கையிலுள்ள இந்திய வியாபாரிகளும் பற்பல அலுவல்கள் பார்க்கும் இந்தியர்களும் பரபரப்பு அடையக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறோம்.

"ஸ்ரீ ஸி. ஸி. தேஸாய் இவ்வளவு அவசரப்பட்டிருக்க வேண்டியதில்லை; இன்னும் கொஞ்சம் போராடிப் பார்த்திருக்கலாம்" என்று வேணுமானால் சொல்லலாம். அவர் இந்தியர்களுக்குத் துரோகம் செய்து விட்டார் என்று புகார் செய்வது முறையாகாது.

"பெரும்பாலான தோட்டத் தொழிலாளி இந்தியர்களின் உரிமையை நிலைநாட்டும் நல்ல

நோக்கத்துடன் மற்ற இந்தியர்களின் உரிமை களைத் தியாகம் செய்து விட்டார்" என்றுதான் சொல்ல வேண்டும்.

அத்தகைய நிபந்தனைகள் அடங்கிய ஒப்பந்தத் தில் ஜவாஹர்லால் கையெழுத்திட்டு முடித்தார், அவருடைய மனப்பாங்கும் அவ்விதம் இயங்கி யிருக்கிறது என்றே கருத வேண்டும்.

தற்சமயம், கொழும்பிலுள்ள இந்திய வியா பாரிகள் முதலியோருக்கு விரோதமாக முடிவா னுல்கூட, அவர்கள் பீதியும் பரபரப்பும் அடைய வேண்டியதில்லை. ஏனெனில் இந்திய வியாபாரிகள் ஏற்கெனவே ஸ்ரீ சேனாயகா சர்க்காருக்கும், அந்த சர்க்காரை நடத்தும் யூனியனிஸ்ட் கட்சி யாருக்கும் பல வகைகளில் உதவி புரிந்திருக் கிருர்கள். "இந்தியத் தோட்டத் தொழிலாளி களின் உரிமைக்குத் துரோகம் செய்து விட் டார்கள்" என்று சிலர் குற்றம் சுமத்தும் அளவுக்கு உதவி செய்திருக்கிருர்கள். அதை யெல்லாம் சேனாயகா சர்க்காரும் அவருடைய கட்சியினரும் அடியோடு மறந்திருக்க மாட் டார்கள். ஆதலின் தற்சமயத்துக்கு என்னவித மான முடிவு ஏற்பட்டாலும், அதுவே முடிந்த முடிவு என்று கொள்ள வேண்டியதில்லை. வருங் காலத்தில் ஸ்ரீ சேனாயகா சர்க்காரே இந்தியவியா பார சமூகத்தினருக்கு வாச உரிமைப் பெர்மிட் வழங்க முன் வரக்கூடும் என்று நம்புகிறோம்.

ஐந்து வருஷத் திட்டத்தில் அதிசய சாதனை!!

நேரு சர்க்கார் மேற் கொண்டிருக்கும் ஐந்து வருஷத் திட்டத்தில் எத்தனையோ காரியங்கள் அடங்கியிருக்கின்றன. அவை யெல்லாம் ஐந்து வருஷத்திற்குள் நிறைவேறி விடுமா என்று பல ரும் ஐயுறுகிருர்கள்.

ஆனல் ஐந்து வருஷத் திட்டத்தில் அடங்கி யுள்ள ஒரே ஒரு திட்டம் மட்டும் இரண்டே வரு ஷத்துக்குள் நிறைவேறி விட்டது! திட்டத்தில் கண்ட அதிகபட்ச வரம்புக்கு மேலேயும் உற்பத்தி போய் விட்டது!

அந்த அதிசயமான சாதனை என்ன என்று தெரியுமா! ஆலைகளில் துணி உற்பத்திதான்!

இந்தியாவிலுள்ள துணி ஆலைகள் ஐந்து வருஷ காலத்திற்குள் இவ்வளவாகத் துணி உற்பத்தியை அதிகரிக்க வேண்டும் என்று ஐந்து வருஷத் திட்டம் வகுத்தவர்கள் சொன்னுர்கள்.

அந்த அளவுக்கு மேல் அதிகமாகவே கடந்து போன இரண்டு ஆண்டுகளில் ஆலைத் துணி உற் பத்தி அதிகரித்து விட்டதாம்! "ஹிந்து" பத்திரி கையின் மே மாதம் பதினெட்டாம் தேதி இதழில் இந்த அதிசயமான செய்தி பிரசுரமாகி யிருக்கிறது.

ஆனல், நூல் உற்பத்தி மட்டும் அபிவிருத்தி அடையவில்லை! அபிவிருத்தி அடையாததோடு உற்பத்தி குறைந்தும் இருக்கிறதாம்.

இந்த இரண்டு செய்திகளிலிருந்தும் வெளியா கும் உண்மை என்ன வென்பதை நேயர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டுகிறோம்.

இரண்டு செய்திகளும் கைத்தறித் தொழில் அடியோடு அழிந்து போகும் நோக்கத்துக்கு உகந்த காரியங்கள்தான்.

நூல் உற்பத்தி மொத்தத்தில் குறைந்திருக் கிறது; ஆலைத் துணி உற்பத்தியோ அதிகமாகி யிருக்கிறது. ஆகவே, கைத்தறிக்குப் போக வேண்டிய நூலில் ஒரு பெரும் பகுதியை ஆலை முதலாளிகள் கபளீகரம் செய்து விட்டார்கள்.

ஆலைப் பகாசுரன் அடுத்த மூன்று வருஷத்தில் இன்னும் எவ்விதம் வளர்ந்து பருப்பானே தெரி யாது. ஐந்து வருஷத் திட்டத்தில் கண்டதைக் காட்டிலும் ஐந்து மடங்கு அதிக துணி உற்பத்தி செய்தாலும் நாம் அதிசயப்படுவதற்கில்லை.

இதன் விளைவு என்ன! கைத்தறித்தொழிலை நம்பி யுள்ள நாற்பது லட்சம் குடும்பங்களும் தலையிலே கையை வைத்துக் கொள்ள வேண்டியதுதான்!

இதை இன்னமும் இந்திய சர்க்கார் உணராமல் பழைய போக்கிலே போய்க்கொண்டிருப்பதுதான் ஆச்சரியத்திலும் ஆச்சரியமா யிருக்கிறது.

* * *

காங்கிரஸ் காரியக் கமிட்டியார் சமீபத்திலே கூடி, "வேலையில்லாத் திண்டாட்டத்தை எல்லா முனைகளிலும் தாக்கிப் போராட வேண்டும்; இதற்காகக் குடிசைத் தொழில்களைப் பெருவாரி யாகப் பெருக்க வேண்டும்" என்று தீர்மானித் திருக்கிருர்கள்.

கைத்தறித் தொழிலைப் போல் இரண்டு கோடி ஜனங்களுக்கு ஜீவனம் அளிக்கக்கூடிய வேறொரு கைத்தொழிலை யாரேனும் சொல்ல முடியுமா! அதில் பத்தில் ஒரு பங்குக்குக் குறைவான மனிதர் களுக்கு வேலை அளிக்கக்கூடிய குடிசைத் தொழில் தான் வேறு ஒன்று உண்டா!

அப்படிப்பட்ட கைத்தறித் தொழிலை அழியும் படி விட்டு விட்டு, கோழி வளர்த்தல், தேனீ வளர்த்தல் முதலியவற்றைக் குடிசைத்தொழில்கள் என்று சொல்லிப் பிரமாதப் படுத்துவதினுல் என்ன பயன் விளையும்! எத்தனை பேர் எத்தனை தேனீக்களை வளர்க்க முடியும்! எவ்வளவு தேன் உற்பத்தியாக முடியும்! உற்பத்தியாகும் தேனை வாங்குவோர் யார்!

காங்கிரஸ் பொதுக் காரியதரிசி ஸ்ரீ அகர்வால் சமீபத்தில் தமிழ் நாட்டில் சுற்றுப் பிரயாணம் செய்தபோது, கைத்தறித் தொழிலைக் காப்பதன் அவசியத்தை உணர்ந்து பேசியிருப்பது குறித்து மகிழ்ச்சி அடைகிறோம்.

காங்கிரஸ் காரியக் கமிட்டி அதன் பூரண செல் வாக்கையும் கைத்தறித் தொழிலுக்குச் சாதகமா கப் பயன்படுத்த வேண்டும் என்று கோருகிறோம்.

இது நல்ல காரியம்!

"உலகம் பலவிதம்" என்பது பழமொழி. அரசியல், சமூகத் துறைகளில் அபிப்பிராய வேற் றுமை இயல்பானது. வெவ்வேறு கொள்கை யுடையவர்கள் தனித்தனிக் கட்சிகள் அமைத்து இயங்குவதும் தவிர்க்க முடியாததுதான்.

ஆனல் இவ்விதம் வேறுபட்டு நிற்பவர்கள் ஏதாவது ஒரு பொதுக் காரியத்தில் ஒத்துழைத்து வேலை செய்யக் கூடுமானல், அந்தச் சந்தர்ப்பத்தில் ஒன்று சேருவது உயர்ந்த மனிதப் பண்பாட்டுக்கு ஒரு சிறந்த அறிகுறியாகும்.

தமிழ் நாட்டில் அவ்விதம் பற்பல கொள்கையினரும் கட்சியாரும் ஒத்துழைக்கக் கூடிய துறை தமிழ் வளர்ச்சி இயக்கம் என்பதை இந்த இதழ்களில் பல முறை வற்புறுத்தி யிருக்கிறோம்.

தற்சமயம் அத்தகைய ஒத்துழைக்கக் கூடிய துறை வேறொன்றும் ஏற்பட்டிருக்கிறது. அது தமிழ் நாட்டுக் கைத்தறி காரர்களின் பரிதாப நிலைமைதான். கைத்தறித் தொழிலுக்கு ஆக்கம் அளிப்பதிலும் லட்சக் கணக்கான கைத்தறியாளர் குடும்பங்களைப் பாதுகாப்பதிலும் எல்லாரும் சேர்ந்து ஒத்துழைப்பது மிக்க அவசியம்.

திராவிட முன்னேற்றக் கழகத்தினர் இந்தத் தொண்டில் ஈடுபட்டிருப்பதை நாம் இரண்டாம் முறையாக இப்போது பாராட்டுகிறோம். அதற்கு ஒரு சந்தர்ப்பமும் ஏற்பட்டிருக்கிறது.

புயலினால் கஷ்ட நஷ்டங்களை அடைந்தவர்களின் உதவிக்காகத் திராவிட முன்னேற்றக் கழகத்தார் பிரயத்தனம் தொடங்கினார்கள். அதன் பலன் இன்னதென்பது சென்ற வாரத்திலேதான் தெரிந்தது.

சுமார் இருபத்தேழாயிரம் ரூபாய் பெறுமானமுள்ள கைத்தறித் துணிகளை மேற்படி கழகத்தார் சேகரித்திருக்கிறார்கள். புயலில் கஷ்டப்பட்டவர்களுக்குச் சென்னை சர்க்கார் மூலம் உதவ முன் வந்திருக்கிறார்கள்.

சிறிது முன்னாலேயே இதைச் செய்திருந்தால் நன்றா யிருந்திருக்கும். ஆயினும், காலப் பிற்பாடு ஆகிவிட்ட போதிலும், நல்ல காரியத்தின் சிறப்புக் குன்றி விடாது.

புயலில் கஷ்டப்பட்டவர்களுக்குக் கைத்தறித் துணி விநியோகிப்பதின் மூலம் இருவகையான உதவிகளைத் திராவிட முன்னேற்றக் கழகம் செய்கிறது. கஷ்டப்பட்டவர்களுக்கு உடுத்திக் கொள்ளத் துணி கிடைப்பது பெரிய உதவி.

அதைக் காட்டிலும் கைத்தறிகளில் உற்பத்தியாகும் துணிகள் செலவாவது பெரிய உதவி.

தமிழ் நாட்டில் தற்சமயம் பஞ்சத்திலடிபட்டவர்களில், கைத்தறியாளர்கள் மிகப் பரிதாபமான நிலையில் இருக்கிறார்கள். அவர்கள் உழைத்துப் பாடுபடத் தயாரா யிருக்கிறார்கள்; ஆனால் உழைப்பதற்கு வேலை இல்லாமல் தவிக்கிறார்கள்.

முன்னெல்லாம், கைத்தறித் தொழிலாளிகள் தினம் ஒன்றுக்கு இரண்டு ரூபாய், மூன்று ரூபாய் வரையில் சம்பாதிப்பதுண்டு.

நெசவுத் தொழிலுக்குப் பெயர்போன சேலம் நகரத்தில், நெசவுத் தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்கும் தினங்களில், தினம் அரை ரூபாய்தான் கூலி கிடைக்கிறது என்று அறிகிறோம். இது எவ்வளவு பரிதாபமான விஷயம்! அந்த எட்டணாக் கூலி யுள்ள வேலையும் நிரந்தரமாகக் கிடைப்பதில்லை; எல்லாருக்கும் கிடைப்பதில்லை.

இந்த நிலையில் கைத்தறித் துணிக்குப் பிரசாரம் செய்து, கைத்தறித் துணி செலவழிவதற்கு உதவி செய்வதைப் போல், ஜீவகாருண்யத்துக்கும் தேச பக்திக்கும் உகந்த காரியம் வேறொன்று இருக்க முடியுமா!

திராவிட முன்னேற்றக் கழகம் மேலும் இந்தப் பணியில் தீவிரமாக ஈடுபட வேண்டும் என்று விரும்புகிறோம்.

மண் பிள்ளையாரைச் செய்து உடைத்தெறிந்து சகோதர மனிதர்களுடைய மனதைப் புண்படுத்தும் காரியத்தைக் காட்டிலும், கைத்தறித் தொழிலுக்கு எந்த விதத்திலேனும் உதவுவது ஆயிரம் மடங்கு சிறந்தது என்பதில் சந்தேகமில்லை.

ஆஸ்திகர்கள் ஆத்திரம் அடையவேண்டாம்!

மண் பிள்ளையார்களைச் செய்து பகிரங்கமாக உடைத்தெறியும் கைங்கரியம் தமிழகத்தில் மே மீ 27உ சிற்சில இடங்களில் நடந்திருக்கக் கூடும். (அதைப் பற்றிய செய்திகள் வருவதற்கு முன்னால் இக் குறிப்பு எழுதப் படுகிறது.)

இந்தச் சிறுபிள்ளைத் தனமான காரியத்தைப் பற்றி ஆஸ்திக மகாஜனங்கள் வீண் ஆத்திரம் அடையக் கூடாது என்பது நம் வேண்டுகோள்.

இரணிய கசிபுவின் காலத்திலிருந்து நடந்து வந்திருக்கும் சம்பவம்தான்; புதிது ஒன்றுமில்லை.

"அவனன்றி ஓரணுவும் அசையாது" என்பது ஆஸ்திகத்தின் அடிப்படையான தத்துவம்.

"நீ சொன்ன சொல்லினும் உளன்!"

என்று இரணியனைப் பார்த்துப் பிரஹ்லாதன் கூறினான் அல்லவா! அதாவது, "நீ சற்று முன் 'நாராயணன் இல்லை' என்று சொன்னாயே! அதை நீ சொல்லும்படி செய்தவனும் நாராயண மூர்த்திதான்!" என்றான் பிரஹ்லாதன்.

அதுபோலவே, மண் பிள்ளையாரைப் பிடித்து உடைக்கும்படியான புத்தியைச் சிலருக்கு அளித்திருப்பவரும் கடவுள்தான்.

என்ன நோக்கத்துடன் ஆண்டவன் இந்தத் திருவிளையாடலைப் புரிகிறார் என்று யார் சொல்ல முடியும்!

விநாயகருடைய உருவத்தைச் செய்யும்போது, தொந்தி வைத்து, துதிக்கை வைத்து, மூஞ்சூறு வாகனம் வைத்து, தலையில் கிரீடம் வைத்து, விநாயகர் என்று பார்த்தவுடன் தெரியும் முறையில் செய்தாக வேண்டும். சிரத்தையுடனே செய்தால்தான் விநாயகரின் உருவம் நல்ல முறையில் அமையக் கூடும்.

விநாயக பூஜையன்று ஆஸ்திகர்கள் என்ன செய்கிறார்கள்? மண் பிள்ளையாரை வைத்துப் பூஜை செய்கிறார்கள். மறுநாள் ஆற்றிலே, குளத்திலே கொண்டு போய்ப் போடுகிறார்கள். பிள்ளையார் தண்ணீரில் கரைந்து அடியில் சென்று மண்ணோடு கலந்து விடுகிறார்.

மண் பிள்ளையாரை உடைப்பவர்களும் கிட்டத்தட்ட இதைத்தான் செய்கிறார்கள்! தண்ணீரில் கரைந்து மண்ணோடு கலப்பதற்குப் பதிலாக நேர்முகமாகவே உடைத்து மண்ணோடு சேர்க்கப் போகிறார்கள்.

மனப்பான்மையிலேதான் வேற்றுமை.

மனிதனுடைய மனப்பாங்கு மிக விசித்திரமானது. அன்பும் துவேஷமும், பக்தியும் பகைமையும் ஒரே உணர்ச்சியின் இரண்டு பக்கங்கள் என்று அறிஞர்கள் கூறுகிறார்கள்.

மண் பிள்ளையார் செய்யத் தொடங்குவோர் முதலில் என்ன மனப் பான்மையுடன் தொடங்கிய போதிலும், இறுதியில் அவர்களே விநாயகக் கடவுளின் பரம பக்தர்களாகக் கூடும்.

இறைவனுடைய சித்தத்தையும், திருவிளையாடல்களையும், எந்த நோக்கத்தை எந்த முறையில் கடவுள் சாதித்துக் கொள்கிறார் என்பதையும் திட்டமாக யாரால் அறிந்து கூற முடியும்!

சிறுத்தொண்டர் தினத்தில் அன்னதானம்

○ ● ○

தமிழ் நாட்டின் மடாதிபதிகள் பலரும் இக்காலில் தமிழுக்கும் சமயத்துக்கும் சிறந்த தொண்டுகள் பல புரிந்து வருகிறார்கள். அவற்றில், திருப்பனந்தாள் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் செய்யும் தொண்டுகள் தனிச் சிறப்பு வாய்ந்து விளங்குகின்றன. அந்தந்தச் சமய சந்தர்ப்பங்களுக்கு ஏற்ப மிகப் பொருத்தமான கைங்கரியங்களை மேற்படி ஆதீன கர்த்தர் அவர்கள் செய்து வருகிறார்கள்.

உதாரணமாக, சில நாட்களுக்கு முன்பு திருச்செங்காட்டாங்குடி கிராமத்தில் சிறுத்தொண்டர் திருநாள் நடைபெற்றது. அச் சந்தர்ப்பத்தில் ஏழை எளியவர்களுக்குச் சிறந்த முறையில் அன்னதானம் வழங்கத் திருப்பனந்தாள் ஆதீன கர்த்தர் அவர்கள் ஏற்பாடு செய்திருந்தார்கள்.

சிறுத்தொண்டர் தினத்தில் அன்னதானம் வழங்குவது எவ்வளவு பொருத்தமான ஏற்பாடு என்று சொல்ல வேண்டியதில்லை.

சிறுத்தொண்டர் சிவனடியார் ஆவதற்கு முன்னால் காஞ்சி பல்லவ சக்கரவர்த்தியின் சேனாதிபதியாக இருந்தார். அந்த நாளில் சளுக்க மன்னனுடைய படைகள் தமிழ் நாட்டுக்குப் படையெடுத்து வந்து பல இன்னல்களை விளைவித்தன. இதற்குப் பழி வாங்கும் பொருட்டுச் சேனாதிபதி பரஞ்சோதியார் பெரும் சைன்யத்துடன் வாதாபி நகருக்குச் சென்று சளுக்க மன்னன் புலிகேசியைப் போரில் புறங்கண்டு வாதாபி நகரையும் அழித்துவிட்டு வந்தார்.

இச் சரித்திரப் பிரசித்தி பெற்ற நிகழ்ச்சிகள் நடந்த காலத்தில், தமிழ் நாட்டில் மழையின்மையும் சேர்ந்து கொண்டது. ஆதலின் பஞ்சக் கொடுமை மிகுந்திருந்தது. மக்கள் பட்டினியினால் பட்ட கஷ்டங்களைப் பரஞ்சோதியார் நேரில் கண்டு அறிந்திருந்தார்.

ஆதலின் சேனாதிபதி பதவியை விட்டுச் சிவனடியார் ஆனபிறகு, அன்னதானம் செய்து மக்களின் பட்டினிப் பிணியைத் தீர்ப்பது போன்ற சிவகைங்கரியம் வேறில்லை என்று தீர்மானித்தார். ஆதலின், பஞ்சம் இல்லாத காலத்திலே கூட தினந்தோறும் யாருக்காவது அன்னதானம் செய்யாமல் தாம் உணவு அருந்துவதில்லை யென்ற விரதத்தைக் கைக்கொண்டிருந்தார்.

இத்தகைய மகானுடைய திருநாளைக் கொண்டாடும் தினத்தில், அவர் வாழ்ந்திருந்த இடத்தில், ஏழைகளுக்கு அன்னதானம் செய்யுமாறு திருப்பனந்தாள் தம்பிரான் அவர்கள் ஏற்பாடு செய்திருந்தது எவ்வளவு சிறப்புடைய திருப்பணி என்று கூறவும் வேண்டுமோ!

வள்ளுவர் திருநாளிலும் பின்பற்றலாம்

○ ● ○

மே மாதம் 29வ. வைகாசி அனுட தினத்திலும் அதற்கு முன்பும் பின்பும் தமிழ் நாட்டில் பல இடங்களிலே இவ்வாண்டு திருவள்ளுவர் திருநாள் கொண்டாடப்படுவதை அறிந்து மிக்க மகிழ்ச்சி அடைகிறோம்.

மயிலாப்பூரில் உள்ள திருவள்ளுவர் ஆலயத்தில் ஐந்து தினங்கள் ஜாம் ஜாம் என்று திருவிழா நடைபெற்றது. முதன் மந்திரி ராஜாஜி அவர்களும் மற்றும் பல பிரமுகர்களும் தமிழ்ப் புலவர் பெருமக்களும் இந்த விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்.

பெரியோர்களின் விழாக்களைக் கொண்டாடுவது நாட்டின் முன்னேற்றத்துக்கு எவ்வளவு அவசியமானது என்பது குறித்துப் பல முறை இந்த இதழில் எழுதப்பட்டிருக்கிறது.

ஆயினும், பெரியோர்களின் விழாக்களைக் கொண்டாடும்போது அந்தந்தப் பெரியோர்களின் உபதேசங்களைக் காரியத்தில் கடைப்பிடித்துக் காட்டும் முறையில் சில பணிகளைச் செய்வதும் அவசியமானது.

வள்ளுவர் அருளிய குறள் ஒவ்வொன்றையும் மறை மொழியாகக் கடைப்பிடிக்க வேண்டியது நம் கடமை. எனினும், இவ்வாண்டில் நமது தமிழ் நாட்டின் நிலைமைக்குப் பொருத்தமாகக் காரியத்தில் செய்து காட்டவேண்டிய குறள்,

> "பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
> தொகுத்தவற்றுள் எல்லாம் தலை"

என்பதாகும். தம்மிடம் உள்ள உணவைப் பகுத்தளித்துப் பிற உயிர்களைக் காப்பாற்றுவதைப் போன்ற தலைசிறந்த பணி வேறு ஒன்றுமே யில்லை யென்று வள்ளுவர் பெருமானே கூறியிருக்கிறார். அதிலும், மழையின்மையால் பசிப்பிணி மிகுந்திருக்கும் இந்த ஆண்டில் அந்தத் திருப்பணி எவ்வளவு மேன்மையானது என்று சொல்லவேண்டிய அவசியம் இல்லையல்லவா!

சென்னை நகரில் சென்ற ஆண்டு பாரதியார் விழா சிறப்பாக நடைபெறுவதற்குப் பேருதவி செய்த தேசிய வாலிபர் காங்கிரஸ் ஸ்தாபனத்தார் மே மாதம் 31வ. ஞாயிற்றுக்கிழமை திருவள்ளுவர் தினத்தைக் கொண்டாடுகிறார்கள். மாலையில் கோகலே மண்டபத்தில் சொற்பொழிவுகளுக்கும் இசை நிகழ்ச்சிக்கும் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அத்துடன் அன்று காலை 9 மணிக்கு ஸ்ரீ கச்சாலீஸ்வரர் கோயில் மைதானத்தில் ஏழைகளுக்கு அன்னமளிப்புக் கைங்கரியமும் செய்யத் தேசிய வாலிபர் காங்கிரஸார் திட்டமிட்டிருப்பதைப் பெரிதும் பாராட்டுகிறோம்.

இம்மாதிரி ஆண்டுதோறும் தமிழ் நாட்டில் பல இடங்களிலும் திருவள்ளுவர் தினத்தை யொட்டி அன்னதான கைங்கரியம் நடைபெறும் செய்திகளைக் கேட்டு மகிழ்ச்சியடைய விரும்புகிறோம்.



அத்தியாயம் 18

ஏமாந்த யானைப் பாகன்

"சந்தர்ப்பம் என்பது கடவுளுக்கு ஒரு புனை பெயர்" என்பதாகத் தற்கால அறிஞர் ஒருவர் கூறியிருக்கிறார். கடவுள் தாம் செய்யும் காரியத்தைத் தாம் செய்தது என்று காட்டிக் கொள்ள விரும்பாதபோது "சந்தர்ப்பம்" என்னும் புனை பெயரைச் சூட்டிக் கொள்ளுகிறாராம்! உலக சரித்திரத்தில் மிகப் பிரசித்தி பெற்ற வீரர்கள், அரும் பெரும் காரியங்களைச் சாதித்த மகான்கள், — இவர்களுடைய வரலாறுகளைப் பார்க்கும்போது, சந்தர்ப்பம் இவர்களுக்கு மிக்க உதவி செய்திருக்கிறது என்பதை அறியலாம். அவர்களிடம் கடவுள் விசேஷ கருணை காட்டி அத்தகைய சந்தர்ப்பங்களை அனுப்புவதாகச் சிலர் கூறுவர். அவரவர்கள் பிறந்த வேளையின் மகிமை, ஜாதகத்தின் பலன், பிரம்மா எழுதிய எழுத்து, பூர்வஜன்ம சுகிர்தம், — என்றெல்லாம் வாழ்க்கையில் ஏற்படும் அநுகூலமான சந்தர்ப்பங்களுக்குக் காரணங்கள் கற்பிப்போரும் உண்டு.

நம் காலத்தில் காந்தி மகான் தென்னாப்பிரிக்கா போவதற்கு ஒரு சந்தர்ப்பம் ஏற்படாதிருந்தால், அவர் மனித குல சிரேஷ்டர் என்றும் அவதார புருஷர் என்றும் மக்களால் போற்றப்படும் நிலையை அடைந்திருக்க முடியுமா?

சந்திரகுப்தன், விக்கிரமாதித்தன், ஜூலியஸ் ஸீஸர், நெப்போலியன், டியூக் ஆப் வில்லிங்டன், ஜார்ஜ் வாஷிங்டன், ஜோசப் ஸ்டாலின் போன்ற மகா வீரர்களின் வாழ்க்கையில் சந்தர்ப்பங்கள் எவ்வளவோ உதவி செய்திருக்கின்றன என்பதை அறிந்திருக்கிறோம்.

இதிலிருந்து, ஆண்டவன் அவ்வளவு பாரபட்சமுள்ளவர் என்று முடிவு கட்டுதல் தவறாகும். சரித்திரத்தில் புகழ் பெற்ற மகான்களையும் வீரர்களையும் தவிர இன்னும் எத்தனையோ பேருக்கும் ஆண்டவன் சந்தர்ப்பங்களை அனுப்பிக் கொண்டுதானிருக்கிறார்.

ஆனால் அந்தச் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக் கொள்வது மனிதனுடைய சமயோசித அறிவையும், சரியான சமயத்தில் சரியான முடிவு செய்யும் ஆற்றலையும் பொறுத்தது. சந்தர்ப்பங்களைக் கை நழுவ விடுகிறவர் கோடானுகோடிப் பேர் பெயரும் புகழும் இல்லாமல் சாதாரண வாழ்க்கை வாழ்ந்து உலகை விட்டுச் செல்லுகிறார்கள். சந்தர்ப்பங்களைச் சரிவரப் பயன்படுத்திக் கொள்கிறவர்கள் சரித்திரத்தில் தங்கள் பெயரை நிலைநாட்டி விட்டுச் செல்கிறார்கள்.

ஒரே நாளில், ஒரே நேரத்தில் பிறக்கிறவர்களின் வாழ்க்கைத் தரம் எவ்வளவோ வித்தியாசமாயிருப்பதற்குக் காரணம் வேறு என்ன சொல்ல முடியும்?

* * *

இளவரசர் அருள்மொழி வர்மரின் வாழ்க்கையில் இப்போது அத்தகைய

சந்தர்ப்பம் ஒன்று நேர்ந்தது. யானை தன் அருகில் நெருங்கிய யானைப் பாகனைத் தூக்கி எறிந்தபோது, "யானைக்கு மதம் பிடித்து விட்டது!" என்ற கூச்சல் கிளம்பியபோது, அந்தச் சந்தர்ப்பம் அவரை வந்தடைந்தது. அதை அவர் பயன் படுத்திக் கொள்ளாமல் விட்டிருந்தால், இந்த வரலாறு வேறு விதமாகப் போயிருக்கும். தமிழ் நாட்டின் சரித்திரத்தில் இராஜராஜ சோழர் உன்னத ஸ்தானத்துக்கு வந்திருக்கவும் முடியாது.

அதிர்ஷ்ட வசமாக அந்தச் சந்தர்ப்பத்தைத் தெரிந்து கொண்டு அதை உபயோகப்படுத்திக் கொள்ளும் சமயோசித அறிவாற்றல் அவரிடம் இருந்தது. படகோட்டி முருகய்யன் முதல் நாள் கூறிய வரலாற்றை நினைவு படுத்திக் கொண்டார். யானையை நெருங்கி வந்தவன் உண்மையான யானைப்பாகன் அல்ல. ஏதோ தீய நோக்கத்துடன் வந்தவன், அதனாலேதான் யானை அவனைத் தூக்கி எறிந்திருக்கிறது என்பதையும் ஒரு நொடியில் ஊகித்துக் கொண்டார். வந்தவன் யார், எதற்காக வந்தான் என்பதை யெல்லாம் அச்சமயம் கண்டு பிடிக்க முயன்றால், கிடைத்த சந்தர்ப்பம் தவறிப் போய்விடும். "யானைக்கு மதம் பிடித்து விட்டது!" என்ற கூச்சலினால் மக்களிடையே உண்டான குழப்பத்தைப் பின்னர் பயன்படுத்திக் கொள்ள முடியாது. அந்த ஜனக் கூட்டத்தினிடையிலிருந்து தப்பிச் சென்று கூடிய விரைவில் தஞ்சையை அடைவது அச்சமயம் அவருடைய பிரதான நோக்கமாயிருந்தது. அந்த நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ள இதைக் காட்டிலும் சரியான சந்தர்ப்பம் கிடைக்கப் போவதில்லை.

ஆதலின், முருகய்யனைத் தம் அருகில் அழைத்து, அவன் காதோடு ஏதோ சொல்லிவிட்டு, அவன் தோள் மீது ஏறி யானையின் மீது தாவினார். அப்படித் தாவும்போதே யானை மேலிருந்த அம்பாரியைத் தட்டிவிட்டார். அம்பாரி கீழே விழுந்து உருண்டது. பின்னர், யானையிடத்திலும் அதன் பாஷையில் ஏதோ சொன்னார். உடனே யானை பிய்த்துக் கொண்டு கிளம்பியது. முன்போல, பயங்கரமான குரலில் பிளிறிக் கொண்டே விரைவாக நடந்தது. சிறிது நேரத்துக்கெல்லாம் ஓடவே தொடங்கி விட்டது.

அதே சமயத்தில் முருகய்யன் "ஐயோ! யானைக்கு மதம் பிடித்து விட்டது! ஓடுங்கள்! ஓடுங்கள்! உடனே ஓடுங்கள்!" என்று பெருங் கூச்சலிட்டான்.

ஜனங்கள் முன்னைக்காட்டிலும் அதிக பீதியடைந்து நாலுபுறமும் சிதறி ஓடினார்கள். அக்கம் பக்கத்திலிருந்த குறுக்கு வீதிகளிலும் சந்துகளிலும் புகுந்து ஓடினார்கள். திறந்திருந்த வீடுகளுக்குள் நுழைந்து ஒளிந்து கொண்டார்கள். வேறு எதற்கும் அஞ்சாத தீர நெஞ்சமுள்ளவர்களும் மதங் கொண்ட யானை என்றால் ஓடத்தான் செய்ய வேண்டும். எப்பேர்ப்பட்ட வீராதி வீரனாலும் மதங் கொண்ட யானையை எதிர்க்க முடியாது. ஆயுதங்களுடனே எதிர்த்து நிற்பதும் இயலாத காரியம். நிராயுதபாணிகளான ஜனங்கள், ஆண்களும் பெண்களும் முதியோர்களும் பாலர்களும், மதயானைக்கு முன்னால் சிதறி ஓடாமல் வேறு என்ன செய்ய முடியும்?

திருவாரூர் நகரத்தைத் தாண்டியதும், இளவரசர் யானையை நேரே தஞ்சாவூர்ச் சாலையில் செலுத்துவதற்குப் பதிலாக, வடமேற்குத் திசையை நோக்கித் திருப்பினார். முதலிலேயே அவருக்கு வழியில் பழையாறையை அடைந்து அங்கே தம் திருத் தமக்கையார் இருந்தால், அவரைப் பார்த்துப் பேசிவிட்டுத் தஞ்சை போக வேண்டும் என்ற எண்ணம் இருந்தது. இப்போது அது ஊர்ஜிதம் ஆயிற்று. மதம் பிடித்த யானை குறுக்கே விழுந்து ஓடுவதுதான் இயற்கையாயிருக்கும். தஞ்சைச் சாலையில் சென்றால் மக்கள் தம்மை விடாமல் தொடர்ந்து வரக்கூடும். வழியில்லாத வழியில் யானை போய்விட்டால், ஜனங்கள் தொடர்ந்து வர முடியாது!

இவ்விதம் அதி விரைவில் சிந்தித்து முடிவு செய்து, யானையை வடமேற்குத் திசையில் குறுக்கு வழியில் செலுத்தினார். வயல்கள், வரப்புகள், வாய்க்கால்கள், நதிகள், அவற்றின் உடைப்புகள்,— இவை ஒன்றையும் பொருட்படுத்தாமல் யானை ஜாம் ஜாம் என்று மனம் போன போக்கில் சென்றது. இளவரசரின் உள்ளமும் இனந் தெரியாத உற்சாகத்தை அடைந்து, கூண்டிலிருந்து விடுதலை அடைந்த பறவையைப் போல் ஆகாச வெளியில் வட்டமிட்டுத் திரிந்தது. தம்முடைய வாழ் நாளில் ஒரு முக்கியமான கட்டத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறோம் என்னும் உள்ளுணர்ச்சியிலிருந்து உற்சாகமும் பரபரப்பும் பொங்கிக் கொண்டிருந்தன.

* * *

யானை ஓடத் தொடங்கிய அதே சமயத்தில் முருகய்யனும் "யானைக்கு

மதம் பிடித்து விட்டது!" என்று கூச்சலிட்டுக் கொண்டு ஓடினுன். யானையினுல் தூக்கி எறியப்பட்ட பாகன் விழுந்த இடத்தைக் குமாராகக் குறி வைத்துக் கொண்டு சென்ருன். இளவரசர் தங்கியிருந்த சோழ மாளிகைக்குச் சற்றுத் தூரத்தில் நாடெங்கும் புகழ் பெற்ற கமலாலயம் என்னும் தடாகம் இருந்தது. அந்தக் குளக்கரையின் அருகில் சென்று பார்த்தான். யானைக்குப் பயந்தவர்கள் பலர் குளக்கரையில் இறங்கி நின்ருர்கள். சிலர் குளத்தில் தண்ணீரிலே கூட இறங்கியிருந்தார்கள். ஒரு மனிதன் கட்டுத் தடுமாறி நீந்திக் கரையேறிக் கொண்டிருந்தான். அவனை முருகய்யன் உற்றுப் பார்த்தான். முதல் நாளிரவு யானைப்பாகனையும் ராக்கம்மாளையும் அழைத்துக் கொண்டுபோன மந்திரவாதிதான் அவன்! அதிர்ஷ்டக்காரன்! ஆயுள் ரொம்பக் கெட்டி! யானை தூக்கி எறிந்தும் உயிர் பிழைத்திருக்கிருன் அல்லவா? கையில் அங்குசத்துடன் சற்று முன் யானையை நோக்கி ஓடிவந்தவன் இவனேதான்...! அங்குசம் என்ன ஆயிற்று என்று தெரியவில்லை. அதுவும் குளத்தில் விழுந்து விட்டதா?

முருகய்யன் அவன் அருகில் சென்று, "யானைப் பாகா! நல்லவேளை பிழைத்து எழுந்து வந்தாய்! அங்குசம் எங்கே?" என்று கேட்டான்.

ரேவதாஸன் என்னும் கிரமவித்தன் முருகய்யனை ஏற இறங்கப் பார்த்து விட்டு, "என்னப்பா கேட்கிருய்? நீ யார்? நான் இப்போது தான் குளத்தில் குளித்து விட்டுக் கரை ஏறுகிறேன்!" என்று சொன்னுன்.

"ஓகோ! அப்படியா? நீ யானைப் பாகன் இல்லையா? யானை தூக்கி எறிந்தது உன்னை அல்லவா? அப்படியானுல், யானைப் பாகன் எங்கே இருக்கிருன்?" என்று கேட்டான்.

கிரமவித்தன் மேலும் திகைப்புடன், "நான் என்ன கண்டேன்? என்னை ஏன் கேட்கிருய்?" என்ருன்.

"மந்திரவாதி! என்னை ஏன் ஏமாற்றப் பார்க்கிருய்? நேற்றிரவு 'யானைப் பாகனை இடுகாட்டுக்கு அழைத்துப்' போய் 'இளவரசர் ஏறும் யானைக்கு மதம் பிடிக்கும்' என்று எச்சரிக்கை செய்தாயே? அப்படியிருக்க, அந்த எச்சரிக்கையை நீயே மறந்து விட்டு யானையிடம் அகப்பட்டுக் கொண்டாயே? அது உன் பாடு! யானைப்பாகன் எங்கே? என் மனைவி ராக்கம்மாள் எங்கே?" என்று கேட்டான் முருகய்யன்.

கிரமவித்தனின் முகத்தில் முன்னை விடத் திகைப்பும் பீதியும் அதிகமாயின.

"யானைப் பாகனுவது? ராக்கம்மாளாவது? உனக்கு என்ன பைத்தியமா?" என்று சொல்லிக் கொண்டே கிரமவித்தன் சுற்று முற்றும் பார்க்கலானுன்.

"ஆம், ஆம்! யானைக்கு மதம் பிடித்தது போலத்தான் எனக்கும் பைத்தியம் பிடித்திருக்கிறது! யானைப் பாகன் எங்கே என்று மட்டும் சொல்லிவிடு! இல்லாவிடில்......" என்று முருகய்யன் சிறிது அதிகார தோரணையில் அவனிடம் பேசத் தொடங்கினுன்.

சுற்று முற்றும் பார்த்துக் கொண்டிருந்த ரேவதாஸன் இப்போது முருகய்யனைப் பார்த்துப் புன்னகை புரிந்தான்.

"நீ என்னை 'மந்திரவாதி' என்கிருய்! நீ என்னைவிடப் பெரிய மந்திரவாதியாயிருக்கிருயே! உனக்கு எல்லாம் தெரிந்திருக்கிறது! உன்னிடம் மறைப்பதில் பயனில்லை. 'யானைக்கு மதம் பிடிக்கப் போகிறது! அதன்பேரில் ஏற வேண்டாம்' என்று இளவரசருக்கு எச்சரிக்கை செய்வதற்காகவே ஓடி வந்தேன். அதன் பலன் இப்படி ஆயிற்று. உன் மனைவியும் யானைப் பாகனும் அங்கே ஒரு வீட்டில் இருக்கிருர்கள். அவர்களை நீ பார்க்க விரும்பினுல், நானே அழைத்துப் போகிறேன். இளவரசருக்கு ஒன்றும் நேரவில்லையே? சௌக்கியமாயிருக்கிருர் அல்லவா?" என்ருன்.

"இளவரசர் சௌக்கியம். அவர்தான் உன்னையும் யானைப் பாகனையும் அழைத்துக் கொண்டு வரும்படி எனக்குக் கட்டளையிட்டார்......"

"இளவரசரிடம் எனக்கு நல்ல பரிசு வாங்கித் தரவேண்டும்! தெரிகிறதா? பார்க்கப் போனுல், அவரை நான் காப்பாற்றி விட்டது உண்மைதானே? ஆ! அதோ......!" என்று மந்திரவாதி வியப்புடன் கூறி நிறுத்தினுன்.

மந்திரவாதி உற்று நோக்கிய இடத்தில், குளத்தின் கரையோரமிருந்த அரளிச் செடிப் புதர்களில் வேல் முனை போன்ற ஒன்று சிறிது தெரிந்தது.

"ஆ! அங்குசம்!" என்று சொல்லிக் கொண்டே மந்திரவாதி அந்த அரளிச் செடிப் புதரை நோக்கி ஓடினுன்.

முருகய்யன் அவனைவிட விரைந்து ஓடி அரளிச் செடிப் புதர்களில் புகுந்து

அங்குசத்தின் அடிப்பிடியைப் பிடித்து ஜாக்கிரதையாக எடுத்துக்கொண்டான்.

பின்னர், திரும்பிப் பார்த்தான். மந்திர வாதியைக் காணவில்லை. "அடடா! ஏமாந்து போய் விட்டோமே?" என்ற துணுக்கத்துடன் அங்குமிங்கும் ஓடிப் பார்த்தான். பயனில்லை. குளக்கரையில் கூடியிருந்த பெரும் ஜனக் கூட்டத்தின் மத்தியில் புகுந்து மந்திரவாதி கிரம வித்தன் மாயமாய் மறைந்து விட்டான்.

மதயானை ஓடிப்போன பிறகு, ஜனங்கள் மறுபடியும் திரும்பிச் சோழ மாளிகையை நெருங்கி வந்து கொண்டிருப்பதை முருகய்யன் கண்டான்.

ஆனால் அங்கே அவன் நிற்கவில்லை.

முதல் நாள் மந்திரவாதியை அவன் பார்த்த வீடு எந்தத் திசையில் இருந்தது என்பதை நினைத்துப் பார்த்துக் கொண்டு, அதை நோக்கிச் சென்றான். வழி யெல்லாம், இராஜ வீதிகளிலெல்லாம், ஜனங்கள் ஆங்காங்கு கூடிக் கூடி நின்று பேசிக் கொண்டிருந்தார்கள். மத யானை ஓடியதைப் பார்த்தவர்களில் சிலர், "யானையின் பேரில் யாரோ ஆள் இருந்ததாகத் தோன்றியது" என்றார்கள். மற்றும் சிலர் அதை மறுத்தார்கள். "அது எப்படி இருக்க முடியும்? யானைப் பாகனைத் தூக்கி எறிந்தவுடனேதான் யானை ஓடத் தொடங்கி விட்டதே? அதன் பேரில் யார் ஏறி யிருக்க முடியும்?" என்றார்கள். எல்லாரும் இவ்வாறு விவாதித்துக் கொண்டே சோழ மாளிகையை நோக்கித் திரும்பிச் சென்று கொண்டிருந்தார்கள். தங்கள் இதயங் கவர்ந்த இளவரசருக்கு அபாயம் ஒன்றும் நேரவில்லை என்பதை உறுதிப் படுத்திக் கொள்வதற்கு ஜனங்கள் அனைவரும் ஆவலாக இருந்தார்கள்.

முருகய்யன் ஜனங்கள் வந்த திசைக்கு எதிர்த் திசையாகச் சென்று குறிப்பிட்ட சந்தை அடைந்தான். அங்கே அப்போது ஜன நடமாட்டமே இருக்கவில்லை. எல்லாரும் இராஜ வீதிகளுக்குப் போய் விட்டார்கள். இரவில் பார்த்த வீட்டைப் பகலில் அவ்வளவு சுலபமாக அடையாளம் கண்டு பிடிக்க முடிய வில்லை. உற்றுப் பார்த்துக் கொண்டே முருகய்யன் போனான். ஒரு வீடு மட்டும் வெளிப்புறம் பூட்டப்பட் டிருந்தது. உள்ளேயிருந்து ஏதோ முனகல் சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது. அந்த வீட்டுக்குப் பக்கத்தில் ஒரு பாழும் வீடு இருந்தது. முருகய்யன் அந்தப் பாழும் வீட்டில் புகுந்து அடுத்த வீட்டின் மேற் கூரையில் ஏறி முற்றத்தில் குதித்தான். அவன் எதிர் பார்த்தபடியே அங்கே யானைப் பாகன் தென்பட்டான். அவன் வெறி கொண்டவனைப் போல் தோன்றினான். அவனுடைய கால்களையும் கைகளையும் கட்டியிருந்தது மல்லாமல் ஒரு தூணோடும் அவனைச் சேர்த்துக் கட்டியிருந்தது. யானைப்பாகன் தன் கைக் கட்டுகளைப் பல்லால் கடித்து அவிழ்க்கப் பெரு முயற்சி செய்து கொண்டிருந்தான். நடு நடுவில் கடிப்பதை நிறுத்தி விட்டுக் கூச்சல் போட்டுக் கொண்டு மிருந்தான்.

முருகய்யனைப் பார்த்ததும் அவன் முகத்தில் சிறிது தெளிவு ஏற்பட்டது. நாகைப்பட்டினத்திலேயே அவன் முருகய்யனைப் பார்த்திருந்தான். இளவரசருக்கு வேண்டியவன் என்பதையும் அறிந்து கொண்டிருந்தான். ஆகையால் இப்போது பரபரப்புடன், "முருகய்யா! அவிழ்த்து விடு! அவிழ்த்து விடு! சண்டாளர்கள் என்னை ஏமாற்றி விட்டார்கள்! இளவரசருக்கு அபாயம் ஒன்றும் நேரவில்லையே?" என்றான்.

முருகய்யன் கட்டுக்களை அவிழ்த்து விட்டுக் கொண்டே காலையில் நடந்த வற்றைச் சுருக்கமாகக் கூறிவிட்டு, யானைப்பாகனிடம் அவனுக்கு நேர்ந்தது என்னவென்று விசாரித்தான். யானைப் பாகனும் ஒருவாறு தட்டுத்தடுமாறிக் கூறினான். யானைக்கு மதம் பிடித்தாலும் தனக்கு ஒன்றும் நேராமல் மந்திர கவசம் தருவதாகச் சொல்லி இந்த வீட்டுக்கு அழைத்து வந்தார்கள் என்றும், இங்கே வந்ததும் சாம்பிராணிப் புகை போட்டுக் கொண்டே மந்திரவாதி மந்திரம் ஜபித்தான் என்றும், அப்போது தனக்கு மயக்கமாக வந்து தூங்கி விழுந்து விட்டதாகவும், கண் விழித்துப் பார்த்த போது தன்னைத் தூணோடு கட்டிப் போட்டிருந்ததாகவும் கூறினான்.

இருவரும் அந்த வீட்டை விட்டு வெளியேறிச் சோழ மாளிகையை நோக்கி விரைந்து சென்றார்கள்.

அவர்கள் அம் மாளிகையை அடைந்த போது அங்கே முன்னைவிடப் பெருங் கூட்டம் கூடியிருப்பதையும் ஜனங்கள் மிக்க கவலையோடு பேசிக் கொண்டிருப்பதையும் கண்டார்கள்.

ஜனங்களின் கவலைக்குக் காரணம், இளவரசரைக் காணோம் என்பதுதான். அவருக்கு என்ன நேர்ந்தது என்பதைத் திட்டமாக அறிந்தவர்கள் அங்கு யாரும் இல்லை. யானைமேல் ஒருவர் இருந்ததைப்

பார்த்ததாக மட்டும் சிலர் கூறினார்கள். அவர் ஒரு வேளை இளவரசராக இருக்கலாம் என்று ஊகித்தார்கள்.

இளவரசர் யானைகளைப் பழக்கும் வித்தையில் மிகத் தேர்ந்தவர் என்பதும், யானைகளின் பாஷைகூட அவருக்குத் தெரியும் என்பதும் சோழ நாட்டில் பிரசித்தமாயிருந்தன. ஆகையால், மதங் கொண்ட யானையினால் ஒருவருக்கும் தீங்கு நேரிடாமல் அதன் மதத்தை அடக்கும் பொருட்டுப் பொன்னியின் செல்வர் யானைமேல் ஏறிச் சென்றிருக்க வேண்டும் என்று சிலர் தங்கள் உறுதியான நம்பிக்கையைத் தெரிவித்தார்கள்.

இச்சமயத்திலே அங்கே முருகய்யனும் யானைப் பாகனும் வந்தார்கள். யானைப் பாகனுக்கு நேற்றிரவு நேர்ந்தது அங்குள்ளவர்களுக்குத் தெரிந்தபோது, அவர்களுடைய வியப்பும் திகைப்பும் பன் மடங்கு அதிகமாயின.

யானைப் பாகனைக் கட்டிப் போட்டு விட்டு, அங்குசத்தை எடுத்துக் கொண்டு ஓடி வந்தவன் சோழ குலத்தின் விரோதிகளால் அனுப்பப் பட்டவனாயிருக்க வேண்டும். "ஒரு வேளை பழுவேட்டரையர்களே அனுப்பி யிருக்கக் கூடும்!" என்று சிலர் ஊகித்துக் கூறியதைப் பெரும்பாலான மக்கள் நம்பினார்கள். அதனால் பழுவேட்டரையர்களின் மீது அவர்களுடைய கோபம் அதிகமாயிற்று. அந்தக் கோப வெறியுடனே பலர் உடனே தஞ்சையை நோக்கிக் கிளம்பினார்கள். யானை போன வழியை விசாரித்துக் கொண்டு ஒரு பகுதியினரும், தஞ்சாவூருக்கு நேரே போகும் சாலையில் மற்றவர்களும் கோபா வேசத்துடன் புறப்பட்டுச் சென்றார்கள்.

அத்தியாயம் 19

திருநல்லம்

ஜோசியர் வீட்டின் ஓட்டுக் கூரையையும் அதனுடன் தன்னுடைய உயிரையும் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருந்த வானதி காவேரி நதியின் உடைப்பு வெள்ளத்தில் மிதந்து மிதந்து போய்க் கொண்டிருந்தாள். வெள்ளம் அவளை மேலே மேலே அழைத்துக் கொண்டு கிழக்கு நோக்கிச் சென்றது. சில சமயம் மெதுவாகச் சென்றது. சில சமயம் வேகமாக இழுத்துச் சென்றது. வேறு சிலபோது பெரிய சுழிகளிலும் சுழல்களிலும் அந்த வீட்டுக் கூரை அகப்பட்டுக் கொண்டு சுற்றிச் சுழன்று தடுமாறிக் கொண்டு சென்றது.

வெள்ளத்தின் ஆழம் அதிகமில்லாத மேட்டுப் பாங்கான இடங்களில் சில போது சென்றது. அது மரங்களின் அடியில் வெள்ளம் எவ்வளவு தூரம் ஏறியிருக்கிறது என்பதைப் பார்த்ததும், ஆங்காங்கு காவேரிக் கரை ஓரமிருந்த மண்டபங்கள் எவ்வளவு தூரம் முழுகியிருக்கிறதுஎன்பதைப் பார்த்ததும் தெரிந்தது. மேட்டுப் பாங்கான இடங்களில் கீழே இறங்கலாமா என்று வானதி யோசிப்பதற்குள் ஆழமான இடங்களுக்குச் சுழல்கள் இழுத்துப் போய்விட்டன.

இறங்குவதற்கும் வானதிக்கு அவ்வளவாக மனம் இல்லை. ஏனெனில், பொன்னி நதியின் அவ் வெள்ளம் அவளைப் பொன்னியின் செல்வர் இருக்குமிடத்துக்கு அழைத்துச் செல்வதாக அவளுடைய மனதில் ஒரு தோற்றம் ஏற்பட்டிருந்தது. இளவரசருக்கு ஏற்படப் போகும் அபாயத்தைப் பழுவேட்டரையர் மூடு மந்திரமாகக் கூறியது அவள் உள்ளத்திலும் பதிந்திருந்தது. அவரை அந்த அபாயத்திலிருந்து பாது காக்கவே காவேரி நதி தன்னை அழைத்துப் போவதாக அவள் எண்ணிக் கொண்டாள்.

ஆகா! அந்தப் பூங்குழலிக்குத்தான் எவ்வளவு கர்வம்? இளவரசர் விஷயத்தில் எவ்வளவு உரிமை கொண்டாடுகிறாள்? ஆயினும், அவ்வாறு உரிமை கொண்டாடுவதற்குக் காரணம் உண்டு. இன்று இளவரசர் பிழைத்திருப்பதே பூங்குழலியினால்தானே? ஒரு நாளும் இல்லை!—அந்தக் குடந்தை ஜோதிடர் கூறியதைத்தான் வானதி கேட்டிருந்தாளே! இளவரசர் பிறந்த வேளை அப்படி! அவருக்கு இம்மாதிரி கண்டங்கள் பல வரக்கூடும்! ஆனால் அவர் உயிருக்கு ஒன்றும ஆபத்து வராது! உலகத்தை ஆளப்பிறந்தவரைக் கேவலம் கடலும் புயலும் நதி வெள்ளமும் என்ன செய்துவிடும்? அவர் அவ்விதம் உயிர் தப்புவதற்கு யாரேனும் ஒரு வியாஜமாக வேண்டும்! பூங்குழலிக்கு அத்தகைய பாக்கியம் கிடைத்திருக்கிறது! அதற்

வியாதிக்கு மருந்து !



பாகிஸ்தானின் வர்த்தகம் மிகவும் வீழ்ந்து விட்டபடியால், பாகிஸ்தான் ரூபாயின் மதிப்பைக் குறைப்பது பற்றி பாகிஸ்தான் சர்க்கார் புனராலோசனை செய்து வருகிறார்களாம்.

காக அவன் உரிமை எப்படிக் கொண்டாடலாம்?—எனினும், அம்மாதிரி பாக்கியம் தனக்கும் ஒரு தடவை கிட்டக் கூடாதா என்ற ஏக்கம் வானதியின் இதய அந்தரங்கத்தில் நீண்ட காலமாக இருந்து கொண்டிருந்தது.

சில சமயம் கூரை சுழன்று திரும்பிய போது, பின்னால் வெகு தூரத்தில் படகு ஒன்று வருவதை வானதி பார்த்தாள். அதில் பெண் ஒருத்தியும், புருஷன் ஒருவரும் இருப்பதும் தெரிந்தது. யார் என்று நன்றாய்த் தெரியவில்லை. பெண் படகு செலுத்தியதைப் பார்த்ததும் அவள் ஒருவேளை பூங்குழலியா யிருக்கலாம் என்று தோன்றியது. தன்னை வெள்ளத்திலிருந்து காப்பாற்றத் தான் வருகிறாளா? இளையபிராட்டி அனுப்பி வைத்திருக்கிறாரா? போதும், போதும்! அவளுக்கு இளவரசர் கடமைப்பட்டிருப்பதே போதும். தானும் வேறு நன்றிக் கடன் படவேண்டாம்! கூடவே கூடாது. தான் அவளால் இந்த வெள்ளத்திலிருந்து காப்பாற்றப் படுதலே கூடாது.

சிலசமயம் படகு அவளுக்கு அருகில் நெருங்கி வந்துவிட்டது போலிருந்தது. சில சமயம் கூரை வேகமாகச் சென்று படகை வெகுதூரம் பின்னால் விட்டு விட்டுச் சென்றது.

இவ்விதம் படகு கண்ணுக்கு மறைந்திருந்த ஒரு சமயத்தில், வீட்டுக் கூரை திசை திரும்பித் தெற்கு நோக்கிச் செல்லுவது போலத் தோன்றியது. இவ்வாறு வெகு தூரம் போயிற்று. காவேரியின் தென் கரையைத் தாண்டி, தெற்கே ஒரே சமுத்திரம் போலத் தோன்றிய வெள்ளப் பிரதேசத்தில் சென்றது. கடைசியில், அந்தத் தண்ணீர் வெள்ளத்தின் எல்லை கண்ணுக்குப் புலப்பட்டது. ஆகா! இது ஒரு நதியின் கரை போல அல்லவா காணப் படுகிறது. ஆம், ஆம்! இது அரசலாற்றங்கரை தான்! காவேரி உடைப்பு வெள்ளம் நடுவில் பல பிரதேசங்களை மூழ்க அடித்துக் கொண்டு வந்து இந்த ஆற்றில் விழுந்து கலந்திருக்கிறது. இதன் தென் கரை சிறிது மேடாக இருப்பதால் அதற்குள் அடங்கிச் செல்லுகிறது. அந்த நதிக் கரை, அதன் மரங்களடர்ந்த தோற்றம், அவளுக்குப் பழக்கப்பட்ட இடமாகத் தோன்றியது. பூர்வ ஜன்ம வாசனையைப் போல் ஞாபகம் வந்தது. இல்லை, இல்லை! இந்த ஜன்மத்தில் இரண்டு மூன்று தடவை பார்த்த இடந்தான்! அவன் திருநல்லம் என்னும் க்ஷேத்திரத்தை நெருங்கி வந்து கொண்டிருக்க வேண்டும். அங்குள்ள ஆலயத்தை மழவரையர் மகளார், செம்பியன் மாதேவி, தம் அருமைக் கணவரான கண்டராதித்த சோழரின் ஞாபகமாகக் கருங்கல் திருப்பணியாகச் செய்ய ஆவல் கொண்டிருக்கிறார். அங்கே நதிக் கரையில் சோழ குலத்தார்கள் தங்குவதற்கு வசந்த மாளிகை ஒன்றும் இருக்கிறது. செம்பியன் மாதேவி ஒரு சமயம் இளைய பிராட்டியை அவ்விடத்துக்கு அழைத்துச் செல்ல, அவருடன் தானும் போன துண்டு! அந்த வஸந்த மாளிகையை யொட்டி யிருந்த தோட்டங்களிலே சென்று பறவைகளின் இனிய கீதங்களைக் கேட்பதில் தனக்கு எவ்வளவு ஆர்வ மிருந்தது. ஆகா! அப்போது அங்கு நடந்த ஒரு சம்பவம், வானதியின் உள்ளத்தில் என்றும் மறக்க முடியாதபடி ஆழ்ந்து பதிந்திருந்தது. (தொடரும்)

நாட்டுக்கும் ஒரு நண்பர்

ரசிகமணி டி. கே. சிதம்பரநாத முதலியார்

நாட்டுக்கும் ஒரு நண்பர் இருக்கலாம் என்பது டாக்டர் ஆர். கே சண்முகம் செட்டியார் அவர்களது பிரிவினால்த் தெரிய வந்தது.

செட்டியார் அவர்கள் காலமான செய்தி தமிழ் நாடெங்கும் நொடியில்ப் பரவி விட்டது.

தமிழ் மக்களுக்குள், "இனி நாம் என்ன செய்ய!" என்ற சோகம் ஒலிக்க ஆரம்பித்து விட்டது.

தமிழ் நாட்டைப் பிடித்துள்ள விபத்துக்களிலிருந்து இனி எப்படி தப்புவது என்ற யோசனை வந்து விட்டது.

தமிழ் நாட்டுப் பண்பாட்டுக்கு என்ன கேடு வந்து விடுமோ என்ற பயம் வேறு.

தமிழன் பாடு எங்கே போனாலும் பெரும் பாடாக இருக்கிறதே. பர்மா தமிழனை வெறுக்கிறது. தென் ஆப்பிரிக்கா வெறுக்கிறது. இலங்கை தமிழனை விரட்டப் பார்க்கிறது. கிட்டத்தில் வந்தால் ஆந்திர நாடு தமிழனை என்ன செய்ய வேண்டுமானாலும் செய்யலாம் என்று கூசாமல்ச் சொல்லுகிறது.

தமிழன் கவலைப் படாமல் எப்படி இருக்க முடியும்? யாரிடமாவது போய்ச் சொல்ல வேண்டுமே, அனுதாபத்தோடு கேட்க வேண்டுமே அவர் என்று எண்ணும் போது ஆர். கே. சண்முகம் செட்டியார் பெயர்தான் நினைவுக்கு வரும்.

காலமாய் விட்டார் ஆர். கே. சண்முகம் செட்டியார் என்ற செய்தி வந்ததும் யாரிடம் போய் இனி விண்ணப்பம் செய்ய என்று பேச ஆரம்பித்து விட்டார்கள்.

தமிழிசைக்கு எதிர்ப்பு என்றால், சண்முகம் செட்டியார் அதை நிவர்த்திக்க முன் வருவார் என்ற தைரியம் இருந்தது. தமிழ் பாஷைக்கு அபாயம் என்றால் அதைச் சமாளிக்கச் சண்முகம் செட்டியார் இருக்கிறார் என்ற உறுதி பிறந்தது இதயத்தில்.

இந்த விதமாக எத்தனையோ விஷயங்களுக்குப் புகலிடமாய் இருந்து வந்தவர் ஆர். கே. சண்முகம் செட்டியார், தமிழ் நாட்டுக்கே நண்பராய் இருந்தார்.

கோயம்புத்தூர் என்றால், ஆர். கே. எஸ். தான். அப்படியே ஆர் கே. எஸ். என்றால் கோயம்புத்தூர்தான்.

சிறு ஊராய் இருந்த கோயம்புத்தூர் இப்போது ஒரு பிரதானமான நகரமாய் விளங்குகிறது. அதன் அபிவிருத்தியில் எந்தத் துறையிலுமே ஆர். கே. எஸ். முனைந்து வேலை செய்து வழி காட்டி வந்தார்.

ஆர். கே. எஸ். வீடு என்றால்க் கலைக் கோயில்தான். மிக விலை உயர்ந்த சிற்பங்களும் தட்டு முட்டுகளும் வீடு நிறைந்திருக்கும். புஸ்தக சாலை என்றால் சகல கலா மண்டபந்தான். வருஷக் கணக்கில் நாம் புஸ்தகங்களுக்குள்ளும் சிற்பங்களுக்குள்ளும் ஊடாடி ஆனந்தத்தில் திளைத்துக் கொண்டிருக்கலாம்.

வீட்டின் கட்டு மானமே ஒரு தனிக் கலை. ஏதோ ஆங்கில நாகரிகத்தை ஒத்தி எடுத்த காரியம் அல்ல. நம்முடைய பூர்வமான நாகரிகம், அழகு, விருந்தோம்பல் இவைகளை லக்ஷ்யமாகக் கொண்டு செய்த அழகிய கட்டிடம். தென் இந்தியாவுக்கே ஒரு அரிய எடுத்துக் காட்டு ஆர். கே. எஸ். வீடு.



ஆர். கே. சண்முகம் செட்டியார்

எல்லாவற்றிலும் அழகு, சிநேகிதர்களையும் விருந்தினர்களையும் அன்பும் ஆர்வமும் கொண்டு உபசரிக்கிற காரியந்தான். அதற்குச் செல்வமும் வண்மையும் அன்பும் ஒருங்கே செட்டியார் அவர்களிடம் அமைந்திருந்தன. தமிழ் நாடு, கோவை நகரம், நாம் எல்லோருமே ஒரு பெரிய பொக்கிஷத்தை இழந்து நிற்கிறோம். இறைவன் திருவடி நிழலில் ஆர். கே. சண்முகம் செட்டியார் அவர்களது ஆன்மா சாந்தி பெறுவதாக.

“மட்டக்களப்பை மறவாதீர்!”


இரண்டாவது தடவையாக நாம் செய்த தவறு ஒன்று பற்றி இலங்கைத் தமிழ் அன்பர் எடுத்துக் காட்ட நேர்ந்திருக்கிறது. பாரத நாட்டில் தமிழர்கள் வாழும் இடப் பரப்பை மே மீ 10 உ இதழில் குறிப்பிடும் போது, “இலங்கையில் திரிகோண மலையிலிருந்து இமயமலை அடிவாரம் வரையில் தமிழர்கள் எத்தனையோ பேர்” என்று எழுதியிருந்தோம். உடனே மட்டக் களப்பு வாசியொருவ அன்பர் எஸ். இராஜதுரை நமது பிழையை எடுத்து மூடங்கள் நீட்டியிருக்கிறார்.

“ஒரு காலத்தில் இலங்கையில் தமிழர்கள் என்றால் அவர்கள் யாழ்ப்பாணத்தவர்கள் தான் என்ற அளவிலே தமிழ் நாட்டவர்களும் இந்தியர்கள் அனைவரும் நம்பியிருந்தார்கள். பின்பு திரிகோண மலையிலும் தமிழ் மக்கள் வாழ்கிறார்கள் என்று பலருக்குப் புலப்பட்டது. ஆனால் திரிகோணமலைக்குத் தெற்கில் திருக்கோயில், பொத்துவில் இவற்றுக்கு அப்பாலும் செந்தமிழ் பேசும் மக்கள் ஐந்து லட்சத்துக்கு அதிகமானோர் சரித்திர காலத்துக்கு எட்டாத காலம் முதற் கொண்டு வாழ்ந்து வருவது பலருக்குத் தெரியாமல் இருப்பது எங்கள் சாபக்கேடு என்றே சொல்லவேண்டும். சித்தாண்டி சிவ சுப்பிரமண்ய சுவாமி கோயில், கொக்கட்டிச் சோலை தான் தோன்றீஸ்வரர் கோயில், மண்டூர் கந்தசாமி கோயில், மாமாங்கப் பிள்ளையார் கோயில் போன்ற பல ஸ்தலங்களின் உற்பத்திக் காலம் எந்த நூற்றாண்டைச் சேர்ந்தவை என்பது ஆராய்ச்சியாளருக்கு இன்னும் அகப்படவில்லை. நம் காலத்திலே வாழ்ந்து தமிழுக்கும் தமிழர்க்கும் இறவாத செல்வமான யாழ் நூலை ஆக்கித் தந்த ஸ்ரீ விபுலானந்த அடிகள் பிறந்ததும் திரிகோணமலைக்குத் தெற்கே சுமார் 110 கல் தூரத்திலுள்ள காரைத் தீவு என்னும் கிராமம். தமிழர்களும் அவர்கள் தம் சரித்திரமும் மறக்க வொண்ணாத மாபெரும் சேவையைச் செய்த மகான் பிறந்த மட்டக்களப்பு புறக்கணிக்கப் பட்டால் நாங்கள் அதனை எப்படிப் பொறுக்க முடியும்? தமிழ் நாட்டோடு,—அதன் கலை, கலாச்சாரம், நாகரிகம், பண்பு, இவற்றோடு,—சரித்திரம், இலக்கியம், புராணத்தின் தொடர்போடு – தமிழ் மக்களின் இரத்தத்தோடு கலந்துள்ள எங்கள் தாயகமான மட்டக் களப்பு இப்படித் தலைமுறை தலைமுறையாகத் தட்டிக் கழிக்கப்பட்டு வருவதைத் தவிர்க்க வேண்டும். எதிர் காலத்தில் தமிழ் நாட்டுஎல்லை குறிப்பிட முன்வரும் எழுத்தாளர்கள் மட்டக் களப்பையும் சேர்த்துக்கொள்ள முன்வர வேண்டும். இது இப்பகுதியில் வாழும் லட்சக் கணக்கான தமிழ் மக்களின் உரிமைக் குரல்.”

இவ்வாறு ஆர்வத்துடன் எழுதி யிருக்கும் திரு எஸ். ராஜதுரை அவர்கள் திரிகோணமலைக்குத் தெற்கே மட்டக்களப்பு இருப்பதை நன்கு எடுத்துக் காட்டும் பொருட்டு ஈழ நாட்டின் கோட்டுப் படம் ஒன்றும் எழுதி அனுப்பி யிருக்கிறார். அவருக்கு நமது நன்றி.

ஸ்ரீ விபுலானந்தர் பிறந்த மட்டக் களப்பு பகுதியை நாம் வேண்டுமென்று புறக்கணிக்க வில்லை என்பதைக் குறிப்பிட விரும்புகிறோம். எல்லையைக் குறிப்பிடும்போது மலைக்கு மலை குறிப்பிடுவது ஒரு சம்பிரதாயம். “இமயமலையிலிருந்து பொதிகை மலை வரையில்” என்றோ, “விந்தியமலையிலிருந்து பொதிகைமலை வரையில்” என்றோ எழுதினால், பொதிகை மலைக்குத் தெற்கேயுள்ள தமிழகப் பகுதியைப் புறக்கணிக்கும் நோக்கத்துடன் எழுதப்படுவதன்று. இந்த மரபை யொட்டியே, “இமயமலை அடிவாரத்திலிருந்து திரிகோணமலை வரையில் வாழும் தமிழர்கள்” என்று கல்கி மே மாதம் 10-ம் தேதி இதழில் குறிப்பிட்டிருந்தது. ஆயினும், மட்டக்களப்பை மறந்து விடுவது வழக்கமா யிருந்து வந்திருக்கிற படியால், திரு இராஜ துரை போன்றவர்கள் அதை எடுத்துக் காட்டுவது இயல்புதான்.

மட்டக்களப்புத் தமிழ் அன்பர்கள் தங்கள் ஊரின் சிறப்பைத் தமிழ் மக்கள் மறந்து விடாமல் அவர்களுடைய மனதில் பதிய வைப்பதற்காக ஜூன் மாதம் முற் பகுதியில் ஒரு மாபெரும் தமிழ் விழா நடத்த ஒழுங்கு செய்திருக்கிறார்கள். இந்த விழாவில் தலைமை தாங்குவதற்குச் சமீபகாலத்தில் தமிழ் நாட்டில் அருமையான தமிழ்ப் பிரசாரமும் சமயப் பிரசாரமும் செய்து வரும் குன்றக்குடி அடிகளாரை அழைத்திருக்கிறார்கள். இன்னும், தற்காலத்தில் தமிழ் நாட்டுக்கும் ஈழ நாட்டுக்கும் இலக்கியப் பாலமாக




விளங்கும் திரு ரா. பி. சேதுப்பிள்ளை அவர்களும் இன்னும் பல தமிழறிஞர்களும் மேற்படி தமிழ் விழாவில் பங்கு பற்றுவதற்காகச் செல்கிறார்கள். இதுபோன்ற விழாக்கள், தாய் நாட்டிலுள்ள தமிழர்கள் மட்டக்களப்பைத் தவறுதலாகக்கூட மறக்க முடியாமற் செய்துவிடும்.

ஆனால் திரிகோண மலையிலுள்ள தமிழன்பர்களும் சும்மா இருந்து விடவில்லை. மே மாதம் கடைசி வாரத்தில் திருவள்ளுவர் திருநாளை அமோகமாகக் கொண்டாட ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இவ்விழாவுக்கும் தாய் நாட்டிலிருந்து பல தமிழறிஞர்கள் சென்றிருக்கிறார்கள்.

ஆகவே வைகாசித் திங்களில் ஈழ நாட்டின் கிழக்கு மாகாணத்தில் ஒரே தமிழ் முழக்கமாக இருக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

இந்த இரண்டு தமிழ் விழாக்களைப் பற்றிய விவரங்களையும் “கல்கி” இதழ்களின் மூலம் தாய் நாட்டிலுள்ள தமிழ் அன்பர்கள் படித்து மகிழ்வதற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம் என்பதையும் இச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறோம்.



பினாகா (ரோஸ்)

பிரசித்தி பெற்ற இப்பற்பசை உங்களது பற்களை நன்கு சுத்தம் செய்வதோடு, முத்துப்போன்ற வெண்மையும், பிரகாசமுமுள்ள இருபல் வரிசைகளின் மூலம், புதுமையும் பொலிவுமுள்ள வசீகரப்புன்னகையும் நிச்சயமாக அளிக்கிறது. பற்களில் ஊடுருவிச்சென்று சுத்திகரிக்கும் பினாகாவின் விசேஷசக்தி அதனுள் இயங்கும் "ஸல்போ-ரிஸினோலியேட்" என்னும் பொருளின் தன்மைகளை சாஸ்திரிய ஆதாரமாகக் கொண்டது.

பினாகா பச்சை

மேற்சொன்னக் குணங்களுடன் அதிகப்படியாக சக்திவாய்ந்த 'க்ளோரோபில்'லும் பினாகாபச்சையில் சேர்ந்துள்ளது. இது, அதன் அநேக சக்திகளில் ஒன்றான, வாய் நாற்றத்தை வெளிக்கிழுத்து அதை அறவே ஒழிக்கும் சக்தியும் வாய்ந்தது. ஆச்சரியகரமாக வாய் நாற்றத்தை அறவே ஒழிக்கும் தன்மைவாய்ந்த 'க்ளோரோபில்லும்' பினாகாவின் நன்கு பரிசோதிக்கப்பட்ட செய்முறையான 'ஸல்போ-ரிஸினோலியேட்'டின் தன்மைகளும் ஒருங்குசேர்ந்து உங்களுக்கு வசீகரமளிக்கும் ஒரு பற்பசை "பினாகா பச்சை" தான்.

எதைத் தேர்ந்தெடுப்பினும்சரி, உங்களது தேர்தல் சரியானதே

ஸிபாவால் தயாரிக்கப்பட்டதுகள்.

ரோஸ் அல்லது பச்சை ?



பிரதி திங்கட்கிழமை மாலை 8 மணிக்கும் "பினாகா ஹிட் பரேட்" பிரதி ஞாயிறு மாலை 8 மணிக்கும் "பினாகா கீத மாலா" ரேடியோ சிலோனில் கேளுங்கள்

CBK 9053 TAMIL



கௌரியின் சித்தி

சரோஜா சீனிவாஸன்

வகுப்புத் துவங்கும் மணி அடித்துப் பத்து நிமிஷங்களாகி விட்டன. இரண்டாம் வகுப்பு ஆசிரியை மிஸ். ஜயந்தி அப்பொழுதுதான் தலைமை ஆசிரியை அறையிலிருந்து வெளிப்பட்டுத் தன் வகுப்பறைக்குள் நுழைந்தாள். அந்த நிமிஷம் வரைக் கோஷமிட்டு, கும்மாளமடித்துக் கொண்டிருந்த மாணவிகள் ஆசிரியை வருவதைக் கண்டதும் கப்சிப்பென்று அடங்கி அவரவர்களுடைய இடங்களில் மரியாதையுடன் எழுந்து நின்றனர்.

"நமஸ்காரம் டீச்சர்"—முப்பது குரல்கள் ஒரே ஸ்ருதியில் சேர்ந்து ஒலித்தன.

"நமஸ்காரம்......எல்லாரும் உட்காருங்கோ"—இதழ்க் கடையில் புன்னகையை மிதக்க விட்டபடி நாற்காலியில் அமர்ந்தாள் ஜயந்தி. ஒருமுறை வகுப்பு முழுவதையும் அவள் கண்கள் பார்வையிட்டன. அவள் முகத்தில் சந்தோஷமும் திருப்தியும் மலர்ந்தது. தன் மாணவிகளின்—ஏழெட்டு வயதிற்குள்ளாகவே இருக்கும் முப்பது பிஞ்சு உள்ளங்களின் — சமர்த்தையும், கீழ்ப்படிதலான குணத்தையும் எண்ணித் தன் மனத்திற்குள்ளாகவே வியந்து பாராட்டிக் கொண்டாள்.

ஜயந்தி அந்தச் சிறு வகுப்புக்கு ஆசிரியையாக வந்து ஒரு வாரம் தானாகிறது. இந்த ஒரு வாரத்திலேதான் அந்தக் குழந்தைகள் அவள் மனத்தை எவ்வளவு தூரம் கவர்ந்து, அவள் இதயத்தில் நல்ல அபிப்பிராயத்தைச் சம்பாதித்துக் கொண்டு விட்டனர்! முதல் நாள் வகுப்பு அறையில் நுழைந்த ஜயந்தி மாணவிகளின் அலங்கோலத்தைப் பார்த்துத் திடுக்கிட்டுப் போனாள். கலைந்த கூந்தலும், ஒழுகிய மூக்கும், அழுக்குச் சட்டைகளை அணிந்து கொண்டும், ஒழுங்கற்ற முறையில் காட்சி அளித்தனர் மாணவிகள். அவர்கள் நிலையைக் கண்ட ஜயந்தி அவர்களை முதலாக ஒழுங்கான நிலைக்குக் கொண்டு வந்து சுத்தமாய்ப் பள்ளிக் கூடத்திற்கு வரும்படி போதிக்க வேண்டும் எனத் தீர்மானித்துக் கொண்டாள். வந்த அன்று முதலில் அவர்களுக்குக் கற்பித்த பாடமும் அதுதான். ஆனால் அவள் எதிர்பார்த்ததற்கும் மேலாக வெகு சீக்கிரமாய்த் தங்கள் சமத்காரத்தைச் செய்கையிலே நிரூபித்துக் காட்டி விட்டனர் மாணவிகள். இரண்டாம் நாள் காலை வகுப்புக்குள் நுழைந்த ஜயந்தி ஆச்சரியத்திலே ஆழ்ந்து போனாள். பளபளவென்று எண்ணெய் தடவி வாரி விடப்பட்ட பின்னலும் சுத்தமான சட்டையுமாகக் காட்சி அளித்தனர் மாணவிகள். ஜயந்தியின் புத்திமதிகள் அவர்களது பிஞ்சு உள்ளங்களில் வெகு சீக்கிரத்தில் நன்றாகப் பதிந்து விட்டிருந்தன. ஜயந்தி மனமகிழ்ந்து போனாள். ஆசிரியைத் தொழிலில் தனக்கு முதல் முதலில் கிடைத்த மகத்தான வெற்றி இது என்ற பெருமிதம் அவள் முகத்தில் பிரதிபலித்துக் கொண்டிருந்தது.

அன்றைய 'அட்டண்டென்ஸ்' எடுக்க ஆரம்பித்தாள் ஜயந்தி. வரிசையாக ஒவ்வொரு பெயராகக் கூப்பிட்டுக் கொண்டு வந்தாள். "கௌரி..." பதில் குரல் வரவில்லை.

"கௌரி" என்று உரத்த குரலில் இரண்டாம் முறையாகக் கூப்பிட்டாள் ஜயந்தி.

இப்போதும் பதிலில்லை...

நிமிர்ந்து பார்த்த ஜயந்தியின் கண்கள் கௌரி என்ற மாணவி இருக்குமிடத்தைத் தேடித் தேடித் துழாவின.

"அவள் ஆப்ஸண்ட் டீச்சர். இன்னும் வரவில்லை" — என்று கணீரென்ற குரலில் பதில் அளித்தாள் முதல் வரிசையில் உட்கார்ந்திருந்த விஜயா.

அதே சமயம் வியர்க்க விறுவிறுக்க, ஓடி வந்ததால் ஏற்பட்ட இரைப்புடன் கையிலிருந்த சிலேட்டும் புஸ்தகமும் ஒரு புறம் சரிய, அவிழ்ந்த பின்னலுடன் வகுப்பறை வாசலில் வந்து நின்றாள் கௌரி என்ற ஏழு வயதுச் சிறுமி. அவள் முகத்தில் முத்து முத்தாக அரும்பியிருந்த வியர்வை கன்னத்தின் வழியே வழிந்து கொண்டிருந்தது. வேகமாய் ஓடி வந்ததால் ஏற்பட்ட இரைப்பும், படபடப்பும் அவளுக்கு இன்னும் அடங்கவில்லை. வகுப்பறையில் ஆசிரியையைக் கண்டதும் கௌரியின் இதயம் பயத்தில் வேகமாகப் படபடவென்று அடித்துக் கொண்டது. கண் இமைகள் துடி துடித்தன. ஜயந்தியை நோக்கிப் பரிதாபமாக விழித்தாள் கௌரி.

கௌரியின் அலங்கோலமான நிலையைக் கண்டு ஜயந்திக்குக் கோபம் பொங்கிக் கொண்டு வந்தது. அந்த வகுப்பிற்கே ஒரு திருஷ்டிப் பரிகாரம் போல் விளங்கிய அவள் தோற்றம் அவள் கோபத்தைப் பன்மடங்கு ஆக்கிற்று. கௌரியைத் தலையோடு கால் வரை ஒருமுறை உற்றுப் பார்த்து விழித்தாள். அந்தப் பார்வையின் முன் கௌரி பனியாடு போல் தலையைக் கவிழ்த்துக் கொண்டாள்.

"கௌரி...இங்கே வா!" ஜயந்தியின் குரலில் கடுமை தொனித்தது. கால்கள் ஒன்றோடொன்று பின்னிக் கொள்ளத் தடுமாறியபடி ஜயந்தியின் அருகில் வந்து நின்றாள் கௌரி.

"ஏன் இன்றைக்கு இத்தனை நேரம்?—"

"அம்பி பாப்பாவை இத்தனை நாழி தூக்கி வைச்சிண்டிருந்தேன். நேரமாய் விட்டது" என்று திக்கித் திணறியபடியே கௌரியின் வாயிலிருந்து வார்த்தைகள் வெளிவந்தன.

"பேஷ்! அப்போ வீட்டிலேயே பாப்பாவைத் தூக்கி வைத்துக் கொண்டே இருக்கலாமே? பள்ளிக்கூடத்திற்கு ஏன் வரணும்?"

கலீரென்ற சிரிப்பொலி வகுப்பு மாணவிகளிடையே எழுந்தது. கௌரியின் உதடுகள் அவமானத்தினால் துடி துடித்தன.

"உங்க அம்மாவுக்குத் தலை பின்னிவிடக் கூட நேரமில்லையா?......நான் அன்றைக்குச் சொன்னது ஞாபகம் இருக்கா இல்லையா? உன்னைப் போல் கலைந்த தலையும் வேஷமுமாய் வகுப்பிலே யாராவது வந்திருக்காளா, பார்! உனக்கு வெட்கமாயில்லை?" கடுமையான குரலில் அதட்டினாள் ஜயந்தி.

கௌரியின் கண்களில் கண்ணீர் ஊற்றாகப் பெருகிற்று.

"டீச்சர். எனக்கு ...எனக்கு.........."

அதற்குமேல் கௌரியால் பேச முடியவில்லை. துக்கம் அவள் தொண்டையை அடைத்துக் கொண்டது.

"டீச்சர், அவளுக்கு அம்மா இல்லை டீச்சர். அவ அம்மா செத்துப் போயிட்டா, சித்திதான் இருக்கா!"—முதல் வரிசையிலிருந்த விஜயா பளிச்சென்று ஜயந்திக்குப் பதில் சொன்னாள்.

ஜயந்தி திடுக்கிட்டுத் திரும்பினாள். விஜயாவின் வார்த்தைகள் அவள் உள்ளத்தில் ஆயிரம் தேள்கள் கொட்டிவிட்ட உணர்ச்சியை ஏற்படுத்தின. மறு கணம் அவள் முகம் மாறுதல் அடைந்தது. ஏனோ அவள் உள்ளம் பாகாய் நைந்து உருகியது. கனிவும் கருணையும் கலந்த குரலில் "கௌரி, கிட்ட வா!" என்று அன்பு பொங்க அழைத்து அணைத்துக் கொண்டாள். அவள் கைகள் கௌரியின் முதுகைத் தடவிக் கொடுத்தன. அவள் கண்ணீரைத் துடைத்தபடியே "கௌரி, அழாதே! நாளையிலிருந்து தலையைப் பின்னிக்கொண்டு அழகாகப் பள்ளிக்கூடத்திற்கு வரணும், தெரிந்ததா?" என்று கௌரியைச் சமாதானப் படுத்துவதில் முனைந்தாள் ஜயந்தி.

திடீரென்று ஆசிரியையினிடம் தோன்றிய மாறுதலையும், அவள் அன்பான அரவணைப்பையும் கண்டு திகைத்து விழித்தாள் கௌரி.

"சித்தியைப் பின்னி விடுன்னு கேட்டா கோவிச்சண்டு அடிக்க வரா டீச்சர். எப்பவும்




பாப்பாவையே தூக்கி வச்சுக்கச் சொல்லு" என்று தேம்பியபடியே பதிலளித்தாள் கௌரி.

ஆயாசம் நிறைந்த அவளது வார்த்தைகள் ஜயந்தியின் நெஞ்சைத் தொட்டன.

"சித்தி பின்னி விடாவிட்டால் போகிறது. இனிமே பள்ளிக்கூடத்திற்குச் சுருக்க வந்து விடு. நான் பின்னி விடுகிறேன்!" என்று கௌரியை அழைத்துக் கொண்டு வெளியேறினாள். இனந்தெரியாத குதூகலத்துடன் டீச்சர் கையால் பின்னிக் கொள்ளப் போகும் சந்தோஷம் பொங்க ஜயந்தியைப் பின் தொடர்ந்து குதித்தோடினாள் கௌரி.

* * *

ஜயந்திக்குப் பதினெட்டு வயதிருக்கும். ஒல்லியாகக் கொடி போன்ற சரீரம். நல்ல சிவப்பு. வசீகரமான தோற்றம். இளகிய மனசுடையவள். ஜயந்தியின் அப்பா சிவராமய்யர் ஒரு ரிடையர்ட் போஸ்டு மாஸ்டர். அவருடைய இரண்டாவது பெண்தான் ஜயந்தி. ஜயந்தியின் மூத்த சகோதரி சாரதா ஜயந்தியை விட ஏழெட்டு வயது பெரியவள். அவளை நல்ல இடத்தில் விவாகம் செய்து கொடுத்திருந்தார் சிவராமய்யர். ஆனால் சாரதாவின் துரதிர்ஷ்டம் அவளுடைய மாமியார் பொல்லாதவளாக வந்து வாய்த்து விட்டாள். தாயற்ற சாரதாவைப் பாடாய்ப் படுத்திப் பம்பரமாய் ஆட்டி வைத்தாள். மேலும் சாரதா தாயற்ற பெண் ஆனதால் அவளுக்குப் பிறந்தகத்தில் நாதியில்லை. தன் இஷ்டம்போல் சீர் வரிசைகளில் சம்பந்தி அம்மாளிடம் ஒன்றும் கறக்க முடியவில்லை என்ற குறை அதிகமாயிருந்தது. அதனால் அவள் குறை கோபதாபமெல்லாம் சாரதாவின் மீது கொடுமைகளாக உருவெடுத்தன. சாரதா ஒரு வாயில்லாப் பூச்சி. எல்லாவற்றையும் பொறுமையுடன் சகித்து வந்தாள். அவள் கணவன் ஒரு அப்பாவி. அவன் சாரதாவின் நிலைக்குப் பரிதாபப் படவில்லை. அம்மாவுக்குப் பயந்து அவள் இஷ்டம்போல் ஆடி வந்தான். அதன் முடிவு...? விவாகமான நாலு வருஷத்திற்குப் பின் கருத் தரித்த சாரதா பிரஸவ அறையிலேயே கண்ணை மூடிவிட்டாள். அன்பற்ற கணவனாகவேயிருந்த சங்கரன் சாரதாவின் பிரிவுக்காக அதிகம் பாராட்டி வருத்தப்படவில்லை. சாரதாவின் மாமியாரோ தன்னுடைய சொத்து என்று சொந்தமும் உரிமையும் பாராட்டிக் கொண்டு பிறந்த குழந்தையை —





● சங்கீத பூஷணம் ஸ்ரீ பி. வி. கணேச ஐயரின் சிஷ்யையான குமாரி பிரேமாவின் சங்கீதக் கச்சேரி மே மாதம் இருபத்தைந்தாம் தேதி கரூர் நாரத கான சபாவில் நடந்தது. இது இடென்று சங்கீத உலகில் முன்னுக்கு வரக்கூடிய இளம் பாடகி என்பதற்கு எடுத்துக் காட்டாக அன்று குமாரி பிரேமாவின் கச்சேரி அமைந்திருந்தது.

எடுத்துக் கொண்டுபோய் விட்டான். அக்கா சாரதாவின் துயர் நிறைந்த இல்வாழ்க்கையும், அதற்குக் காரணபூதமான அத்திம்பேரின் கல்நெஞ்சும், அன்பற்ற நடத்தையும் ஜயந்தியின் வாழ்வில் ஒரு புது அத்தியாயத்தையே ஆரம்பித்து வைத்தன. ஆண் வர்க்கத்தையே வெம்பாக வெறுத்தாள். தன் அக்கா அனுபவித்த சுகத்தை நினைவிலிருத்தக் கல்யாணமே செய்து கொள்வதில்லை என்று ஒரேயடியாகத் தீர்மானித்துச் சபதம் செய்து கொண்டாள். ஜயந்தியின் அப்பா எவ்வளவோ சொல்லிப் பார்த்தார். ஆனால் ஜயந்தி ஒரே பிடிவாதமாக மறுத்துவிட்டாள்.

சாரதாவின் மறைவுக்குப் பின், முற்றுப் புள்ளி வைத்திருந்த தன் படிப்பை மீண்டும் எஸ். எஸ். எல். ஸி. வரை தொடர்ந்து படித்தாள். இரண்டு வருஷ உபாத்தியாயினி 'டிரெயினிங்'கும் முடிந்தது. எண்ணற்ற கள்ளம் கபடில்லாத இதயமுடைய குழந்தைகளின் நடுவிலேயே தன் வாழ்க்கை ஓடத்தைச் செலுத்த ஜயந்தி திட்டமிட்டாள். முதல் முதலாகப் புன்னைவனம் போர்டு ஹைஸ்கூலின் இரண்டாம் வகுப்பு அவளை ஆசிரியையாகக் கைநீட்டி வரவேற்றது.

ஒவ்வொரு நாளும் ஒரு புது அனுபவமாயிருந்தது ஆசிரியை வாழ்க்கை அவளுக்கு. ஆனால் இன்று கௌரியினால் அவளுக்கு ஏற்பட்ட அனுபவம்......

கௌரியிடம் அன்று கடினமாக நடந்து கொண்டு அவள் இதயத்தை நோகச் செய்து விட்டதைக் குறித்துச் சிந்தனைகளை நெகிழ விட்டபடி வீடு திரும்பினாள் ஜயந்தி.

குடையை மடித்துக் கொண்டு, கால் செருப்பைக் கழற்றி ரேழியில் விட்டு விட்டு, உள்ளே நுழைந்தாள். பெண்ணைக் கண்டதும் "ஏன் அம்மா ஜயந்தி, இன்றைக்கு இத்தனை நேரம்...? முகம் வாடிச் சோர்ந்திருக்கே! குழந்தைகள் ரொம்பவும் தொந்தரவு கொடுத்து விஷமம் செய்தார்களோ?" என்று கேட்டார் சிவராமன்.

"அதெல்லாம் ஒன்றுமில்லை அப்பா! குழந்தைகள் தொந்தரவு பண்ணுவதே யில்லை. நான்தான் இன்றைக்கு ஒரு மாணவியிடம் ரொம்பக் கடுமையாக நடந்துகொண்டு விட்டேன். அதிலேயிருந்து மனசே சரியா யில்லை..." என்று அன்று வகுப்பில் நடந்த சம்பவத்தை உணர்ச்சியுடன் மூச்சு விடாமல் கூறி முடித்தாள் ஜயந்தி.

"ஜயந்தி இதற்காக ஏன் வருத்தப்படுகிறாய்? முன்னாடி விஷயம் தெரியாமல் கோபித்துக் கொண்டு விட்டே......உன்னைப் போல அந்தக் குழந்தையும் அம்மா இல்லாத குழந்தை என்று தெரிந்ததும் உன் மனசு வருத்தப்பட்டிருக்கிறது. இனிமேல் அந்தமாணவியிடம் பிரியமாய்ச் சலுகையோடு நடந்து கொள். அதுதான் உன்னுடைய கடமை" என்று பெண்ணை வாத்ஸல்யத்துடன் சமாதானப் படுத்தினார் சிவராமன்.

* * *

மறுநாள் வழக்கத்தை விடச் சீக்கிரமாகவே பள்ளிக்கூடத்திற்குக் கிளம்பினாள்.

மணி அடித்து, வகுப்புத் துவங்கி, பத்து நிமிஷமாகி விட்டது. வகுப்பில் அநேகமாய் எல்லா மாணவிகளும் வந்து விட்டனர். ஆனால் கௌரியை மட்டும் காணவில்லை. ஜயந்தி ஒவ்வொரு நிமிஷமும் கௌரியை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். முதல் 'பீரியடும்' முடிந்து விட்டது. கௌரி அன்று வகுப்புக்கு வரவில்லை. ஏதோ சிந்தித்தபடி பாடத்தை நடத்திக் கொண்டிருந்தாள்.

"நீங்கதான் கௌரியின் கிளாஸ் டீச்சரா? பள்ளிக்கூடத்துக்கு நேரமாயிடுத்து. நீங்க கோபித்துக் கொள்வீர்கள். அதனால் போக மாட்டேன் என்று அழுதாள். நானே அவளைக் கொண்டு விடலாம் என்று வந்தேன்" என்று சொல்லியபடியே ஒரு கையில் கௌரியைப் பிடித்துக் கொண்டு வகுப்புக்குள் நுழைந்தார் ஒரு மனிதர்.

திடுக்கிட்டுத் திரும்பினாள் ஜயந்தி. கௌரியினுடைய தந்தை ஸ்தானத்தில் நின்று கொண்டிருந்த அந்த மனிதரைப் பார்த்ததும் அவளுக்கு உலகமே தட்டாமாலையாகச் சுற்றுவதைப் போல் தோன்றிற்று.

"யாரது......அத்திம்பேரா......?" என்று தடுமாற்றத்துடன் ஜயந்தியின் உதடுகளில் இருந்து உதிர்ந்தன வார்த்தைகள்.

"ஜயந்தி...நீயா? இங்கேயா இருக்கிறாய்?" என்று கூறியபோது அம் மனிதரின் முகத்தில் ஆச்சரியமும் ஏமாற்றமும் மாறி மாறித் தோன்றிக் கொண்டிருந்தன.

"நான்தான் அத்திம்பேரே! கௌரியை விட்டு விட்டுப் போங்கள். சாயங்காலம் வீட்டுக்கு வாருங்கள். நெம்பர் 48, சங்கர மூர்த்தி தெருவில் அப்பா இருக்கிறார். எல்லா விஷயமும் சாவகாசமாய்ப் பேசிக் கொள்ளலாம்" என்று கூறி வந்தபோதே ஜயந்தியின் தொண்டை அடைத்துக் கொண்டது. அது ஆனந்த மிகுதியினாலா, அல்லது துக்கத்தினாலா என்று அவளுக்கே புரியவில்லை.



வீண் பெருமைக்கு ஆசைப்பட்டு, அவன் ஆடம்பரமான வீண் செலவுகளில் ஈடுபட்டிராவிட்டால் அவன் கடன் தொல்லைக்கு ஆளாகி யிருக்க மாட்டான்; பெற்ற தாயையும், கட்டின மனைவியையும், அருமைக் குழந்தைகளையும் கண்டு களித்து கொள்ளும் அளவுக்குக் கடின சித்தனாக மாறி யிருக்கவே மாட்டான்; சொல்லாமல், கொள்ளாமல் சாம்ப சதாசிவ கோஷ்டியுடன் சேர்ந்து, வீட்டைத் துறந்துவிடும் அளவுக்கு அவன் விரக்தி யடைந்திருக்கவும் மாட்டான்.

கணவன் அவளைக் கைவிடவில்லை யென்றால், அவள் சோளக் கொல்லையில் பரண் ஏறிக் கவண் வீசியிருக்க மாட்டாள்; அறுவடை செய்து அவதிப்பட்டிருக்க மாட்டாள்.

அவளது மூத்த குமாரன், "பெற்ற தாய்" படும் துயரத்தை அறியாதவனா யிருந்திருந்தால், கல்வியைக் கைவிட்டுத் தையல் இலை விற்றுத் தவித்திருக்க மாட்டான்; தம்பியிடம் தனி அன்பு இல்லாதவனா யிருந்திருந்தால் அவன் மளிகைக் கடை வைத்து வியாபாரம் செய்திருக்க மாட்டான்; விவாகம் செய்து கொண்டு பரிசமாக வந்த பத்தாயிரம் ரூபாயைத் தம்பியின் படிப்புக்கு வாரி இறைத்திருக்கவும் மாட்டான்.

அண்ணன் தனக்காகச் செய்து வரும் தியாகங்களைத் துளியேனும் உணர்ந்திருந்தால், தம்பி ஒரு ஒழுக்கங்கெட்ட பெண்ணுடன் தொடர்பு பூண்டு, கல்லூரிப் படிப்பைக் காற்றில் பறக்க விட்டு நடனம் ஆடியிருக்க மாட்டான்; கடைசியில் கொலை பாதகத்தைச் செய்திருக்கவும் மாட்டான்.

ஆனால் மேலே கூறிய சங்கடமான நிகழ்ச்சிகள் எல்லாம் நிகழவில்லை யென்றால், நாம் "பெற்ற தாயை"க் காண்பது ஏது? அவளுடைய இணையற்ற தியாக உணர்ச்சியையும் சகிப்புத்தன்மையையும் காண்பது தான் எப்படி? அத்தை மகள் தன் சின்ன அத்தானிடம் அறியாப் பருவத்திலிருந்து வளர்த்து வந்த அருமைக் காதலைத்தான் அறிந்துகொள்ள முடியுமா?

இவ்வளவையும் "பெற்ற தாய்" என்னும் படம் நமக்கு உணர்த்துகிறது.

சாதாரணமாகத் 'தாய்' என்றாலே எவ்வளவோ தியாகங்கள் செய்ய வேண்டியிருக்கிறது; எத்தனையோ சிரமங்களை அனுபவிக்க வேண்டி யிருக்கிறது. அப்படியிருக்க, "பெற்ற தாயா"க இருந்துவிட்டால் கேட்க வேண்டுமா?

அம்மம்மா! ஒருத்தி "பெற்ற தாயின்" ஸ்தானத்தை அடைவதற்கு என்னவெல்லாம் கஷ்டப்பட வேண்டி யிருக்கிறது! இத்தனை நாளாக, குழந்தையைப் பெற்றவள் "பெற்ற தாய்" என்று நினைத்திருந்தேன். இந்தப் படத்தைப் பார்த்த பிறகு, அது மட்டும் போதாது என்று தெரிந்தது.

அவள் தன் கன்னத்தில் அடி வாங்கிக் கொண்டதோடு நில்லாமல், பிறர் கன்னங்களையும் பதம் பார்க்க வேண்டி யிருந்தது; உற்றாரிடமும் உறவினரிடமும் கர்ண கடூரமான ஏச்சுக்களையும் பேச்சுக்களையும் வாங்கிக் கட்டிக்கொள்ள வேண்டி யிருந்தது; மகன் சுகபோக வாழ்க்கை நடத்தியும், அவனைப் பெற்ற தாயாகிய அவள் மாடு கன்றுகளுடன் மாட்டுக் கொட்டிலில் வாழ வேண்டி யிருந்தது; கடைசியில் மகன் செய்த கொலைக் குற்றத்தை ஏற்றுக்கொண்டு அதற்குரிய தண்டனையையும் அடைய வேண்டி யிருந்தது.

யாராக வேண்டுமானாலும் இருந்துவிட்டுப் போகலாம். ஆனால் பெற்ற தாயாக மட்டும் இருக்கக் கூடாது என்றே தோன்றுகிறது.

ஸ்ரீமதி ஜி. வரலக்ஷ்மி இவ்வளவு சிரமமான "பெற்ற தாய்" பாத்திரத்தில் நடித்திருக்கிறார். பத்தாயிரம் ரூபாய் பரிசம் கொடுத்த தன் மாட்டுப் பெண்ணின் சொல்லம்புகளைத் தாங்கும்போதும், இரண்டாவது மகன் செய்த திருட்டுக் குற்றம் சந்தர்ப்பக் கோளாறினால் அவள்மீது சுமத்தப்பட்ட போதும், பெற்ற மகன் அவள்மீது சந்தேகித்த போதும், மாட்டுக் கொட்டிலில் வாழ்ந்த போதும், தன் மகனை மணக்க விரும்பிய கௌரியைக் கிணற்றில் விழாமல் காப்பாற்றிய போதும் அவர் நடிப்பு நன்றா யமைந்திருக்கிறது.

இந்தப் படத்தைப் பார்த்து விட்டு, 'ஏன் அப்படி நேர்ந்தது? அந்தச் சம்பவம் நிகழ



முடியுமா? அதன் காரணம் என்ன? இந்த நிகழ்ச்சி அவசியந்தானா?' என்றெல்லாம் அநாவசியக் கேள்விகள் கேட்டுக் கஷ்டப் படக் கூடாது. சினிமாக் கதை என்பதை மனத்தில் நன்றாய்ப் பதிய வைத்துக்கொண்டு படம் பார்த்தால் மேற்படி கேள்விகள் நம் மனத்தில் எழாமல் இருக்கும். அப்படியே எழுந்தாலும் அவற்றை நினைத்து மனசைக் குழப்பிக் கொள்ளாமல் இருக்கும் அளவுக்குச் சலிப்புத் தன்மை எங்கிருந்தோ வந்துவிடும். மூன்று மணி நேரத்துக்கு மேல் படம் பார்த்தும் அத்தகைய சலிப்புத் தன்மை வரவில்லை யென்றால் அது எக்கேடாவது கெட்டுத் தொலைந்து போகட்டும்!

கதாநாயகனும் கதாநாயகியும், மாடு, மனையை விட்டு, மக்கள், சுற்றத்தை விட்டு, வீடு வாசல்களை விட்டு, கடைசியில் படத்தையும் விட்டுத் தொலைந்து போனால்தான் படம் பார்ப்பவர்கள் கொட்டகையை விட்டுத் திருப்தியுடன் எழுந்து போவார்கள் என்பதற்காகவே அவர்களை இத்தனை சிரமங்களுக்கு உள்ளாக்குகிறார்கள் போலும்.

இதுவரையில் தமிழ்ப்படக் கதாநாயக, கதாநாயகிகள் வறுமை காரணமாக, காதல் காரணமாக, சந்தேகப் பேயின் தூண்டுதல் காரணமாக, பொறாமைப் பேயின் போராட்டம் காரணமாக, தாங்கள் புரிந்து விட்ட கோரக் கிருத்தியங்கள் காரணமாக ஓடி, ஒருவருக்கும் தெரியாமல் மறைந்து போய்க் கடைசியில் வெளிப்படுவார்கள்.


இந்தப் படத்துக் கதாநாயகன், படம் பார்ப்பவர்களின் அநுதாபத்தையோ, ஆதரவையோ ஒரு சிறிதும் எதிர்பாராமல் ஓடி மறைந்து விடுகிறான்! நல்ல வேளையாக, அப்படி ஓடியவன் சிறைச்சாலையில் கடைசியில் தோன்றித் தன் மனைவியை, தன் மக்களைப் "பெற்ற தாயை"க் காண்கிறான். அவனுடைய பெருமையையும், பொறுமையையும், தியாகத்தையும் கண்டு மகிழ்ந்து மௌனம் சாதித்து விடுகிறான். ஒரு பாட்டுக் கூடப் பாடவில்லை!

ஆனால் அவன் தியாகத்தையும் மெச்சத்தான் வேண்டியிருக்கிறது! அவன் அப்படி வெளியேறாவிட்டால், அவன் மனைவிக்குப் "பெற்ற தாயி"ன் கிடைத்தற்கரிய பூஜ்ய ஸ்தானம் கிடைத்திராது அல்லவா!

"பெற்ற தாய்" படத்தின் மற்ற சிறப்பான அம்சங்களையெல்லாம் வெள்ளித் திரையில் கண்டு களிக்கலாம்!

ஸ்ரீ சஞ்சீவிப் பிள்ளை தம்பதிகள்

ஒரு காலத்தில் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் உத்தியோகம் இந்தியர்கள் கனவிலே கூடக் கருதமுடியாத பெரிய பதவியாக இருந்தது. அந்த உத்தியோகத்துக்கு முதன் முதலில் நியமிக்கப்பட்டவர் ஸ்ரீ டி. ஜி. சஞ்சீவிப் பிள்ளை எம். ஏ. அவர்கள். 1922-ல் உதவி போலீஸ் சூபரின்டெண்டாக நியமனம் பெற்று, போலீஸ் இலாகாவில் திறமைசாலி யென்று பெயர் பெற்று, படிப்படியாக அந்த இலாகாவில் உன்னத ஸ்தானத்துக்கு வந்தவர். புது டில்லியில் சுதந்திர சர்க்கார் ஏற்பட்டதும் இரகசியப் போலீஸ் இலாகாவின் டைரக்டராக நியமனம் பெற்றுக் குற்றங்களைக் கண்டு பிடிக்கும் துறையில் பல புதிய முறைகளை அமுலுக்குக் கொண்டு வந்தவர். இங்கிலாந்தில் பிரசித்திபெற்ற ஸ்காட்லண்ட் யார்ட் என்னும் இரகசியப் போலீஸ் காரியாலயத்தில் குற்றங்களைக் கண்டு பிடிக்கநாய்களைப்பழக்குவதுண்டு. அந்த முறையைப் பின்பற்றிச் சென்னையில் ஸ்ரீ டி. ஜி. சஞ்சீவிப் பிள்ளை முதன் முதலாகக் குற்றங்களைக் கண்டு பிடிப்பதற்கு நாய்களைப் பழக்கி அதில் வெற்றியும் கண்டார்.



உத்தியோகத்திலிருந்து விலகிக் கொள்வதற்குப் பூர்வாங்கமாக விடுமுறை பெற்ற ஸ்ரீ டி. ஜி. சஞ்சீவிப் பிள்ளையும் அவருடைய மனைவியாரும் இங்கிலாந்துக்குப் பிரயாணமானபோது பல நண்பர்கள் அவர்களை ஆகாச விமான நிலையத்தில் வழி அனுப்பினார்கள்.

ஸ்ரீ சஞ்சீவிப் பிள்ளை உத்தியோகத்திலிருந்து விலகிக் கொண்ட பிற்பாடும் அவருடைய அநுபவமும் ஆற்றலும் இந்நாட்டுக்கு வேறு துறைகளில் பயன்படும் என்று நம்புகிறோம்.



திக் விஜயம்

சீதா

ரொம்ப ரொம்பப் பழைய காலத்தில் மகதபுரி என்றொரு ராஜ்யம் இருந்தது. அந்த மகதபுரியை ஆண்டு வந்த அரசன் ரொம்பவும் நல்லவன். ஜனங்கள் மீது மிகவும் பிரியமாகவும், அவர்களுக்கு எப்பொழுதும் நல்ல காரியங்களே செய்தும் வந்தான். இவ்வளவு நல்ல அரசனுக்கு வெகு நாட்கள் வரை குழந்தைப் பேறே இல்லாமலிருந்தது. 'நமக்குப் பிறகு இந்த ராஜ்யத்தை ஆளுவோர் யாருமில்லையே' என்ற கவலை அரசனை வாட்டி வதைத்தது.

ஒரு நாள் ராஜாவின் அரண்மனைக்கு ஒரு முனிவர் வந்தார். அவர் வந்திருக்கிறார் என்று அறிந்தவுடனேயே மன்னன் அரண்மனை வாயிலுக்கு வந்து, முனிவரை வரவேற்றான்.

முனிவர், "உன் அரண்மனை வாழ்வை நோக்கவும், உன் அரண்மனையில் அறுசுவை உண்டி யருந்தவும் இங்கு நான் வரவில்லை. நீ நீண்ட நாட்களாகக் குழந்தையில்லையே என்று வருந்துகிறாயே என்று அறிந்துதான் வந்தேன். உனக்கு வீர தீரனான புதல்வன் வேண்டுமா? அல்லது உன் சொற்படியெல்லாம் கேட்டு அடங்கி ஒடுங்கிக் கிடக்கும் பரம சாதுவான பிள்ளை வேண்டுமா?" என்று கேட்டார்.

"முனிபுங்கவரே! வீரர்களில் எல்லாம் சிறந்த வீரனாக விளங்கக் கூடிய புதல்வனையே எனக்கு அனுக்கிரகிப்பீர்களாக" என்றான் மன்னன்.

உடனே முனிவர், ஒரு மாங்கனியைத் தமது மந்திர சக்தியால் வரவழைத்தார். "இதை உன் மனைவியிடம் கொடுத்துச் சாப்பிடச் செய்! வீரர்களில் சிறந்த வீரனான புதல்வன் உனக்குப் பிறப்பான்" என்று கூறி முனிவர் மறைந்து விட்டார்.

இதோ நிற்கிறானே, பரந்த மார்பும் நீண்ட கைகளும், அகன்ற நெற்றியும், கூர்மையான பார்வையும் கொண்ட இளைஞன். இவன் யார் என்று தெரிகிறதா?... இவன்தான் மகதபுரியின் இளவரசன் விக்கிரமசிம்மன். மகதபுரி மன்னன் நீண்ட நெடுங்காலம் தவம் புரிந்து பெற்ற அருமைப் புதல்வன்.

இந்த வீர விக்கிரமன் மனத்தில் ஒரு ஆசை கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருக்கிறது. அது என்ன தெரியுமா? பெரும் படை திரட்டி திக்விஜயம் சென்று ஐம்பத்தாறு தேசத்து ராஜாக்களையும் வெற்றி கொள்ள வேண்டும் என்பதுதான்! இதற்கு மக்கள் யாவரும் துணை நின்றனர்.

அவன் தந்தையான மகதபுரி மன்னனும் "யுத்தகளத்திலன்றி மற்ற எவ்விடத்திலும் எந்த ஜனங்களையும் துன்புறுத்தாதே" என்று ஆசீர்வதித்து வழியனுப்பினான்.

* * *

விக்கிரமசிம்மனுடைய புகழ் நாளுக்கு நாள் வளர்ந்தோங்கி வந்தது. எந்த தேசத்தின் மீது படையெடுத்துச் சென்றாலும், முடிவில் வெற்றி என்பது விக்கிரமனுக்கே ஏற்பட்டு வந்தது!

இவ்வாறு, ஐம்பத்தைந்து தேசங்களை வெற்றி கொண்ட விக்கிரமன் கடைசியாக மாளவ தேசத்தை யடைந்து, கோட்டையை முற்றுகை யிட்டான். முப்பது நாள், நாற்பது நாள், இரண்டு மாசம், மூன்று மாசம், என்று நாட்கள் சென்று கொண்டிருந்தனவே தவிரக் கோட்டைக்குள்ளிருந்தவர்கள் பணியவுமில்லை, வெளியில் வந்து சண்டையிடவும் முன் வர

வில்லை. ஆனால் கோட்டைக்குள் இருக்கும் ஆகாரம், உணவுப் பண்டங்கள் எத்தனை நாளைக்கு வரும்? வெளியிலிருந்து, உணவு போனால் அல்லவா உள்ளே யிருப்பவர்கள் சௌகரியமாக வாழ முடியும்? பாவம்! ஜனங்கள் வாடி மெலிந்து வந்தனர்.

ஒருநாள் மாளவ தேசத்தின் மக்கள் படும் அல்லோல கல்லோலத்தைப் பார்த்தான் இளவரசன் விக்கிரமன். அவன் மனம் தாங்க வில்லை. தன் படையினரைக் கூப்பிட்டான். "இனி முற்றுகை கிடையாது! இனி நாம் பின் வாங்கி நம் நாட்டுக்குச் செல்கிறோம்" என்றான்.

இதைக் கேட்ட படைத் தலைவர்கள், வீரர்கள் எல்லோரும் அப்படியே ஆச்சரியப் பட்டுப் போய் விட்டனர்.

"என்ன! பின் வாங்குவதா? இந்த ஐம்பத்தாறுவது தேசமாகிய மாளவ தேசத்தை வெற்றி கொள்ள வில்லை என்றால் இவ்வளவு நாட்கள் இத்தனை சிரமப் பட்டுப் பெற்ற வெற்றி யெல்லாம் வீணாகி விடுமே! திக் விஜயம் பூர்த்தி பெற்றதாகாதே!" என்றனர்.

விக்கிரமன், "திக் விஜயம் நிறைவு பெறா விட்டாலும் பரவாயில்லை! நலிந்துள்ள பகைவன் மீது போர் தொடுத்து இன்னும் கஷ்டப் படுத்துவது என்னுடைய யுத்த தர்மமல்ல. திரும்புங்கள் போவோம்" என்றான்.

மனத்தில் மிகுந்த அதிருப்தியுடன், சேனை வீரர்கள் திரும்பினர்.

கொஞ்ச தூரம் கூடப் போயிருக்க மாட்டார்கள், குதிரைகளின் காலடிச் சத்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தனர். யாரோ வீரர்கள் போல் தெரிந்தது.

நெருங்கியவுடன், அவர்களைத் தலைமை தாங்கி நடத்தி வருபவன் மிகவும் உயர் குலத்தைச் சேர்ந்த வீரன்போல் தெரிந்தது. அவன், விக்கிரமனை நெருங்கியதும் குதிரையை விட்டிறங்கி, விக்கிரமன் காலடியில் வீழ்ந்து வணங்கினான். "நான் தான் மாளவ தேசத்து மன்னன். சற்று முன்புதான், தங்களுடைய பரந்த மனப் பண்பைப் பற்றிக் கேள்விப் பட்டேன். 'நலிந்தோரை இன்னும் நலியச் செய்வது தர்மமல்ல' என்று திரும்புகிறீர்கள் என்று கேள்விப் பட்டேன். உடனே தாங்கள் அல்லவோ சுத்த வீரர் என்பதை யறிந்தேன். இனி நானும், என் நாட்டு மக்களும் தங்களுக்குக் கீழ்ப்படிந்தவர்கள்" என்றான்.

இப்படி விக்கிரமன் அன்பினால், ஐம்பத்தாறுவது தேசத்தையும் வெற்றி கொண்டு தன் திக் விஜயத்தைப் பூர்த்தி செய்தான். ஆனால் கடைசியில் பெற்ற வெற்றி அன்பினால் பெற்றதல்லவா? அதனால் அவன் பெயர் இன்றளவும் நின்று வருகிறது.

விஜயாவின் விஜயம்




'விஜய' என்னும் தமிழ் வருஷப் பெயரைச் சென்னை நகரில் புதிதாக விடப் பட்டிருக்கும் பஸ்ஸுக்கு ராஜாஜி நாமகரணம் செய்திருக்கிறார். இந்த நவீன பஸ், குரோம்பேட்டை சர்க்கார் பஸ் தயாரிக்கும் தொழிற் சாலையில் புதியமுறையில் கட்டப் பட்டுள்ளது. பொது ஜனங்கள் போக்கு வரத்துச் சாதனத்துக்கு இவ்வித நூதனமான முறையில் அமைக்குள்ள பஸ், இந்தியாவில் எந்தப் பகுதியிலும் இதுவரையில் விடப் பட்டதில்லை.

விஜயாவின் சிருஷ்டிக்கு மூல காரண புருஷர் முதன் மந்திரி ராஜாஜிதான். சுமார் மூன்று மாதங்களுக்கு முன், ஒரு இரட்டை மாடி பஸ் 'டபிள் டெக்கரை' ராஜாஜி பார்வை யிட்டார். பதினைந்தரை அடி உயரமான அந்தப் பஸ்ஸைச் சென்னையில் ஓட்டக் கூடாது என்று கூறி விட்டார். ஏனெனில் அது ஓடுவதற்கு அநேக ஸ்தாவில் மரக் கிளைகளை வெட்ட வேண்டி இருந்தது. தொங்கும் டெலிபோன், மின்சாரக் கம்பிகளும் சில இடங்களில் டிராம் கம்பிகளும் உயரத் தூக்க வேண்டி இருந்தது. அதனால் ஆகும் செலவையும் அனாவசிய வேலைகளையும் தவிர்ப்பதற்காகவே ராஜாஜி இரட்டை மாடி பஸ் சென்னையில் விடவேண்டாம் என்று கூறி விட்டார். அதற்குப் பதில் "இவ்வளவு உயரமில்லாமல், ஆனால் அதிக பிரயாணிகளைச் சௌகரியமாக ஏற்றிச் செல்லக் கூடிய ஒரு பஸ்ஸை யோசனை செய்து தயார் செய்யுங்களேன்" என்று டிரான்ஸ்போர்ட் கமிஷனர் ஸ்ரீமாத்யூவிடம் ராஜாஜி கூறினார். அவர் கூறியபடி சிரத்தையுடன் தயார் செய்ததுதான் இந்த விஜயா பஸ்.

இரட்டை மாடி பஸ்ஸுக்கும் சாதாரண பஸ்ஸுக்கும், நடு ஸ்தானம் வகிப்பதால் இதற்கு 'ஹாப் டெக்கர்' அரை அடுக்கு பஸ் என்று பெயர் வழங்கப்படுகிறது. இதன் உயரம் பன்னிரண்டு அடிதான். சாதாரண பஸ்ஸை விடச் சுமார் இரண்டு அடிதான் அதிக உயரம். இரட்டை மாடி பஸ்ஸைப் போல் நடுவில் ஒரு உத்தரமோ மாடியோ மாடிப் படியோ இல்லாதது ஒரு விசித்திர அமைப்பு. நடுவேயுள்ள 13 அங்குல உயரமுள்ள சிறிய மேடையிலிருந்து ஒருபடி இறங்கினால் கீழடுக்கில் ஸீட்டுகளும், ஒரு படி மேல் ஏறினால் மேலடுக்கு ஸீட்டுகளும், வெகு அழகாகவும் சௌகரியமாகவும் சாதுர்யமாக அமைக்கப்பட்டிருக்கின்றன. பஸ்ஸின் பின் பகுதியில் ஸ்திரீகளுக்குப் பிரத்தியேக இடங்கள் ஏற்பட்டிருக்கின்றன. மொத்தம் அறுபது பிரயாணிகள் சௌகரியமாக உட்கார்ந்து செல்லலாம்.

'விஜயா' பஸ் இந்தியாவின் மற்ற ராஜ்யங்களில் பரபரப்பை உண்டு பண்ணி இருக்கின்றதாம். பம்பாய், டில்லி, கல்கத்தா, ஹைதராபாத் முதலிய இடங்களில் இனி இரட்டை மாடி பஸ்ஸை மாற்றி 'விஜயா' பஸ்ஸின் மாதிரியையே அனுஷ்டிப்பார்கள் என்று தோன்றுகிறது. ஏனெனில் இது உயரம் குறைவு, பளு குறைவு. சாய்ந்து விடும் என்ற பயமில்லை. ஒரு காலன் டீஸல் எண்ணெய்க்கு 'விஜயா' அதிகமான மைல் ஓடும். ஒரு கண்டக்டர் போதும். ஆகையால் விஜயாவின் விஜயம் டிரான்ஸ்போர்ட் உலகிலேயே ஒரு புதுமையான மாறுதலை ஏற்படுத்தி விட்டது.



ஸ்ரீ எஸ். சுந்தரேசன்

ராஜாஜி கூறிய யோசனையைக் காரியத்தில் நடத்திக் காட்ட வேண்டுமென்று பல தினங்கள் இரவு பகல் சிந்தித்துப் பிளான் போட்டுப் பரீட்சைகள் செய்து சோதனைகள் நடத்திக் கடைசியில் 'மகத்தான வெற்றி' என்று சொல்லக்கூடிய வண்ணம் சாதனை செய்தவர், குரோம்பேட்டையிலுள்ள சர்க்கார் பஸ் தொழிற்சாலை மானேஜர் ஸ்ரீ எஸ். சுந்தரேசன். ஸ்ரீ சுந்தரேசன் அவர்களையும் அவருக்குப் பேருதவி செய்து வெற்றியில் பங்கு கொண்ட 'போர்மான்' முதலிய நுட்பத்

தொழிலாளி சகோதரர்களையும் முன் பக்கத்தி லுள்ள படங்களில் காணலாம்.

பஸ்ஸின் மொத்த உயரம் அதிகமாகாவண்ணம், அடுத்தடுத்து மேலும் கீழுமாக ஆசனங்களை அமைத்துச் செய்திருப்பது இந்த 'விஜயா' பஸ்ஸின் விசேஷ அம்சமாகும். கீழ் ஆசனங்களில் உட்கார்ந் திருப்பவர்கள் எழுந்திருக்கும்போது தலையில் இடித்து விடுமோ என்ற பயம் உண்டா கிறது. ஆனால், தலை இடிப்பது கிடையாது. தலை இடிக்க முடியாதபடி மேல் தட்டுக்களின் முனைப் பகுதிகளை வளைத்துச் செய்திருக்கும் சாமர்த்தியத் தைப் பெரிதும் பாராட்ட வேண்டும்.

மழை பெய்யும்போது ஜன்னல்களை அவற்றின் பிளாஸ்டிக் அடுக்குத் தொடர்க் கதவுகளினால் மூடி விடலாம். மழை இல்லாதபோது திறந்து விட்டால் குபு குபுவென்று காற்று அடிக்கும். ஜன்னல்கள் மூடியிருந்தாலும், ஓரளவு காற்று உள்ளே வந்து கொண்டிருக்கும்.

கீழ் ஆசனங்களில் உள்ளவர்களுக்கு மேலே உள்ளவர்களின் கால்களைப் பார்த்துக் கொண் டிருக்கும் அவசியம் நேராமல் செய்திருப்பது இன்னொரு அபூர்வமான ஏற்பாடு.

விஜயா பஸ் ஓடும் சாலைகளில், ஜனங்கள் முன்னால் வரும் பஸ்களை விட்டுவிடுகிறார்கள்! சிறிது நேரம் காத்திருந்த பின்னர் விஜயா பஸ் வந்ததும் அதில் ஏறுகிறார்கள்!

தென்னிந்தியர்கள் அறிவிற் சிறந்தவர்கள் என் பது பிரசித்தமானது. தென்னிந்தியர்களின் அறி வுத் திறமையோடு நுட்ப சாஸ்திரப் பயிற்சியும் கைத்திறமையும் சேர்ந்து விட்டால் எவ்வளவு அரிய பெரிய காரியங்களைச் சாதிக்கலாம் என்ப தற்கு விஜயா பஸ் ஓர் சிறந்த உதாரணமாகும்.

<u>வட்ட மேஜை</u>

குழந்தைக் குலத்துக்கு விடுதலை

அன்புடன் வளர்க்கும் தங்கள் குழந்தைகளின் அறிவு வளர்ச்சியில் அக்கறையுள்ள பெற்றோர்கள் யாவரும் மனமுவந்து புதிய கல்வித் திட்டத்தை வரவேற்பார்கள். இந்தத் திட்டத்தை அமுலுக் குக் கொண்டு வந்து நடத்தச் சென்னை அரசாங்கம் முன் வந்தது, நம் குழந்தைகளின் பாக்கியமே.

பல மணி நேரம் குழந்தைகளைப் பள்ளிக்கூடத் தில் சித்திரவதை செய்வது பெரும் அநீதி என்பதும் பல ஆண்டுகள் பள்ளியில் அவஸ்தைப்பட்டும் மனதில் ஒன்றுமே பதிவதில்லை என்பதும் நம்மில் பெரும்பாலோர் அநுபவ பூர்வமாக அறிந்ததோர் உண்மை. இதைத் தவிர பல மனக்கோளாறுகள் வேறு ஏற்பட்டு விடுகின்றன.

புதிய திட்டப்படி, ஒருவேளைதான் பள்ளியில் குழந்தைகள் தங்குவார்கள். மீதி நேரங்களில் சமூகத்துக்கு ஆதாரமான தொழில்களில் ஈடுபட் டுள்ளவர்களுடன் பழகுவார்கள். அவர்கள் செய் யும் காரியங்களைக் கவனிப்பார்கள். இயற்கையாக வளர்கின்ற அறிவு தடைப்படாது. பல விஷயங்கள் தாமாகவே மனதில் பதிந்து விடும்.

வார்த்தைகளைப் படிப்பதற்கு முன் பொருளை உணர்வார்கள். பிறகு வார்த்தைகளையும் எழுத் துக்களையும் கணக்கையுமே சுலபமாகச் சொல்லிக் கொடுத்து விடலாம்.

Applied Science என்றும் Pure Science என்றும் சொல்லப்படும் இயற்கைக்கு முரணான வேறுபாடுகள் எல்லாம் தாமாக மறைந்து விடும். குழந்தைகள் விஞ்ஞானம் உண்மை யாகவே தெரிந்து கொள்வார்கள். இயற்கை யுடன் இசைந்து வாழ்ந்து அழகுணர்ச்சி பெறு வார்கள். இதைக் காட்டிலும் உயர்ந்த கல்வி லக்ஷ்யம் வேறென்ன இருக்க முடியும்!

டி. கிருஷ்ணமூர்த்தி எம்.ஏ.,
கணிதப் பேராசிரியர்,
செண்ட் ஸேவியர் கல்லூரி.

பம்பாய்
19—5—53

• • •

குழந்தையின் நிலையிலிருந்து பார்த்தால், தாங்கள் குழந்தைக் குலத்துக்கு விடுதலை என்ற தலைப் பில் எழுதியுள்ள விஷயங்களை எல்லாப் பெற் றோர்களும் பரிபூரணமாக ஒப்புக் கொள்வார்கள்.

ஒரு நாளைக்கு ஐந்து மணி நேரம் வீதம் வருஷத் தில் இருநூறு நாட்களுக்கு மேல் குழந்தைகளைப் பள்ளி அறைகளில் அடைத்து வைத்தும், குழந் தைகள் தங்கள் புத்தி சாதுர்யத்தையும், சமத் காரத்தையும் அடியோடு இழப்பதில்லை என்றால், அதற்குக் காரணம், பள்ளிக்கூடங்களில் தங்க ளுக்கு ஒத்த வயதினருடன் பழகி வருவதுதான்.

'வகுப்பறை போதனை' அரை நாள் அல்லது மூன்று மணி நேரம் நடத்துவது எதேஷ்டம். மற்ற நேரத்தை, குடும்பத் தொழிலிலோ, அன்றி வேறு தொழிலிலோ செலவிடுவது என்பது தான் புதிய கல்வித் திட்டத்தின் அடிப்படைக் கொள்கை. இந்த அடிப்படைத் தத்துவம், சற்றும் சந்தேகத்துக்கு இடமின்றி மிக உயர்ந்ததாகும்; மிகவும் திருப்திகரமானதாகும். ஆகவே, இந்தத் திட்டத்தைப் பள்ளி ஆசிரியர்கள் முழு மனதுடன் ஒன்றுபட்டு வரவேற்க வேண்டும். புதுத் திட்டத் தினால் ஆசிரியர்கள் சிலர் வேலை இழக்க நேரிடுமோ என்ற சந்தேகங்களும் பயங்களும் எழலாம். சென்னை சர்க்கார் பஸ் ஊழியர்களின் கவலைக் களைந்த ராஜாஜி, வேலை இழந்த டிராம்வே தொழி லாளர் கவலைக் களைக்கும் ராஜாஜி, ஆசிரியர் களின் குழந்தைகளுக்குக் கல்வி வசதி செய்து கொடுத்த ராஜாஜி, ஆசிரியர்கள் சமூகத்துக்கே மாபெரும் கேடு விளைவிக்கக் கூடிய திட்டத்தை வகுப்பார் என்று எப்படி எண்ண முடியும்!

சில ஆண்டுகளுக்கு முன், ராஜாஜி சென்னையி லிருக்கும் ஒரு பெரிய பள்ளிக்கூடத்துக்கு விஜயம் செய்திருந்தார். அந்தப் பள்ளிக்கூடத்தின் விசால மான வராந்தா வழியாகச் சென்றபோது, பள்ளிக் கூட நிர்வாகிகளிடம் "ஏன் நீங்கள் தச்சு வேலை செய்பவர்களையும், தோல் வேலை செய்பவர்களை யும் வரவழைத்து, அவர்கள் வேலை செய்வதைக் குழந்தைகள் பார்க்கும்படி செய்யக் கூடாது! அப்படியே குழந்தைகளுக்கு ஓரளவு கைகளினால் வேலை செய்யவும் கற்பிக்கலாமே!" என்றார். குழந்தைகள் பள்ளிக்கூடத்துக்கு வரும்போதும் போகும்போதும் வழியில் கருமார் பட்டறை, குயவர் பட்டறைகளில் வேலை நடந்து கொண் டிருந்தால், குழந்தைகள் அவ்விடத்தில் நின்று பார்ப்பது யாவரும் அறிந்த விஷயம். அரை நாள் தொழில் நிபுணர் செய்யும் வேலையைப் பார்த்துக் கொண்டிருந்தால் அடுத்த அரை நாளில் சொல்லிக் கொடுக்கப்படும் விஷயத்தைச் சிறுவர்கள் கிரகிப் பதற்கு ஏற்ற மன நிலை உண்டாகி விடுகிறது! ஆகவே, ஆசிரியர்களாகிய நாம், குழந்தைகளின் பெயரால் இந்தப் புதிய திட்டத்தை முழு மன துடன் உற்சாகமாக வரவேற்போம்.

தியாகராயநகரம்
19—5—53 டி. என். ரங்கநாதன் பி.ஏ.எல்.டி.

சர்வதேச சபையின் சட்டாம்பிள்ளை

சில தினங்களுக்கு முன் ஐக்கிய நாடுகள் மகா சபையில் நிகழ்ந்த ஒரு சம்பவம் மேற்படி சபையில் உள்ள அங்கத்தினர்களைத் திணற அடித்து விட்டது. அதனால் உலக நாடுகளில் உள்ள பத்திரிகைகளும் தட்டுத் தடுமாறித் திணறிப் போயின. ஐ. நா. சபையில் இதற்கு முன் அத்தகைய சங்கடமான நிலைமை ஏற்பட்டதே இல்லை.

ஐ. நா. சபை சமீபத்தில் அதன் பொதுக் காரியதரிசியாக (Secretary General) ஒருவரைத் தேர்ந்தெடுத்தது. அவரது பெயரை உச்சரிக்க முடியாமல் அந்தச் சபை அங்கத்தினர்கள் திணறிப் போனார்கள். கடைசியாக அவர்களுடைய சங்கடத்தைப் புதிய பொதுக் காரியதரிசி தாமே நேரில் தீர்த்து வைக்க வேண்டியதாயிற்று!

ஸ்வீடன் நாட்டைச் சேர்ந்த Hammarskjold என்ற பிரமுகர் ஐ. நா. சபையின் பொதுக் காரியதரிசியாகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். அவரது பெயரை எப்படி உச்சரிப்பது என்பது மேற்படி சபை அங்கத்தினர்களுக்குத் தெரியவில்லை. கடைசியில் புதிய பொதுக் காரியதரிசியே முன் வந்து, "என் பெயரை உச்சரிப்பது உங்களுக்குக் கஷ்டமான காரியம்தான். இருந்தாலும் என்னை ஹாமர்ஷீல்ட் (Hammershield) என்று அழையுங்கள். இதற்கும் என் பெயரின் சரியான உச்சரிப்புக்கும் அதிக வேற்றுமையில்லை" என்று கூறி அங்கத்தினர்களின் சங்கடத்தை ஓரளவு தீர்த்து வைத்தார்!

* * *

இரண்டாவது உலக மகா யுத்தத்துக்குப் பின், ஐக்கிய நாடுகள் சபை ஏற்பட்டதிலிருந்து சென்ற ஏழு வருடங்களாக நார்வே தேசத்தைச் சேர்ந்த டிரைக்வ் லீ அதன் பொதுக் காரியதரிசியாக இருந்து வந்தார் என்பது சகலரும் அறிந்த விஷயம். ஆனால், சென்ற இரண்டு வருஷ காலமாக ஐ. நா. சபையில் உள்ள ருஷ்யாவும் அதன் கட்சியைச் சேர்ந்த மற்ற நாடுகளும் லீயைப் பகிஷ்காரம் செய்யத் தொடங்கின.



ஹாமர்ஷீல்ட்

இரண்டு வருஷங்களுக்கு முன் லீயின் பதவிக் காலம் முடிந்ததும், அவரே மறுபடியும் பொதுக் காரியதரிசியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அப்போது ருஷ்யா, ஐ. நா. பாதுகாப்புச் சபையைப் பகிஷ்காரம் செய்திருந்ததால், லீயின் தேர்தலுக்கு முட்டுக்கட்டை எதுவும் ஏற்படவில்லை. எனினும் ருஷ்யா பாதுகாப்புச் சபையில் இராதபோது லீ தேர்ந்தெடுக்கப்பட்டதால், அவரைப் பொதுக் காரியதரிசியாகத் தாங்கள் ஒப்புக் கொள்ள முடியாது என்று ருஷ்யப் பிரதிநிதிகள் கூறி வந்தார்கள். லீ கடைசியில் தமது பதவியை ராஜிநாமா செய்யும்படி நேர்ந்ததெனில், ருஷ்யாவின் எதிர்ப்பு எவ்வளவு தீவிரமாக இருந்திருக்க வேண்டும் என்பதை ஊகித்துக்கொள்ளலாம்.

லீக்குப் பிறகு பொதுக் காரியதரிசியாக யாரைத் தேர்ந்தெடுப்பது என்பது பற்றி ஐ. நா. சபை வட்டாரங்களில் பல மாதங்களாக விவாதம் நடந்து வந்தது. ருஷ்யா அங்கீகரிக்காத ஒருவரைத் தேர்ந்தெடுப்பதென்பது முடியாத காரியம். ஏனெனில் பாதுகாப்புச் சபையில் வரும் தீர்மானம் யாவும் அதில் நிரந்தர அங்கத்தினர்களாக விளங்கும் வல்லரசுகளால் ஏகமனதாக அங்கீகரிக்கப்படவேண்டும். ஒரு வல்லரசு அதை எதிர்த்தாலும் தீர்மானம் அச்சபையினால் நிராகரிக்கப்பட்டதாகி விடும்.

எனவே, பொதுக் காரியதரிசி தேர்தல் விஷயம் தீராப் பிரச்னையாகி விடுமோ என்று ஐ. நா. சபை அங்கத்தினர்கள் கலங்கினர்.

கடைசியாக ஸ்வீடன் நாட்டைச் சேர்ந்த ஹாமர்ஷீல்ட் என்ற பிரமுகரை ருஷ்யா எதிர்க்காது என்பது வெளியாயிற்று.

முதலாவது மகா யுத்தத்திலும் இரண்டாவது மகா யுத்தத்திலும் ஸ்வீடன் நடு நிலைமை வகித்து வந்தது. எனவே ஸ்வீடனைச் சேர்ந்த பிரமுகரை ருஷ்யா எதிர்க்காததற்கு அதுவும் ஒரு காரணமாக இருக்கலாம்.

இறுதியில் ஹாமர்ஷீல்டே ஐ. நா. பாதுகாப்புச் சபையினால் ஐ. நா. சபைக்குப் பொதுக் காரியதரிசியாகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

சியாங்கை ஷேக்கைத் தலைவராகக் கொண்ட தேசிய சீனாவைத் தவிர மற்ற நாடுகள் அவரை ஆதரித்து வோட்டுக் கொடுத்தன. சீனா மாத்திரம் சாதகமாகவோ, பாதகமாகவோ வோட்டுக் கொடுக்கவில்லை. மாவோ துங் தலைமையில் சீனாவில் ஏற்பட்டுள்ள குடியரசு சர்க்காரை ஸ்வீடன் அங்கீகரித்திருப்பதே, தேசிய சீனாவின் மேற்படி அதிருப்திக்கும் அனுதாவுக்கும் காரணம் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.



பம்பாய் முற்போக்கு இளைஞர் சங்கத்தின் வருஷாந்திர விழா பம்பாய் மேயர் டாக்டர் பி. ஏ. டயஸ் தலைமையில் மே மாதம் பத்தாம் தேதி விமரிசையாக நடந்தேறியது. அக்கொண்டாட்ட வைபவத்தில் குமாரி மாலதியும் குமாரி ஜயாவும் நடனமாடி விழாவை மேலும் சிறப்பித்தனர்.

ஐ. நா. சபையின் புதிய காரியதரிசியான ஹாமர்ஷீல்டுக்கு நாற்பத்தெட்டுவயதாகிறது. அவர் இன்னும் விவாகம் செய்து கொள்ள வில்லை. பிரம்மச்சாரியாகவே வாழ்க்கை நடத்தி வருகிறார்.

தொண்ணூற்றொன்று வயதாகி இன்றும் ஜீவதசையுடனிருந்து வரும் ஹாமர்ஷீல்டின் தந்தை ஹஜல்மார் முதலாவது மகா யுத்தம் நடந்தபோது ஸ்வீடன் பிரதம மந்திரியாக இருந்தார். ஹாமர்ஷீல்டின் சகோதரர் சர்வ தேசக் கோர்ட்டில் நீதிபதியாக இருந்தவர்.

ஐ. நா. சபையின் பொதுக் காரிய தரிசி பதவியை ஏற்கு முன் ஹாமர்ஷீல்ட் ஸ்வீடனில் உதவி அன்னிய நாட்டு மந்திரி யாக இருந்து வந்தார்.

ஐ. நா. சபையின் பொதுக் காரியதரிசியின் வருஷச் சம்பளம் 55,000 டாலர், அதாவது 2,53,750 ரூபாய் ஆகும்.

அவர் பதவியிலிருந்து விலகிய பிறகு அவருக்கு வருஷா வருஷம் ரூ. 48,000 பென்ஷன் கொடுக்கப்பட்டு வரும்.

அப்பதவியின் ஆயுள் காலத்தை ஐந்து வருஷங்களாக நிர்ணயித்திருக்கிறார்கள்.

*   *   *

ஐ. நா. சபையின் பொதுக் காரிய தரிசியை உலக அரசியலிலே மிகுந்த முக்கியத் துவம் வாய்ந்தவராகவும் செல்வாக்கு உள்ள வராகவும் கருத வேண்டும். உலகப் பிரச்னை களை ஆராய்ந்து முடிவு செய்யும் மேற்படி மகா சபையின் பிரதம நிர்வாகத் தலைவர் அவர்தான் அல்லவா?

ஐ. நா. சபையின் பொதுக் காரியதரிசியை, அந்தச் சபையின் நிர்வாகம் சம்பந்தப்பட்ட வரையில் அதன் சட்டாம் பிள்ளை என்றே கூறலாம்! நிர்வாக சம்பந்த மாக அவருக்கு அவ்வளவு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

அங்கத்தினர்களின் வேண்டு கோளுக் கிணங்க நெருக்கடியான பிரச்னைகளைப் பரிசிலனை செய்வதற் காக ஐ. நா. சபையின் விசேஷக் கூட்டத்தைக் கூட்டும் அதிகாரம் பொதுக்காரியதரிசிக்குத்தான் உண்டு.

வருஷா வருஷம் மேற்படி சபை சம்பந்தமான சகல வரவு செலவு இனங்களும் அடங்கிய திட்டத்தைப் பொதுக் காரியதரிசியே தயாரிப்பார்.

ஐ. நா. சபையில் நிறைவேறும் தீர்மானங்களை அமுலுக்குக் கொண்டு வரும் விஷயமாக அதில் அங்கம் வகிக்கும் நாடுகள் என்னென்ன நட வடிக்கைகள் எடுத்துக் கொண்டுள் ளன என்பதைக் கவனிக்க வேண் டியது பொதுக் காரியதரிசியின் பொறுப்பேயாகும்.

மேற்படி சபையைச் சேர்ந்த பல்வேறு இலாகாக்களின் அறிக்கைகளைத் தயாரிக்கும் பொறுப்பு பொதுக் காரியதரிசியிடமே ஒப்பு விக்கப்பட்டிருக்கிறது.

பல்வேறு முக்கிய விஷயங்களை யொட்டி ஐ. நா. சபைக்குத் தமது சிபார்சுகளை அனுப் பவும் பொதுக் காரியதரிசிக்குப் பூரண அதிகாரம் உண்டு.

ஐ. நா. ஸ்தாபனத்தில் தம் இஷ்டப்படி சிப்பந்திகளை நியமிக்கவோ, விலக்கவோ அவருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது.

பொதுக் காரியதரிசி மேற்படி சபையில் அங்கம் வகிக்கும் பல சர்க்கார் பிரதிநிதி களின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்; எனவே அவர் உலக நாடுகள் விஷயத்தில் பாரபட்சம் உள்ளவராக இருக்கக்கூடாது. அதனாலேயே அவர் பதவி காலம் முடிந்த பின் சிறிது காலத்துக்கு அவர் எந்த தேச சர்க்காரிலும் பதவி ஏற்றுக் கொள்வது உசித மல்ல என்ற விதி அமுலில் இருந்து வருகிறது.

*   *   *

இப்போது பொதுக் காரியதரிசி பதவியை ஏற்றுக் கொண்டுள்ள ஹாமர்ஷீல்ட் கலா சாலைப் பட்டம் பெற்ற மேதாவி மாத்திர மல்ல, மலை ஏறும் வித்தையில் கெட்டிக்காரர் என்றும் பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன.

இன்று ஐ. நா. சபை, வல்லரசுகளின் எதிர்ப்பாகிற மாபெரும் மலையைக் கடந்து உலக சமாதானமாகிற சிகரத்தை எட்டிப் பிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறது. மலை ஏறும் வித்தையில் நிபுணரான ஹாமர் ஷீல்ட் அந்த முயற்சி வெற்றி பெறுவதற்குப் பெரிதும் உதவியாக இருக்கக் கூடும்.

மனத் திருப்தி

சௌமித்ரி

"பாம்! பாம்!" என்ற காரின் 'ஹாரன்' சித்தத்தைக் கேட்டு ஜன்னல் வழியாகத் தெருவை நோக்கினேன். எங்கள் வீட்டின் முன் வந்து நின்றிருந்த 'செவர்லெட்' காரினின்று என் நண்பன் ராமநாதன் இறங்கிக் கொண்டிருந்தான். உடனே வாசலுக்கு விரைந்து சென்று அவனை வரவேற்றேன். இருவரும் என் அறையில் போய் உட்கார்ந்து கொண்டோம்.

"ராமநாதன்! ஏது இந்த நேரத்தில் என்னைப் பார்க்க இவ்வளவு தூரம் வந்திருக்கிறாய்?" என்று சற்று வியப்புடன் வினவினேன். வெய்யிலைக் கண்டால் வெருண்டோடும் அவன் அன்று பகல் பன்னிரண்டு மணிக்கு என்னைப் பார்க்க வந்திருப்பதில் ஏதோ விசேஷம் இருக்க வேண்டும் என்று எனக்குத் தோன்றியது.

"இன்று எனக்குப் பிறந்த தினம் கோபால்! அதைக் கொண்டாடச் சாயந்திரம் ஒரு விருந்தும் நடன நிகழ்ச்சியும் ஏற்பாடு செய்திருக்கிறோம். அதற்கு நீ அவசியம் வரவேண்டும்" என்றான் ராமநாதன்.

"அதற்கென்ன, வருகிறேன்" என்று மறுமொழி பகர்ந்தேன்.

"வருகிறேன் என்று மெதுவாகச் சொல்கிறாயே. கட்டாயம் நீ இன்று வந்துதான் ஆக வேண்டும். ஐந்து மணிக்கு வந்து அழைத்துப்போகிறேன். தயாராக இரு" என்று அன்பாகத் தன் கண்டிப்பான உத்தரவைப் போட்டு விட்டு நண்பன் என்னிடம் விடை பெற்றுக் கொண்டான்.

அவன் சென்ற பின் அப்படியே நாற்காலியில் அமர்ந்து சிந்தனையி லாழ்ந்தேன். 'செல்வச் சீமான்களும் பிரமுகர்களும் விஜயம் செய்யும் அந்த விழாவில் நான் கலந்து கொள்ளத் தகுதி வாய்ந்தவனா? அவர்களின் ஆடம்பரப் பட்டாடைகளுக்கு முன் பருத்தி உடைகள் அணிந்த நான் வெட்கியல்லவா தலைகுனிய வேண்டியிருக்கும்?' என்ற கேள்விகள் என் உள்ளத்தில் எழுந்தன. மேலும் என் உடைகள் யாவும் தைக்கப்பட்டு அதிக நாட்கள் ஆகிவிட்டன. பார்வைக்குப் பகட்டான ஆடை என்னிடம் அப்பொழுது ஒன்று கூட இல்லை. 'இதையெல்லாம் யோசிக்காமல் அழைப்பை ஏற்றுக்கொண்டு விட்டோமே' என்று மனம் வருந்தினேன்.

நான்கு பேர் முன்னிலையில் நம் கௌரவத்திற்குக் குறைவேற்படும்படி நடந்து கொள்ளக் கூடாதென்று தீர்மானித்தேன். உடனே அடுத்த வீட்டில் குடியிருந்த என் ஆப்த நண்பன் ரகுவிடம் சென்று அவனிடமிருந்து இருபது ரூபாயைக் கடனாக வாங்கிக் கொண்டு 'ரெடிமேட்' ஆடைகள் விற்கும் கடைக்கு விரைந்தேன். கண்களைப் பறிக்கும் நீல வர்ணத்தில் லினன் துணியில் தைக்கப்பட்டிருந்த ஒரு புஷ் கோட்டையும் தூய வெண்ணிறத்தில் ஒரு 'பாண்டை'யும் வாங்கிக் கொண்டு வீட்டிற்குத் திரும்பினேன்.

சாப்பிட்டு விட்டு, ஒரு சிறு தூக்கம் தூங்கி விட்டு நாலு மணிக்கு எழுந்தேன். அவசரம் அவசரமாகக் குளித்து முடித்தேன். சிகையைச் சிரத்தையுடன் வாரிச் சிங்காரித்துக் கொண்டேன். முகத்தில் வழக்கத்திற்கு மாறாக என் தங்கை உபயோகிக்கும் வாசனைப் பொடியைத் தூவிக் கொண்டேன். புது உடைகளை உடலில் பொருத்திக் கொண்டு பூட்ஸை மாட்டிக் கொள்வதற்கும் ராமநாதனின் காரின் ஹாரன் "பாம்! பாம்!" என்று ஒலிப்பதற்கும் சரியாக இருந்தது.

"ஹலோ! கோபால்! ஏது, சரியாக ஐந்து மணிக்குத் தயாராகி விட்டாயே!" என்றான் ராமநாதன் சிரித்துக்கொண்டே. நான் பதிலுக்கு ஒரு புன்னகையை உதிர்த்த வண்ணம் காரில் சென்று அமர்ந்து கொண்டேன். காரைத் தன் பங்களாவை நோக்கிச் செலுத்தினான் ராமநாதன். அன்றைய விழாவுக்கென்று செய்திருந்த பிரமாதமான ஏற்பாடுகளை என்னிடம் வழி நெடுக விளக்கிக் கொண்டே காரை ஓட்டிக் கொண்டிருந்தான் அவன். நகரத்திலிருந்த ஒரு புகழ் பெற்ற ஹோட்டல், விருந்துக்கான உணவு வகைகளை அளிக்கிற தென்பதையும் அவ்விருந்துக்கு இரு நூறு பேர்கள் அழைக்கப்பட்டிருக்கின்றனர் என்பதையும், சினிமா வானில் நட்சத்திரமாகப் பிரகாசித்துக் கொண்டிருந்த நிர்மலாவின் நாட்டியம் விழாவின் சிகரமாக அமையப் போகிற தென்பதையும் அறிந்து கொண்டேன்.



"நேற்றைய தினம் கச்சேரிக்கு உங்கள் சிநேகிதரை ஏன் அழைத்து வரவில்லை?"
"தெரியாதா? அவருக்கு ஒரு காது தான் செவிடாச்சே ஸார்!"
"அதனாலென்ன? இன்னொரு காதுக்குப் பஞ்சை அடைத்துக்கொண்டாப்போச்சு!"

ராமநாதனின் இல்லம் நெருங்கிவிட்டது. பங்களாவின் பிரதான வாயிலில் காரை வேகமாகத் திருப்பிய ராமநாதன் 'ச்சே' என்ற அலறலுடன் 'பிரேக்'கைப் போட்டுக் காரை நிறுத்தினான். அதனால் ஏற்பட்ட அதிர்ச்சியினால் நான் காரின் முன் சீட்டுடன் மோதிக் கொண்டேன். கார் நின்ற காரணம் என்னவென்று அறிய வெளியே பார்த்தேன்.

"ஐயோ! சாமீ! என்னை விட்டுடுங்கோ! நான் இனிமேல் உள்ளே நுழையமாட்டேன். தப்பு செஞ்சுட்டேன்! என்னை மன்னிச்சிடுங்கோ! இனி வரவே மாட்டேன்!" என்று கெஞ்சிக் கதறிக் கொண்டு வாயிலின் நடுவில் கிடந்தான் ஒரு மனிதன்.

"வெளியே போய்விடு! இல்லை, நொறுக்கி விடுவேன்" என்று ஒரு கூர்க்கா மூர்க்கத்தனமாகக் கர்ஜித்து அம்மனிதனைத் தன் கைத்தடியால் புரட்டித் தள்ளிக் கொண்டிருந்தான்.

காரிலிருந்து வேகமாக இறங்கிய ராமநாதன், கூர்க்காவை நோக்கி, "என்னடா சமாசாரம்? இவன் என்ன செய்தான்?" என்றான்.

"ஒன்றுமில்லை, ஜி! நான் இங்கு இல்லாத சமயத்தில் இவன் உள்ளே நுழைந்திருக்கிறான். 'சாப்பிட எதையாவது கொடுத்தால்தான் வெளியே போவேன்' என்று சத்தியாக்கிரகம் செய்து கொண்டிருந்தான். அதனால் இரண்டு உதை கொடுத்து வெளியேற்றிக் கொண்டிருக்கிறேன்" என்று கூறினான் அந்தக் கூர்க்கா.

நான் காரிலிருந்து இறங்கி அந்தப் பிச்சைக்காரனை உற்று நோக்கினேன்.

அவனுடைய பரிதாபக் கோலம் என் உள்ளத்தை உருக்கி விட்டது. அந்தக் கூர்க்கா செய்த இரக்கமற்ற செயலுக்காக அவனைக் கடுமையாகத் தண்டிக்க வேண்டும் என்று விரும்பியது என் மனம். இதற்குள் எங்கள் காருக்குப் பின்னால் இரண்டு மூன்று கார்கள் வந்து நின்று விட்டன. அதிலிருந்தவர்களும் இறங்கி எங்கள் அருகில் வந்து நின்று கொண்டார்கள்.

புழுதியில் கிடந்த பிச்சைக்காரன் தன்னைச் சமாளித்துக் கொண்டு எழுந்து உட்கார்ந்தான். தன்னைச் சுற்றி நின்று வேடிக்கை பார்க்கும் கனவான்களைப் பார்த்துக் கைகளைக் கூப்பி, "ஐயா! சாமி! சாப்பிட்டு நான்கு நாட்கள் ஆகிறது. பசி காதை அடைக்கிறது. என்னால் நடக்கக்கூட முடியவில்லை. ஒரு வாய் அன்னம் போடச் சொல்லுங்கள். உங்களுக்குக் கோடிப் புண்ணியம் உண்டு" என்று கெஞ்சினான்.

நான் அந்தப் பெரிய மனிதர்களின் முகங்களை நோக்கினேன். அவர்களுடைய கண்கள் அவன் நிலையைக் கண்டு இரங்கியதாகவே எனக்குத் தோன்றியது. ஆனால் அவர்களில் ஒருவராவது மூர்க்கத்தனமாக அந்த ஏழையை அடித்துக் காயப்படுத்தியிருந்த அந்தக் கூர்க்காவைக் கண்டிக்கவுமில்லை; ஒரு காலணா நாணயத்தையாவது அவன் முன் அவனுக்குக் கொடுக்கவும் முன்வரவில்லை.

என் அருகில் நின்ற நண்பன் அந்தப் பெரிய மனிதர்களிடம், "நீங்கள் ஏன் இங்கேயே நிற்கிறீர்கள்? தயவு செய்து உள்ளே போகலாமே!" என்று கூறினான்.

"ராமநாதா! இவன் போகாமல் வம்பு செய்தால் போலீஸுக்கு உடனே 'போன்' செய்" என்று தன் அருமையான புத்திமதியைக் கூறிவிட்டுப் பங்களாவை நோக்கி நடந்தார் காரிலிருந்து இறங்கிய பெரிய மனிதர்களில் ஒருவர். அவரைப் பின்பற்றிச் சிலர் சென்றனர்.

பசியினால் துடித்துக் கொண்டிருந்த அம்மனிதனுக்கு உதவி செய்ய வேண்டும் என்று என் மனம் தவித்தது. அதைச் செய்யவும் நான் தயாராகி விட்டேன். ஆனால் அந்தச் சமயத்தில் திடீரென்று என் உள்ளத்தில் ஒரு வெறுக்கத் தக்க எண்ணம் வந்து முளைத்து விட்டது. அங்கு நின்று கொண்டிருந்தவர்கள் என்னைப்பற்றி 'ஏதாவது' குறைவாக நினைத்துக் கொண்டால்? அவர்களோ பணக்காரர்கள். நான் சாதாரண மனிதன். அவர்களே எதையும் கொடுக்காமலிருக்கும்போது நான் மட்டும் அந்தப் பிச்சைக்காரனுக்கு உதவி செய்தால் அதை அவர்கள் தவறாக எடுத்துக் கொள்ளலாமல்லவா? 'பெரிய தருமப் பிரபு என்கிற எண்ணம் போலிருக்கிறது. நமக்கெல்லாம் இரக்கமில்லை. தனக்குத்தான் இருக்கிறது என்று காட்டிக் கொள்கிறான் பாருங்கள். என்ன இருந்தாலும் இனம் இனத்தோடுதானே சேரும்' என்று அவர்கள் என்னை

ஏளனம் செய்தால்? இவ்வாறான எண்ணங்கள் என் இரக்க உணர்ச்சியை நசுக்கித் தடைப்படுத்தி விட்டன. அந்த மனிதன் இன்னும் "பசி! பசி!" என்று கதறிக் கொண்டுதானிருந்தான்.

"இந்தாய்யா! ஏன் சும்மா அழுது கலாட்டா பண்றே! பேசாமல் அங்கே உட்கார்ந்திரு. விருந்து முடிந்த பிறகு உனக்கு ஏதாவது போடச் சொல்கிறேன்" என்று அம்மனிதனிடம் கூறிவிட்டு என்னை உள்ளே செல்ல அழைத்தான் நண்பன்.

இவ்வார்த்தைகளைக் கேட்டதும் அம்மனிதனின் முகம் மலர்ந்தது.

"ஆகட்டும் சாமி! நீங்க நல்லா யிருப்பீங்க! நான் இங்கேயே உட்காந்திருக்கேன்" என்று கூறிவிட்டு மெதுவாக நகர்ந்து சென்று வாயிலின் ஓரத்தில் அமர்ந்து, சுவரில் சாய்ந்து கொண்டான். அப்பொழுது அவன் குரலில் தொனித்த ஆனந்தம்! தனக்கு இன்று நிச்சயம் உணவு கிடைத்துவிடும் என்று அதில் தெரிந்த நம்பிக்கை! பாவம்! விருந்து மண்டபத்தில் நுழைந்த பின் தன்னைப் பற்றி நினைக்க ராமநாதனுக்கு எங்கே அவகாசமிருக்கப் போகிறதென்பதை அவன் அறிவானா என்ன?

ராமநாதன் முன்னும் நடந்தான். நான் உடனே பையில் கைவிட்டு ஒரு நாலணா நாணயத்தை அந்தப் பிச்சைக்காரன் முன் வீசி யெறிந்தேன். அது அவன் அருகே சென்று விழுந்தது. அதைக் கொண்டு அவன் எதையாவது வாங்கிச் சாப்பிட்டுத் தன் கோரப் பசியைச் சற்றுத் தணித்துக் கொள்வான் என்ற திருப்தியுடன் நான் நண்பனைப் பின் தொடர்ந்தேன்.

பங்களாவில் நுழைந்த நான் ஒரு கணம் பிரமித்து நின்று விட்டேன். அது அப்படி அலங்கரிக்கப் பட்டிருந்தது. கண்களைக் கவரும் தோரணங்களாலும், வர்ணக் காகிதங்களினாலும், விளக்குகளாலும் ஜோடிக்கப்பட்டிருந்த அந்தப் பெரிய மண்டபத்தைக் கண்டு நான் மயங்கிவிட்டேன். விதவிதமான வர்ணங்களில் உடைகள் அணிந்த ஆடவரும் பெண்டிரும் அங்கே நிறைந்திருந்தனர்.

விருந்து சில நிமிஷங்களில் ஆரம்பமாகி விட்டது. நான் ஒரு மூலையில் உட்கார்ந்து கொண்டேன். வகை வகையான உணவுகள் எங்கள் முன் கொலுவீற்றிருந்தன. எல்லோரும் சாப்பிட ஆரம்பித்தார்கள். ஆனால் எனக்கு அவற்றைத் தொடக்கூடப் பிடிக்கவில்லை. வாசலில் கிடந்த அந்தப் பிச்சைக்காரனின் பரிதாபகரமான உருவமே என் கண்முன் தோன்றி என்னை வதைத்துக் கொண்டிருந்தது. வெய்யிலிலும் மழையிலும் வருந்தும் இம்மனிதனின் இடையில் அருவருக்கத்தக்க அழுக்குத் துணி. அவன் மார்பை மறைக்கச் சட்டைகூட இல்லை. ஆனால் என் முன்னாலிருந்த மேஜைக்குத் தூய வெண்ணிறத்தில் அருமையான மில் துணி போர்த்தி வைக்கப்பட்டிருந்தது. பாவம், இந்த மேஜைக்கு இருக்கும் அதிர்ஷ்டம் கூட அந்த மனிதனுக்கு இல்லையே!

"என்ன ஸார்! சாப்பிடாமல் உட்கார்ந்திருக்கிறீர்கள்?" என்று என் அருகில் அமர்ந்திருந்த ஒருவர் கேட்கவே நான் சுய உணர்வு பெற்றேன். வேண்டா வெறுப்பாகச் சாப்பிடத் தொடங்கினேன்.

"வேண்டாம்! வேண்டாம்!" என்று கூறி, இரு கைகளையும் தட்டின்மேல் நீட்டி மன்றாடி மறுக்கும் பெரிய மனிதர்களின் வார்த்தைகளைப் பரிமாறுபவர்கள் பொருட்படுத்தவே யில்லை. இதைப் பார்த்ததும் எனக்கு வேதனைச் சிரிப்பு ஒன்றுதான் வந்தது. "பசி, பசி" என்று அங்கே ஒருவன் புழுவாகத் துடித்துக் கொண்டிருக்கிறான். இங்கே "வேண்டாம், வேண்டாம்" என்று மன்றாடி மறுக்கும் ஒருவருக்குப் பலாத்காரமாகச் 'சாப்பிட்டுத்தான் ஆகவேண்டும்' என்று உணவு படைக்கப்படுகிறது. இதை விதியின் திருவிளையாடல் என்று சொல்வதா, அல்லது கொடுமை என்று கூறுவதா?


விருந்து முடிந்த பின் சொற்பொழிவு ஆரம்பமாகியது. ராமநாதனின் தந்தை வந்திருந்தவர்களை வரவேற்றார். தலைமை தாங்கிய பிரமுகர் ராமநாதன் என்றும் சிரஞ்சீவியாகச் சகல சௌபாக்கியங்களுடன் வாழ வேண்டும் என்று கடவுளைப் பிரார்த்தித்தார்.



"இரவில் கதவை எல்லாம் திறந்து வைத்துக் கொண்டு காத்தோட்டமா தூங்கினா ஜலதோஷம் போயிடும் என்று சொன்னீரே..."

"ஆமாம். போயிடுத்தா?"

"போயிடுத்தாவா? என் அரோபா பாக்கெட்டுகளெல்லா வற்றையும் எவனோ அடிச்சிண்டு போயிட்டான். அந்தப் பணத்தை உங்களிடமிருந்து வசூலிக்கத் தான் வந்திருக்கிறேன்!"



இன்னும் பலர் அவ்வாறே வேண்டினர். பிறகு அந்த மேடையில் குமாரி நிர்மலா தோன்றினாள். நாட்டியம் ஆரம்பமாகியது. ராமநாதன் என் அருகில் வந்து உட்கார்ந்து 'நாட்டியம் எப்படி?' என்று என் அபிப்பிராயத்தைக் கேட்டு என் உயிரை வாங்கிக் கொண்டிருந்தான். அங்கு ஒலித்த பாட்டும் வாத்தியங்களின் இன்னிசையும் என் காதுகளில் நாராசம்போலப் பாய்ந்து கொண்டிருந்தன. இருந்தாலும் அதை நண்பனிடம் கூற முடியுமா? "நாட்டியம் பிரமாதம்!" என்று கூறி வைத்தேன். நேரம் ஓடிக் கொண்டிருந்தது. பசியால் பரிதவித்துக் கொண்டிருக்கும் அந்த ஏழை மனிதன் என்ன வானான் என்னும் நினைவிலேயே என் மனம் சுழன்று வந்தது. நான் நினைத்தபடி ராமநாதன் அந்தப் பிச்சைக்காரனை அடியோடு மறந்து விட்டிருந்தான். அவன் நாட்டியத்தில் பூரணமாக ஈடுபட்டு விட்டான்.

மணியைப் பார்த்தேன். ஒன்பதே முக்கால் ஆகி விட்டிருந்தது. ராமநாதன் என்னை விட்டு அப்பால் செல்ல மாட்டானா என்று என் மனம் தவித்துக் கொண்டிருந்தது. அவன் எதிரில்தான் நான் வெளியே போக முடியாதே! குழுமியிருந்தோர் பாடகியின் இன்னிசையையும் நிர்மலாவின் நாட்டியத்தையும் கேட்டும் கண்டும் தம்மை மறந்திருந்தனர். நானும் என் இரு புலன்களையும் அவற்றில் லயிக்கச் செய்ய முயற்சி செய்தேன். ஆனால் என் காதுகளில் அந்த இன்னிசைக்குப் பதிலாக அந்தப் பிச்சைக்காரனின் 'பசி, பசி' என்கிற பரிதாபக் குரல்தான் விழுந்தது. என் கண்களால் நிர்மலாவின் நாட்டியத்தைப் பார்க்க முடியவில்லை.

"கோபால்! இங்கேயே இரு! இதோ வந்து விடுகிறேன்!" என்று கூறி விட்டு உள்ளே சென்றான் என் நண்பன். அதுதான் சமயம் என்று நான் யாருக்கும் தெரியாமல் அந்த பங்களாவை விட்டு வெளியே வந்தேன். என் கால்கள் வேகமாக வாசலை அடைந்தன.

அங்கே வந்ததும் நான் திடுக்கிட்டுப் போய் விட்டேன். பசியால் துடித்த அந்த மனிதனை அங்கு காணவில்லை. பக்கத்தில் போய்ப் பார்த்தேன். நான் அவனிடம் முன்பு வீசி எறிந்த கால் ரூபாய் நாணயத்தையும் காணவில்லை. பரபரப்புடன் வெளியே சென்று ரஸ்தாவில் நடையைக் கட்டினேன். தூரத்தில் தெரிந்த முனுக் முனுக்கென்ற ஒரு கடையின் சிம்னி விளக்கின் ஒளியில் அவன் உருவம் நிழலாடியது. உற்றுப் பார்த்தேன். இன்னும் கொஞ்சம் அருகில் நெருங்கியதும் அவன்தான் என்று நிச்சயமாய்த் தெரிந்தது. அது ஒரு பக்ஷணக் கடை. அவன் ஏதோ தின்று கொண்டிருந்தான்.

என் மனம் அளவு கடந்த திருப்தி யடைந்தது. நான் போட்ட காசை எடுத்துக் கொண்டு போய் அவன் வயிற்றுக்கு ஏதோ வாங்கித் தின்று கொண்டிருந்தான்.

அகில உலகச் சிறுகதைப் போட்டி

- ஏற்கெனவே முதல் தடவையாக அகில உலகச் சிறுகதைப் போட்டி நடந்தது அல்லவா! அதில் இந்தியா உள்பட உலகத்தில் உள்ள இருபத்து மூன்று நாடுகள் கலந்து கொண்டன.
- அந்தப் போட்டியில் உலகத்திலேயே முதல், இரண்டாவது பரிசு பெற்ற கதைகள் "கல்கி"யில் தொடர்ச்சியாக வெளியாகி வந்தது வாசக நேயர்கள் அறிந்த விஷயம். அவற்றைத் தவிர அந்தந்த நாடுகளில், அந்தந்த பாஷைகளில் பரிசு பெற்ற சுமார் நூறு சிறந்த கதைகளும் மொழி பெயர்க்கப்பட்டு, "கல்கி"யில் பிரசுரமாயின.
- மேற்படி போட்டி மிகவும் வெற்றிகரமாக நடந்ததால், இப்போது இரண்டாவது தடவையாக, அகில உலகச் சிறுகதைப் போட்டி நடத்த உத்தேசித்திருக்கிறார்கள்.
- இம்முறையும் அமெரிக்காவில் உள்ள பிரபல நியூ யார்க் ஹெரால்டு டிரிப்யூன் பத்திரிகையின் மேற் பார்வையிலேயே அந்தப் போட்டி நடைபெறுகிறது.
- இந்தியா தேசத்தில் மேற்படி சிறுகதைப் போட்டியை நடத்தும் பொறுப்பைப் புது டில்லி "ஹிந்துஸ்தான் டைம்ஸ்" பத்திரிகை ஏற்றுக் கொண்டிருக்கிறது.
- இந்தியாவில் உள்ள முக்கியமான பன்னிரண்டு பாஷைகளிலாவது, ஆங்கிலத்திலாவது மேற்படி போட்டிக்குச் சிறுகதை எழுதலாம்.
- இந்தியாவின் முக்கிய பாஷைகளில் தமிழ் மொழி ஒன்று என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. எனவே, தமிழ் எழுத்தாளர்கள் அகில உலகச் சிறுகதைப் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
- இந்தியாவில் எழுதப்படும் சிறந்த எட்டுக் கதைகளுக்கு "ஹிந்துஸ்தான் டைம்ஸ்" பத்திரிகை மொத்தம் ரூ. 5,250 பரிசு அளிக்கும். அதில் முதல் பரிசு ரூ. 1500.
- அந்த எட்டுக் கதைகளிலிருந்து அகில உலகப் போட்டிக்கு முதல் நாலு கதைகள் அனுப்பப்படும்.
- இதில் கலந்து கொள்ளும் பத்திரிகைகள் தங்கள் தங்கள் பாஷைக் கதைகளுக்குப் பரிசு அளிக்கும். பரிசு பெறும் சகல கதைகளும் போட்டியை நடத்தும் பத்திரிகைகளில் வெளிவரும்.
- கதைகள் பிரசுரமாகி முடிந்த பின், அந்தக் கதைகளில் எது சிறந்தது என்பதை, போட்டியை நடத்தும் பத்திரிகைகளிடையே வோட்டு எடுத்து முடிவு செய்வார்கள்.
- அந்தக் கதைக்கே அகில உலகப் போட்டியின் முதல் பரிசான ஐயாயிரம் டாலர் (ரூ. 23,750) கொடுக்கப்படும்.
- பஞ்சாயத்தார்களிடம் சமர்ப்பிக்கும் கதைகளுக்கு இலக்கங்களே கொடுக்கப்படுமாதலால், எழுத்தாளர்கள் தங்கள் பெயரையோ, விலாசத்தையோ அதில் குறிப்பிடக் கூடாது.
- எனவே ஒவ்வொருவரும் தாங்கள் எழுதும் கதையில் இரண்டு பிரதிகள் அனுப்ப வேண்டும். அவற்றில் பெயரோ, விலாசமோ குறிப்பிடாமல் ஒரு பிரதி இருக்க வேண்டும்.
- அடுத்த ஜூன் மாதம் முப்பதாம் தேதிக்குள் கதைகள் அனுப்பப்பட வேண்டும்.
- பரிசு பெறாத, பிரசுரிக்கப்படாத கதைகளைத் திரும்பிப் பெற விரும்புவோர் கையெழுத்துப் பிரதியுடன் போதிய தபால் தலைகள் அனுப்ப வேண்டும். திருப்பி அனுப்புவதாக உத்தரவாதம் செய்ய முடியாது.
- தமிழ்க் கதைகளை ஆசிரியர், "கல்கி", கீழ்ப்பாக்கம், சென்னை-10 என்ற விலாசத்துக்கு அனுப்பி வைக்க வேண்டும்.
- அனுப்பப்படும் சிறுகதைகள் அதிகபட்சம் நாலாயிரம் வார்த்தைகளுக்குமேல் இருக்கக் கூடாது. குறைந்தபட்சம் ஆயிரத்து இருநூற்றைம்பது வார்த்தைகள் உள்ளதாக இருக்க வேண்டும்.
- சிறுகதை அனுப்புவோர் தங்களுடைய சொந்தக் கற்பனையைக் கொண்டு எழுதப்பட்டது என்று உறுதி கூறவேண்டும். ஏற்கெனவே எந்த இடத்திலும் பிரசுரிக்கப்பட்டதல்ல என்று உத்தரவாதம் அளிக்க வேண்டும்.
- ஒரே ஆசிரியர் ஒன்றுக்கு மேற்பட்ட கதைகள் அனுப்பலாம்.
- கதைகள் எவ்விஷயத்தை வேண்டுமாயினும் அடிப்படையாகக் கொண்டிருக்கலாம். காதல், குரோதம், நன்றி, வாஞ்சை, தேசபக்தி, தியாகம், லோபம், யுத்தம், துணிகரச் செய்கை, வீரப் போர், துரோகம், கலியாணம், மரணம் ஆகிய எந்த விஷயமாயினும் சரி; உணர்ச்சிப் பெருக்கு, அமைப்புத் திறன், வாழ்க்கைப் பண்பு, நடையின் சிறப்பு, கதையின் ஓட்டம்—ஆகிய சிறு கதையின் அம்சங்களே முக்கியமாகக் கருதப்படும்.
- அகில உலகச் சிறுகதைப் போட்டிக்குப் பொறுக்கி எடுக்கப்படும் நாலு தமிழ்க் கதைகள் ஒவ்வொன்றுக்கும் ரூ. 125 வீதம் சன்மானம் அளிக்கப்படும்.
- முதலாவது அகில உலகச் சிறு கதைப் போட்டியில் இரண்டாவது பரிசு பெற்றவர் இந்தியர்தான்.
- இம்முறை மற்ற நாட்டினரைப்போல் இந்தியரும் முதற் பரிசு பெறுவதற்குச் சந்தர்ப்பம் இருக்கிறது. அவ்விதம் பரிசு பெற்று, உலகப் புகழை அடைவது இந்திய எழுத்தாளர்களின் பெரு முயற்சியையே பொறுத்திருக்கிறது.
- தயவு செய்து உறையின்மேல் "அகில உலகச் சிறுகதைப் போட்டி" என்று குறிப்பிட வேண்டுகிறோம்.
- அகில இந்தியப் போட்டிக்காகப் பஞ்சாயத்தார் தேர்ந்தெடுக்கும் நாலு கதைகளையும் அவற்றின் ஆசிரியர்கள் தாங்களாகவோ, அல்லது பிறரைக் கொண்டோ ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துத் தர வேண்டும்.
- பரிசுக்காகத் தேர்ந்தெடுக்கப்படும் கதைகளைத் தவிர மற்றக் கதைகளில் பிரசுரிப்பதற்குத் தகுதியானவை "கல்கி"யில் பிரசுரிக்கப்படும். அவற்றிற்குரிய சன்மானமும் அளிக்கப்படும்.
- இந்தப் போட்டி சம்பந்தமாக ஏற்படும் சந்தேகங்களில் "ஹிந்துஸ்தான் டைம்ஸ்" நிர்வாக ஆசிரியர் ஸ்ரீ தேவதாஸ் காந்தி கூறும் தீர்ப்பே முடிவானது.

ஆனந்த பாஷ்பம்

சம்பந்தம்

அனந்தராமனுக்கு ஆச்சரியமாய்ப் போயிற்று. இத்தனை நாழிகை கதை பேசிக் கொண்டு கலகலவென்று நகைத்துக் கொண்டிருந்த சிவநேசனும், ராஜமும் திடீரென்று இப்படி வாயடைத்து முகம் மாறி அறையில் மூலைக்கொருவராக அமர்ந்து கிடப்பானேன்? உடனே 'கோமு, கோமு!' என்று தன் மனைவியை யழைத்துக்கொண்டே சமையலறைக்குள் சென்றான். அவன் அப்படி கூப்பிட்ட குரலும், தோரணையும் கோமதியை கிலகுலையச் செய்துவிட்டன. "இதோ வந்தேன்" என்று கரண்டியும் கையுமாக ஓடி வந்தாள். "என்ன நடந்தது, கோமு? ஏன் சிவநேசனும் ராஜமும் 'உம்' என்று உட்கார்ந்திருக்கிறார்கள்? நீ அவர்களிடம் ஏதாவது அதிகப் பிரசங்கித்தனமாக நடந்து கொண்டாயோ?" என்று சற்றுப் படபடப்புடன் கேட்டான் அனந்து.

இத்தனை வருஷங்கள் பழகி யிருந்தும் தன் குணம் இவருக்குப் புரியவில்லையே என்ற தாபமும் தாங்கலும், அவன் பார்த்த பார்வையிலும் விட்ட பெரு மூச்சிலும் முடங்கிக் கிடந்தன. "என்ன இப்படிக் கேட்கிறீர்களே! இத்தனை நாழியும் நாங்கள் மூவரும் இங்குதானே பழைய கதைகளைப் பேசிக் கொண்டிருந்தோம்? டிபன் பண்ண நேரமாயிற்று. 'ஏன் ராஜம் பால் நிறைய இருக்கு. திரட்டுப்பால் பண்ணட்டுமா? உனக்குப் பிடிக்குமல்லவா?' என்றேன். உடனே அவன் எனக்கொன்றும் பதில் சொல்லாமல் சிவநேசனை ஏறெடுத்துப் பார்த்தான். அவனும் உற்றுப் பார்த்தான். அவ்வளவுதான். இருவரும் எழுந்து விடுவிடு என்று வெளியே சென்று விட்டார்கள். நான் இதோ பாலை யெடுத்து அடுப்பில் போட்டு விட்டு வருகிறேன்" என்றாள்.

"உனக்குத் திரட்டுப்பால் தவிர வேறு எந்த டிபனும் செய்யத் தெரியாதாக்கும்! பால் நிறைய இருந்தால் தயிருக்கு நாளைக்கு மோர்க்குழம்பு வைத்து விட்டால் போகிறது" என்று இரைச்சல் போட்டு விட்டு, சற்று இலேசான குரலில் மெதுவாக பெரு மூச்சு விட்டுக் கொண்டே பேசினான் அனந்து. "உம்......பிசகு என்மீதுதான். நான் அவர்களை அழைக்கப்போன இடத்தில் என்ன நடந்தது என்று உனக்கு எப்படித் தெரியப் போகிறது!" என்று சொல்லிக் கொண்டே அங்கிருந்து சென்றான்.

அப்படியே அந்த அறைப் பக்கம் சென்று, "அசடுகளா! எழுந்து வெளியே வாருங்கள். கோமுவுக்குத் திரட்டுப்பால் விஷயம் ஒன்றுமே தெரியாதே! உங்கள் மூளையெல்லாம் ஏன் இப்படி அதி நூதனமாக வேலை செய்கிறது?" என்று சொல்லிக் கொண்டே எட்டிப் பார்த்தான். ராஜம் கண்களைத் துடைத்துக் கொண்டாள். சிவநேசன் குப்புறப் படுத்துக் கொண்டான்.

அதைக் கேட்ட கோமதி "அங்கே என்ன நடந்தது?" என்று தெரியாமல் அப்படியே அயர்ந்து நின்று விட்டாள்.

சிவநேசன், அனந்தராமனின் ஒரே தம்பி. அனந்தராமனுக்கப்புறம் வெகு நாள் வரை குழந்தையில்லாமலிருந்து கடைசியில் பிறந்தவன் சிவநேசன். அவன் பிறந்த அதிருஷ்டம் அடுத்த வருஷத்திற்குள்ளாகவே அம்மாவும் அப்பாவும் தலையைச் சாய்த்து வைத்தார்கள். உடனே அந்த ஸ்தானத்தை அனந்தராமனும் கோமதியும் எடுத்துக் கொண்டு சிவநேசனைப் பொன்னே போல் போற்றி வளர்த்தார்கள். அவன் சற்று கண் கசக்க, இருவரும் பார்த்துச் சகிக்க மாட்டார்கள். அனந்தராமனுக்கும் குழந்தைகளே பிறக்கவில்லை யென்றால், பிறகு சிவநேசன் மேலிருந்த பாசத்திற்குக் கேட்பானேன்! சிவநேசனும் வெகு நாள் வரையில் கோமதியை 'அம்மா' என்றேதான் அழைத்து வந்தான். பிறகு பெரியவனான பிறகு, அவனுக்கே சற்று வெட்கமாய்ப் போயிற்று; 'மன்னி' என்று கூப்பிடத் தலைப்பட்டான்.

சிவநேசன் அதி புத்திசாலியாய் ஜாம் ஜாம் என்று வளர்ந்தான். பெண்களைப் பெற்ற



வர்கள் அனைவரும் சிவநேசனுக்காகப் போட்டி யிட்டார்கள்; ஜாதகங்கள் குவிந்தன. பக்கத்தூர்ப் பெரிய பண்ணையிலிருந்து வந்திருந்த ராஜத்தின் ஜாதகந்தான் ரொம்பவும் பொருத்தமா யிருந்தது.

ஆனால் அதில் குறை யென்ன வென்றால், கலியாணம் செய்து கொண்டு, சிவநேசன் பெண் வீட்டோடு தங்கிச் சொத்துக்களை நிர்வகித்து வரவேண்டு மென்ற நிபந்தனைதான். அப்பொழுது பெரிய பண்ணையின் சொத்து முழுதும் அலங்காரத்தம்மாளிட மிருந்தது. ஆண் வாரிசில்லாத சொத்து. அவள்தான் தூரபந்துவான ராஜத்தைச் சுவீகாரமெடுத்துக் கொண்டு வளர்த்து வந்தாள். பின் மாப்பிள்ளை தன் வீட்டோடு இருந்துவிட வேண்டுமென்றதில் வியப்பென்ன யிருக்கிறது!

அனந்தராமனும், கோமதியும் ரொம்ப தூரம் யோசித்தார்கள். 'நம் குடும்பமோ ரொம்பவும் சாதாரணமானது. சரி, நம் தம்பியாவது செல்வவந்தனா யிருக்கட்டும்' என்று தீர்மானித்து அதற்குச் சம்மதித்தான் அனந்து. 'அவர்கள் ஊரும் சமீபத்தில் தானே யிருக்கிறது. பிறகு அதற்கு இதற்கு என்று அடிக்கடி அவ்விருவரையும் இங்கு அழைத்துக் கொண்டு வந்து விட்டாப் போகிறது' என்று தன்னையே தேற்றிக் கொண்டாள் கோமதி.



கலியாணம் வெகு விமரிசையாய் நடந்தது. நல்ல புத்திமதிகளை யெல்லாம் வெகுவாகச் சொல்லிச் சிவநேசனைப் பெரிய பண்ணை வீட்டிலேயே இருக்கவிட்டு வைத்துத் திரும்பினான் அனந்தராமன்.

நாலைந்து மாதங்களாயிற்று. "என்ன அண்ணா ஒன்றும் சுகப்படவில்லை. அலங்காரத்து அம்மாவின் வார்த்தைகள் ரொம்ப தூரம் சீறுகிறதே" என்று அங்கலாய்த்துக் கொண்டே வந்தான் சிவநேசன்.

"ஏன் அப்படி? நீ ஏன் விகற்பமாக நினைக்கிறாய்! மாமியை உன் அம்மாவாகவே நினைத்துக் கொள்ளேன்" என்றான் அனந்து.

"உம்......இல்லை அண்ணா, சில சமயங்களில் ராஜமே அவளை வெறுத்துத் தள்ளி விடுகிறாள் என்றால் பார்த்துக் கொள்ளேன்" என்றான் சிவநேசன்.

அவன் சாண்பிள்ளையா யிருந்தாலும், ஆண் பிள்ளைதானே! பேராகிராதா? வீட்டு மாப்பிள்ளை அவன்! சொத்துக்களைத்தும் அவன்தானே நிர்வகித்து வருகிறான். அதற்குத் தகுந்த கௌரவம் வேண்டாமா அவனுக்கு! இன்னும் கொத்துச் சாவியை அலங்காரத்தம்மாளே தன் இடுப்பில் செருகிக் கொண்டிருந்தா ளென்றால் அது எப்படிச் சரியாகும்? ஒவ்வொன்றுக்கும், அவள் கையையா எதிர் பார்த்து நிற்பான் சிவநேசன்? அதற்கும் இல்லாத முணு முணுப்பு வேறு. ராஜம் தான் ஆகட்டும், என்னதான் சுவீகாரப் பெண்ணா யிருந்தாலும், கணவன் என்று ஒருவன் ஏற்பட்ட பிறகு அவன்தானே முக்கியம் அவளுக்கு? சிவநேசனுக்கு மரியாதை குறைய அவள்தான் சகிப்பாளா!

கோமதி ஞாபகப்படுத்தவே, அன்று வண்டியைக் கட்டிக்கொண்டு அனந்தராமன் 'ஓடி' வந்திருந்தான். எப்பொழுதுமே சிவராத்திரிக்கு அனந்தராமன் வீட்டில் ரொம்ப விசேஷம். அதற்காகத் தான் இரண்டு தினங்கள் முன்னதாகவே, சிவநேசனையும் ராஜத்தையும் அழைத்துப் போக வந்திருந்தான். "மாமி, நம் வீட்டிலே சிவராத்திரி விசேஷம் இவர்களை அனுப்பித் தரணும்" என்று அலங்காரத்தம்மாளைக் கேட்டான்.

"ஓ! தாராளமாய் அழைத்துப் போங்கோ" என்று உத்தரவு கொடுத்துவிட்டு, "'உம்—அதுகள் தான் எங்கே போகலாம் ஊர் சுற்ற' என்று காத்துக் கிடக்கிறதுகளே!" என்று முணு முணுத்துக் கொண்டாள் அலங்காரத்தம்மாள்.

உடனே சிவநேசனும் ராஜமும் புறப்படத் தயாரானார்கள். 'என் ராஜம், பால் இருந்தால் கொஞ்சம் திரட்டுப் பால் பண்ணி விடேன். கொண்டு போவோம். மன்னிக்குத் திரட்டுப் பால் சாப்பிடுவது என்றால்



"தலை வழுக்கைக்கு நல்ல தைலம் இருக்கிறது. வேண்டுமா?"
"வேண்டாம், ஸார்! என் தலையில் ஏற்கெனவே வழுக்கை இருக்கிறது!"

ரொம்பப் பிரியம்" என்றான். "இதோ பாருங்கோ இந்தப் பால் போதுமா?" என்றான் ராஜம்.

"அதோ அந்தப் பாத்திரத்திலே பால் இருக்கே அது!"

"அது அம்மாளுக்கு!"

"உம். அதையும் சேர்த்துத் திரட்டுப் பால் பண்ணிக்கொள், போதும். மொட்டை மாடு தான் கறக்க ஆரம்பித்து விட்டதே. அதைக் கறந்து எடுத்துக் கொள்கிறாள், மாமி" என்றான் சிவநேசன்.

அப்பொழுது அலங்காரத்தம்மாளும் அங்கேதான் கூடத்துத் தூணில் சாய்ந்து கொண்டு உட்கார்ந்திருந்தாள்; ஒன்றும் பேசவில்லை.

ராஜம் அவசர அவசரமாய்த் திரட்டுப் பால் பண்ணி வெள்ளிப் பேலாவில் ஊற்றி இலையைப் போட்டுக் கட்டி வைத்தாள். அப்பொழுதுதான் அலங்காரத்தம்மாள் எழுந்து அவசர அவசரமாய் உள்ளே சென்றாள்.

"ராஜம். இங்கே எனக்குப் பால் வைத்திருந்தேனே! எங்கே அது!" என்றாள்.

"ஊருக்குக் கொண்டுபோக, திரட்டுப் பால் பண்ணி விட்டேன், அம்மா. மொட்டை மாடுதான் கறக்க ஆரம்பித்து விட்டதே" என்றாள் ராஜம்.

"ஓகோ! அவ்வளவு ஆகி விட்டதா உங்களுக்கு" என்று பலத்த இரைச்சல் போட்டு, மொது மொது வென்று பேச ஆரம்பித்து விட்டாள். சிவநேசனுக்குத் தன் அன்னாவின் எதிரில் இப்படிப் பேச ஆரம்பித்து விட்டாளே என்று அப்படியே நெஞ்சை யறுத்துக் கொண்டு போயிற்று. அவனும் ஆத்திரத்தோடு கிளம்பினான்.

எங்கே பயணம் நின்று விடுகிறதோ என்றிருந்தது அனந்துவுக்கு. உடனே கண் ஜாடை காட்டிச் சிவநேசனை அடக்கிவிட்டு, வண்டியைக் கட்டினான்.

சிவநேசனும், ராஜமும் வந்து ஏறினதும் வண்டி ஜல் ஜல்லென்று சதங்கை சப்தத்துடன் அங்கிருந்து கிளம்பிற்று.

சமையல் உள்ளில் அந்த வெள்ளிப் பேலாவில் ஊற்றி வைத்திருந்த திரட்டுப் பால் அப்படியே கிடந்தது.

* * *

"ராஜம், உன்னையுந்தான் கேட்டுக்கொள்கிறேன். என்மேல் தப்பிதம் இருந்தால் மன்னிச்சுடுங்கோ, அங்கு நடந்த விஷயம் எனக்குத் தெரியவே தெரியாது. தெரிந்திருந்தால் நான் திரட்டிப் பால் பண்ணட்டுமா என்று கேட்டிருப்பேனா! உங்களாலே அவரும் போய் அறையில் உட்கார்ந்து கொண்டு விட்டார்" என்று குரல் தழுதழுக்கச் சொன்னாள் கோமதி.

"என்ன அக்கா, இது?" என்று எழுந்தாள் ராஜம்.

"என்ன மன்னி இது! யார் யாரை மன்னிக்கிறது! பார்க்கப் போனால் அலங்காரத்து மாமிதான் எங்களை மன்னிக்க வேண்டும். வீட்டுக்குப் பெரியவர் என்ற விஷயத்தில் அவரைக் கேட்டுச் செய்திருந்தால் எத்தனை நன்றாயிருந்திருக்கும்! நாங்கள், அவசரத்திலே அசட்டுப் பிசட்டென்று நடந்து கொண்டு விட்டோம்" என்றான் சிவநேசன்.

"அப்படித்தான் எனக்கும் தோன்றுகிறது" என்றாள் ராஜம்.

அதே சமயத்தில் வாசல் கதவை யாரோ தட்டினார்கள். சிவநேசன் எழுந்து சென்று கதவைத் திறந்தான். என்ன ஆச்சரியம்! அத் திரட்டுப் பால் வெள்ளிப் பேலாவுடன் அலங்காரத்தம்மாள் நின்று கொண்டிருந்தாள்.

"மாமி!" என்றான் சிவநேசன்.

"அம்மா!" என்றாள் ராஜம்.

"ஏண்டா குழந்தைகளா, நான் ஏதோ பேசிவிட்டேன் என்று இப்படியா செய்வீர்கள்! பண்ணின திரட்டுப் பாலை அங்கேயே போட்டு விட்டு வந்து விட்டீர்களே! எனக்குத்தான் சிடுசிடுவென்று பேசுகிறது என் கூடப் பிறந்த வழக்கமாய்ப் போச்சு. அதையெல்லாம் பொருட்படுத்திக் கொண்டு நீங்கள் இப்படியா நடந்து கொள்கிறது! நீங்கள் வந்து விட்ட பிறகு எனக்கு அங்கே இருப்பே கொள்ளவில்லை" என்று குரல் தழுதழுக்கச் சொல்லி, "அப்படியே சிவராத்திரிக்கு, காளஹஸ்திக்குப் போக வேண்டும் என்று தோன்றியது. வண்டியைக் கட்டச் சொல்லிப் புறப்பட்டு விட்டேன். இந்தாங்கோ சாவி. குடும்பத்தை இரண்டு பேரும் கவனமாகப் பார்த்துக் கொள்ளுங்கள்" என்று இடுப்பிலிருந்த கொத்துச் சாவியைக் கழற்றிக் கொடுத்தாள். அனைவர் கண்களிலும் ஆனந்த பாஷ்பம் வழிந்தது.

நல்ல மனிதர்

ஆசிரியர் : சுதர்சன்

மொழிபெயர்ப்பு : ரா. வீ.

சந்தோஷ குமார சர்மா ஒரு நீண்ட பெருமூச்சு விட்டார். "இந்தக் கடன் சுமை நம் தலையிலிருந்து இறங்கவே இறங்காதா!" என்று அவர் வாய் முணுமுணுத்தது.

அவர் ஏழை. ஆனால் உள்ளத்திலே தீய நோக்கம் கொண்டவர் அல்ல. எப்பாடு பட்டாவது மனத்தை உறுத்திக் கொண்டிருக்கும் சதானந்தத்தின் கடனைக் கால் காசு பாக்கியில்லாமல் தீர்த்து விடவேண்டும் என்றுதான் அவர் விரும்பினார். ஏனெனில் சதானந்தம் தம்பிடியைக் கூடத் தங்கமாக மதிக்கும் மனோபாவம் உடையவர் என்பது அவருக்கு நன்றாகத் தெரியும். எனவே, வயிற்றைக் கட்டி, வாயைக் கட்டி காசைச் சேமிக்க முயன்றார். ஆனால் உருப்படியாகக் கையில் நாலு காசு சேருவதற்குள்ளாக, ஏதாவது மிக முக்கியமான ஒன்று வந்து சிரமப்பட்டுச் சேமித்து வைத்திருந்த பணத்தை அடித்துக் கொண்டு போய் விடும், பழைய வெள்ளத்தை புது வெள்ளம் அடித்துக் கொண்டு போன கதையாக. சந்தோஷ குமார சர்மாவுக்கு அம்மாதிரி நிலை ஏற்படும் பொழுது உள்ளத்திலே கூறிய ஈட்டி பாய்வது போலிருக்கும். நீரில் மூழ்கி உயிருக்குத் தத்தளிக்கும் மனிதனின் நிலையை அடைந்து விடுவார் அவர். நீரில் மூழ்கித் தத்தளிப்பவன் கைகால்களை உதைத்துக் கொண்டு கரை சேர்ந்து கரையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு கரையேறப் போகும் தருணத்தில் கரை உடைந்து கைப்பிடி நழுவி விட்டால் தண்ணீரில் மறுபடியும் தத்தளிக்கத் தொடங்கி விடுவான் அல்லவா! அப்பொழுது அவனுடைய நிலைமை எவ்வளவு பரிதாபகரமாகவும் உள்ளத்தைத் துளைக்கக் கூடியதாகவும் இருக்கும்! அவன் தன் பிராப்தத்தைத் திட்டுவான், தன் தலை விதியை நொந்து கொள்வான்; தன் நிலை மறந்து மனம் போன போக்குப்படி உளறுவான் அல்லவா! அப்பொழுது சந்தோஷ குமார சர்மாவும் அதே நிலைமையைத்தான் அடைந்திருந்தார்.

இவ்வாறு அநேக ஆண்டுகள் ஓடிவிட்டன. சர்மா எப்படி எப்படியெல்லாமோ சிரமப்பட்டு எண்பது ரூபாய் சேர்த்து விட்டார். அவர் சதானந்தத்துக்குக் கொடுக்க வேண்டிய கடனோ நூறு ரூபாய். எண்பது ரூபாய் சேர்த்து விட்டதை நினைத்துப் பார்க்கவே, அவருக்குக் கடன் பளு குறையும் நாள் அதிக தூரத்தில் இல்லை என்று தோன்றிற்று. ஆனால் நம்பிக்கை நல்ல தருணம் பார்த்து அவரை கட்டாற்றில் விட்டு விட்டது. திடீரென்று அவருடைய சின்னப் பையன் நோயில் படுத்தான். நான்கு மாதங்கள் படுத்த படுக்கையாகக் கிடந்தவன், பிழைத்தது புனர் ஜன்மம் என்று சொல்லும் அளவுக்கு வந்த பின்தான் புத்துயிர் பெற்றான். தம்பிடி தம்பிடியாகச் சேர்த்து வைத்த அத்தனை ரூபாயும் மருந்து மாயம் என்று கரைந்து விட்டது. சர்மா தம் நிலையை எண்ணித் தலையில் போட்டுக் கொண்டார். அவருடைய வாழ்க்கையில் மறுபடியும் நாற்புறமும் இருள் கவ்வியது. அந்தக்கரிய இருளில் சின்னஞ்சிறு ஒளிக் கதிர் கூடத் தட்டுப்படவில்லை. அவர் நீண்ட பெருமூச்சு விட்டார். "இந்தக் கடன் சுமை நம் தலையிலிருந்து இறங்கவே இறங்காதா!" என்று அவரது வாய் முணுமுணுத்தது.

சதானந்தம் சந்தோஷ குமார சர்மாவின் சிரம தசையை நன்கு அறிந்திருந்தார். தம்மிடம் வாங்கிய கடனை அவர் திருப்பித் தரக் கஷ்டப் படுவதைச் சதானந்தம் விரும்பவில்லை. சர்மாவிடம் கொடுத்த பணத்தைப் பற்றி அவர் சிறிதும் கவலை கொள்ளவில்லை. தம் பணம் அவரிடம் இருப்பதாக ஒரு தடவை என்றால் ஒரு தடவை கூட ஞாபகப் படுத்தியதோ, கேட்டதோ இல்லை. சர்மாவிடம் பணம் என்ற பேச்சை எடுத்தால் கூட, தான் கொடுத்த பணத்தைத்தான் இவன் கேட்க வந்து விட்டானோ என்ற எண்ணம் சர்மாவுக்கு எழுந்துவிடக் கூடாதே என்பதற்காகச் சதானந்தம் பணம் என்ற பேச்சையே எடுக்கப் பயந்தார். அவர் பயந்ததைப் பார்த்தால், அவரே கடன் வாங்கி விட்டுச் சிரமப் படுகிறாரோ என்று கூட எண்ணத் தோன்றியது.

ஆனால் சர்மாவுக்குத்தான் மனத்தில் துளிக்கூடச் சாந்தி என்பது இல்லை. தம் பணத்தைப் பற்றிப் பேச்சே எடுக்காத இவர் எவ்வளவு தங்கமான மனிதர்! இப்படிப்பட்ட மனிதர் இந்த உலகத்தில் கிடைப்பது அரிது. ஆனால் அவர் பேச்சை எடுக்கவில்லை என்பதற்காக நாம் கவலையற்று இருந்து விடலாமா! பணம் வாங்கியவரோ நாம். அப்படியிருக்கும்பொழுது பணத்தைக் காலத்தில் திருப்பிக் கொடுத்து விட வேண்டியதுதானே நம் கடமை என்று எண்ணுவார்.

சதானந்தத்துக் கெதிரே தலைதூக்க அவருக்குத் துணிவு உண்டாகவில்லை. கடன் சுமை அவருடைய குனிந்த தலையைக் குனிந்த வண்ணமே இருக்கும்படி செய்துவிட்டது. சதானந்தம் இவ்வளவு கண்ணியமாகவும் மரியாதையாகவும் நடந்து கொள்ளாமல் அடிக்கடி கடனைத் தீர்த்து விட்டுத்தான் மறு காரியம் பார்க்க வேண்டும் என்று துன்புறுத்தியிருந்தால், அவருக்கு அவ்வளவு மனக் கிலேசம் ஏற்பட்டிருந்திருக்காது. அந்தக் கொடுமையைத் தலை நிமிர்ந்து ஒரு வேளை எதிர்க்கக்கூட முயன்றிருப்பார். ஆனால் சதானந்தத்தின் அந்தக் கண்ணியமான முறைக் கெதிரே தலை நிமிர்ந்து அவரால் பார்க்க முடியவில்லை. சிறைப்பட்டவன் என்னதான் பலம் உள்ளவனாயிருக்கட்டுமே, அவன் சிறைக்குள்ளே பலமற்றவனாகத்தானே கருதப்படுவான்!

ஒரு நாள் சதானந்தம் ஏதோ அலுவலாகச் சர்மாவின் வீட்டுக்கு வந்தார். அவருடைய வீட்டு அலமாரியில் பன்மொழிப் புத்தகங்கள் ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அதைக் கண்ட சதானந்தம், "இவை யெல்லாம் என்ன, சர்மா!" என்று கேட்டார்.

சர்மா கால் கட்டை விரலால் தரையைத் தேய்த்த வண்ணம், "இவை யெல்லாம் பழைய பத்திரிகைகள். அண்ணாவுக்குப் படிப்பது என்றால் ரொம்பப் பிடிக்கும். அவர் அநேகமாக எல்லாப் பத்திரிகைகளும் வரவழைப்பது உண்டு. உயிரோடு இருந்தவரை, யாரையும் இந்தப் பத்திரிகைகளைத் தொட விடமாட்டார். இப்பொழுது இவற்றைச் செல் அரித்துக் கொண்டிருக்கின்றன. கேட்பார் யாரும் கிடையாது!" என்றார்.

"பழைய பேப்பருக்குப் போட்டு விடுவது தானே!" என்றார் சதானந்தம்.

"இவற்றில் படங்கள் இருக்கின்றன. குழந்தைகள் அழுதால் இரண்டொன்றை எடுத்துக் கொடுக்கிறேன். உடனே குழந்தைகளின் அழுகை நின்று விடுகிறது. அவற்றின் அழுகையை நிறுத்த

"இந்தப் படங்களில் என்னதான் மாயசக்தி இருக்கிறதோ, தெரியவில்லை. அதனால்தான் இவற்றைப் பேப்பர்காரனுக்குப் போட மனம்வர மாட்டேன் என்கிறது" என்றார் சர்மா.

சதானந்தம் அலமாரியை நெருங்கி, "எங்கே! இரண்டொரு பத்திரிகைகளை எடுத்துக் கொடுங்கள், பார்ப்போம்! படங்கள் எப்படி யிருக்கின்றன வென்று!" என்றார்.

சர்மா சில பத்திரிகைகளை எடுத்துக் கொடுத்தார். ஒவ்வொரு பத்திரிகையிலும் நல்ல நல்ல வர்ணப் படங்கள் சில இருந்தன. சதானந்தம் சிறிது நேரம் வரை பத்திரிகைகளைப் புரட்டிப் புரட்டிப் பார்த்துக் கொண்டிருந்தார். சரேலென்று அவர் உள்ளத்தில் ஒரு எண்ணம் எழுந்தது. உடனே பரபரப்பான குரலில், "சர்மாஜி!" என்று அழைத்தார். சர்மா அவர் பக்கம் திரும்பி இலேசாகச் சிரித்தவாறு, "சொல்லுங்கள், என்ன விசேஷம்!" என்று கேட்டார்.

"இப்படங்கள் நல்ல கலைச் சிறப்பு வாய்ந்தவைகளாக இருக்கின்றன. யாராவது ரசிகர்களின் கண்களில் பட்டுவிட்டால் போதும், ஆயிரம் இரண்டாயிரம் என்று கொடுப்பார்கள், தெரியுமா!" என்றார் சதானந்தம்.

"இந்தப் பாக்கியம் மட்டும் எனக்கு இருந்தால் இப்படி இடிபடுவேனா!" என்றார் சர்மா நீண்ட பெருமூச்சு விட்டவாறே.

அவர் பேச்சைச் சிறிதும் காதில் வாங்கிக் கொள்ளாமல், "நீங்கள் ஒரு காரியம் செய்யுங்களேன்!" என்றார் சதானந்தம்.

"என்ன!"

"இன்று உட்கார்ந்து இந்தப் பத்திரிகையில் உள்ள நல்ல படங்களை யெல்லாம் பொறுக்கி எடுத்துத் தனியாக வையுங்களேன்!"

"சரி, அப்படியே செய்கிறேன்!"

"இந்தக் காரியம் முடிந்ததும் எனக்குத் தகவல் தெரிவியுங்கள்!"

"நீங்கள் என்ன செய்வீர்கள்!"

"நான் இவற்றை 'ஆல்பம்' ஆக்கி உங்கள் சார்பில் பத்திரிகைகளில் விளம்பரம் செய்வேன். அந்த விளம்பரம் யாராவது ரசிகர்கள் கண்ணில் பட்டு விட்டால் உங்களுக்கு நாலு காசு கிடைக்கலாம். படங்கள் மிக மிக நேர்த்தியாக இருக்கின்றன. எனவே, கட்டாயம் விலை போய்விடும் என்றே நம்புகிறேன்" என்றார் சதானந்தம்.

2

சேரிக் குவியலுக்கிடையே வைரம் கிட்டக்கூடும் என்ற நம்பிக்கையே சந்தோஷகுமார சர்மாவுக்கு இல்லை. வாழ்க்கையிலே ஏற்பட்ட பெரும் ஏமாற்றங்கள் அவருடைய நம்பிக்கையின் நாற்புற வாசல்களையும் நன்றாக அழுத்தி மூடிவிட்டன. உலகத்தில் எந்தக் காரியத்தை எடுத்தாலும் வெற்றியே காணாமல் தோல்விக்கு மேல் தோல்வியே அடையும் பாக்கிய மற்றவர்களின் கும்பலில் அவரும் ஒருவராகத்தான் விளங்கி வந்தார். சிலர் பொன்னைத் தொட்டால் மண்ணாகி விடும். சிலர் நலம்படப் பேசினாலும் தீதாகக் காதில் விழும். தாமும் அந்த மாதிரி அதிர்ஷ்டக் கட்டைக் கோஷ்டியைச் சேர்ந்தவர்தான் என்ற எண்ணம் அவருக்கு. எனவே, அவருக்கு அம்முயற்சியில் வெற்றி கிட்டாது என்ற எண்ணம்தான் மேலோங்கி நின்றது. அது மட்டும் அல்ல; அந்த எண்ணம் நம்பிக்கையாக உருவெடுத்து அசைக்க முடியாததாகக் கூட ஆகி விட்டது.

ஆயினும் சதானந்தம் சொன்னதின் பேரில் பகல் முழுவதும் உட்கார்ந்து படங்களைப் பொறுக்கிக்கொண் டிருந்தார். உள்ளத்தில் உற்சாகம்





"வெளியிலே போய்ச் சுற்றி அலைந்து விட்டுத் திரும்பி வந்தார். பத்திரிகையில் 108 டிகிரி வெய்யில் என்று படித்ததும் இப்படி அசந்து உட்கார்ந்து விட்டார்!

இல்லை. இருதயத்தில் ஈடுபாடில்லை. அகத்தில் அவாவோ, ஆசையோ இல்லை. ஏதோ சொன்னதற்குச் செய்ய வேண்டுமே என்று கடனுக்குத் தான் யந்திரம் போலச் செய்துகொண்டிருந்தார். காரணம், சதானந்தத்தின் சொல்லை அவரால் தட்டிக் கழிக்க முடியவில்லை. பகல் முழுவதும் படங்கள் பொறுக்கிவிட்டுச் சாயந்திரம் பார்த்தால், ஒன்றை விட ஒன்று நேர்த்தியான இருநூற்றுக்கு மேற்பட்ட படங்கள் தேறியிருந்தன. எல்லாவற்றையும் சேர்த்துப் பார்த்த அவரே துள்ளிக் குதித்தார் என்றால், அவருக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியைப் பற்றி அதிகம் சொல்லுவானேன்! அவருடைய முகத்தில் மகிழ்ச்சி கொடிகட்டியது. 'நாமாவது, பரீட்சையில் தேறுவாவது!' என்று எண்ணி அந்தப் பரீட்சைக்கு ஒரு முழுக்கு அழுதுவிட்ட மாணவனுக்கு, 'நீ பரீட்சையில் தேறிவிட்டாய்!' என்று தந்தி வந்தால், அவன் மன நிலை எப்படியிருக்கும்! அவன் அப்பொழுது மகிழ்ச்சிக் கடலில் எப்படி மிதப்பான்! நாற்புறமும் வியப்பினால் அகல விரிந்த கண்களுடன் ஆனந்தம் பொங்கச் சுற்றிச் சுற்றிப் பார்ப்பான் அல்லவா! அப்பொழுது சர்மாவின் நிலையும் ஏறக்குறைய, ஏறக் குறைய என்ன!—முற்றிலும் அதே நிலையைத்தான் ஒத்திருந்தது. அவர் அப்பொழுது அந்தப் படங்கள் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு பத்து ரூபாய் நோட்டாகவே மதித்துப் பார்க்கத் தொடங்கிவிட்டார். குழந்தைகளை அந்தப் பக்கம் கண்ணோட்டக் கூட விடவில்லை. அவர் வரப்போகும் வெற்றியை எண்ணி மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதக்கத் தொடங்கி விட்டார். ஆனால் அந்த மகிழ்ச்சி கூப்பிடு தூரத்திலா இருந்தது! காத தூரத்தில் அல்லவா—கண்களுக் கெட்டாத காத காத தூரத்தில் அல்லவா இருந்தது! சதானந்தம் ஊட்டிச் சென்ற நம்பிக்கை அவருடைய மூளையைக் குடைந்து கொண்டு சென்று நிச்சயமாகவே உருத்தரித்து விட்டது. எனவே, அவர் நிலை கொள்ளாத மகிழ்ச்சியில் மிதக்கத் தொடங்கி விட்டார்.

சதானந்தம் அந்தப் படங்களை 'ஆல்பமா'கத் தயாரித்தார். பிறகு பல பிரபல பத்திரிகைகளில் அது சம்பந்தமாக விளம்பரமும் செய்தார். அது முதற் கொண்டு சந்தோஷ குமாரசர்மா எப்பொழுதும் தபால்காரனை எதிர் பார்த்த வண்ணம் இருக்கலானார். தினம் எழுந்ததும், 'இன்று ஏதாவது கடிதம் வராதா!' என்று எண்ணுவார். பகல் பொழுது இராப் பொழுதாகும். ஆனால் கடிதம் வராது. இரவு வேளைகளில் நம்பிக்கை தெருப் புழுதியைப் போல அடங்கிவிடும். ஆனால் மறு நாள் பொழுது புலர்ந்ததும் புலராததுமாகச் சதானந்தத்தின் பேச்சைக் கேட்டுவிட்டு இழந்த நம்பிக்கை மறுபடியும் கிளர்ந்து எழும். தெருவில் வண்டிகள் செல்ல ஆரம்பித்து விட்டால் அடங்கின புழுதி பறக்கத் தொடங்குவது இயல்புதானே! நம்பிக்கை மறுபடியும் தன் ஒளியும் களையும் சொட்டும் முகத்தை அவருடைய மனக் கண்களிலே காட்டி, வாசற் படியில் கொண்டு போய் நிறுத்திவிடும். தபால் வரும் நேரம் வந்து விட்டால் கடைத் தெருவுக்கே இழுத்துக் கொண்டு போய் விடும். அங்கிருந்து அப்படியே தபாலாபீஸிலேயே கூடக் கொண்டு போய் நிறுத்திவிடும்.

இப்படியே ஒரு மாதம் ஓடிவிட்டது. ஆனால் எங்கிருந்தும் கடிதம் வந்தபாடில்லை. சந்தோஷ குமார சர்மா கடிதத்தை எதிர் பார்த்துக் கடைசியில் நம்பிக்கை இழந்துவிட்டார். ஆயினும் சிற்சில சமயம் வெற்றி கிட்டாதா என்ற சபலம் அவரை ஆட்கொண்டு அல்லலுறச் செய்து வந்தது.

இருளில் மின்மினிப் பூச்சி பிரகாசிக்கிறது. 'மினுக் மினுக்' என்ற அதன் பிரகாசம், நம்பிக்கை இழந்தவர்களின் உள்ளத்தைத் தன்பால் கவர்ந்து நம்பிக்கை ஊட்டி எவ்வாறு புதிய உற்சாகத்தையும் உணர்ச்சியையும் உண்டாக்கி விடுகிறது! அதன் ஒளியின் உதவியைக் கொண்டு வழி தவறிய பிரயாணிகள், தாங்கள் போய்ச் சேர வேண்டிய இடத்தை வழி தெரிந்து கொண்டு அடைந்து விடலாம் என்று எண்ணிச் சில கணங்களாவது தங்கள் துயரத்தை மறந்துவிடுகிறார்கள். ஆனால் அந்தப் பொய் ஆசையிலும் நம்பிக்கையிலும் உண்மை ஒளி இல்லை. ஆயினும் அது தொலைவிலிருந்து வரும் இன்னிசையைப் போல் கட்டாயம் மனோரம்யமாகத்தான் இருக்கிறது. இதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை. அதில் மழையின் ஈர நைப்பு இருந்தாலும் இல்லாவிட்டாலும் கார்முகிலின் மனமோகன மந்திரசக்தி இருக்கிறது என்பதிலும் சந்தேகம் இல்லை. அச் சக்தியை யாராலும் பிடுங்கிக் கொள்ள முடியாதல்லவா! எனவே, சந்தோஷ குமார சர்மா தம் நம்பிக்கையை விடவில்லை. அல்லது நம்பிக்கை சர்மாவை விடவில்லை என்றும் சொல்லலாம். இப்படியே நாட்கள் ஓடிக் கொண்டிருந்தன.

3

இடையில் ஒருநாள் நம்பிக்கை வீண் போகாமல் சர்மாவின் வீட்டைத் தேடிக் கொண்டு அதிர்ஷ்டம் தானே வந்து சேர்ந்தது. கல்கத்தாவிலிருந்து ஒரு மார்வாடி ஸேட், 'ஆல்ப'த்தை அனுப்பி வைக்கும்படியும், பிடித்தால் வாங்கிக் கொள்வதாகவும், பொருள்தான் நல்லதாக இருக்க வேண்டுமே ஒழிய விலையைப் பற்றிச் சிறிதும் கவலையில்லை என்றும் எழுதியிருந்தார்.

தூங்கும் மனிதன் விழித்துக் கொள்வதற்கு முன்னால் என்ன செய்கிறான்! புரண்டு படுத்துக் கொள்கிறான். அப்புறம் தானே எழுந்து படுக்கையில் உட்காருகிறான்! அம்மாதிரி இருந்தது கல்கத்தாவிலிருந்து வந்த இந்தக் கடிதம்! இதை ஆனைமுகன் ஒருவன் புரண்டு படுத்ததாகவோ

பெண்ணழகி ஒருத்தி புரண்டு கொடுத்துக் கொண்டதாகவோ சொல்ல முடியாது. ஏனெனில் அவருடைய பாக்ய தேவதையே யல்லவா புரண்டு கொடுத்துக் கொண்டது!

உடனே சந்தோஷகுமார சர்மா கடிதத்தை எடுத்துக்கொண்டு சதானந்தத்தின் வீட்டுக்கு ஓடினார். "கடைசியில் இத்தனை நாட்களுக்கு அப்புறம் ஒரு கடிதம் வந்துவிட்டது. ஆல்பத்தை அனுப்பி வைக்கட்டுமா!" என்று கேட்டவாறே சதானந்தத்திடம் கடிதத்தைக் கொடுத்தார்.

சதானந்தம் கடிதத்தை ஒரு முறைக்கு இரு முறையாக நன்றாகப் படித்துப் பார்த்தார். பிறகு "ரிஜிஸ்தர் செய்து அனுப்பி வையுங்கள். பார்த்தால் மனுஷ்யன் ரசிகனாகத்தான் தோன்றுகிறான். வாங்கி விடுவான்!" என்றார்.

"விலையைப்பற்றி ....?"

"ஆயிரம் ரூபாய்க்குக் குறைந்தால் கிடைக்காது என்று எழுதி விடுங்கள்!"

சில நாட்களுக்குப் பிறகு அதற்குப் பதில் கடிதமாக ஒரு 'இன்ஷ்யூர் கவர்' வந்தது. சந்தோஷ குமார சர்மாவுக்குக் கைகால்கள் எல்லாம் வெட வெட வென்று நடுங்கத் தொடங்கின. கை கால்களைக் காட்டிலும் மனம் நடுங்கியது தான் பிரமாதம். அதைச் சொல்லி முடியாது. கையெழுத்துப் போட்டுக் கடிதத்தை வாங்கிக் கொண்ட அவர் நடுங்கும்கைகளுடனேயே உறையைப் பிரித்தார். உறையைப் பிரித்தவர் ஒரு துள்ளுத் துள்ளிக் குதித்தார். அதில் நூறு நூறு ரூபாய் நோட்டுக்களாகப் பத்து நோட்டுக்கள் இருந்தன.

முன்னால் அவருடைய பாக்கியம் புரண்டு மட்டும் கொடுத்திருந்தது. இப்பொழுதோ முழுசாக எழுந்திருந்தே உட்கார்ந்து விட்டது' உட்கார்ந்திருந்த சர்மா எழுந்து நின்றார். இரண்டாயிரம் என்று எழுதியிருந்தால், ஒரு வேளை இரண்டாயிரமே கிடைத்திருக்கலாமோ! — இந்த அர்த்தமற்ற அசாவியச் சபலம் எழுந்து அவருடைய ஆனந்தத்தைக் கெடுத்து விட்டது.

சாயங்காலம் சர்மா சதானந்தம் வீட்டுக்குச் சென்று ஐந்து நூறு ரூபாய் நோட்டுக்களை எடுத்து அவருக்கெதிரே வைத்தார். பிறகு சதானந்தத்திடம், "கடவுள் 'காப்பாற்றினார்! இந்தச் சுமையிலிருந்து ஒரு வழியாக எனக்கு விடுதலை கிடைத்தது. உங்கள் ரூபாயை எடுத்து வையுங்கள். நீங்கள் என்னிடம் காட்டிய கருணைக்கும் அன்புக்கும் நான் தங்களை ஆயுள்வரை மறக்க மாட்டேன்" என்றார்.

சதானந்தம் வியப்புற்றவராய், "சர்மாஜி! லெட் ஆல்பத்தை வாங்கி விட்டாரா, என்ன!"

"ஆமாம், வாங்கி விட்டார்!"

"பணம் வந்து விட்டதா!"

"ஆமாம், பணமும் வந்து விட்டது!"

"ஆயிரமா!"

"ஆமாம். இல்லாவிட்டால் இந்த ஏழையிடம் பணம் ஏது, தங்கள் கடனைத் தீர்க்க! கடவுள் கண் திறந்து விட்டார்!"

"நான் முன்னாலேயே சொல்ல வேண்டும் என்றிருந்தேன். நீங்கள் அதைக் கேட்டு மனம் உடைந்து வருத்தப்பட்டால் என்ன செய்வது என்று சொல்லத் தயங்கினேன். இப்பொழுது எனக்கு அந்தக் கவலை இல்லை. ஏனெனில் பணம் உங்கள் கையில் இருக்கிறது. என் கையில் தற்சமயம் காசு காக இருக்கிறது. உங்களுக்குக் கொஞ்சம்கொடுத்ததால் நான் குறைந்து போய் விடுவேனா, என்ன!" என்றார் சதானந்தம்.

அதைக் கேட்ட சர்மாவின் கண்களில் நீர் துளித்தது மேல் துணியினால் கண்களைத் துடைத்துக் கொண்டு, "உங்களைப் போன்ற நல்ல மனிதர்களை இந்த உலகத்தில் காண்பதரிது. கடவுள் உங்களுக்கு நீண்ட ஆயுள் அளிக்க வேண்டும். ஆனால் நான் இனி இந்த ரூபாயை எடுத்துக் கொள்ள மாட்டேன். இவ்வளவு வருஷங்களாகத் தாங்கள் வாய் திறந்து கேட்கவில்லை. இதை விடப் பெரிய உபகாரம் வேறு என்ன வேண்டும்! இந்தக் கடனிலிருந்து விடுபட்டால்தான் என் இருதயத்துக்குச் சாந்தி கிட்டும். நீங்கள் இந்த ரூபாயை எடுத்துக் கொண்டுதான் ஆகவேண்டும்" என்றார் பிடிவாதமான குரலில்.

ஏழையான சர்மாவின் உதார சித்தத்தையும் கன்னடத்தையும் கண்ணுற்ற சதானந்தத்தின் மனம் மயிலாக நடனமாடியது. அவர் நோட்டுக்களை வாங்கி வைத்துக் கொண்டார். மனிதன் பணம் கொடுக்கும் பொழுதும் இவ்வளவு மகிழ்ச்சியுடன் கொடுக்க முடியும் என்ற அநுபவம் இன்று தான் அவருக்கு முதன் முதலாக ஏற்பட்டது. சர்மா விடை பெற்றுச் சென்றபின் அவர் தம் இரு கண்களையும் மூடிக் கொண்டு ஏதோ யோசனையில் ஆழ்ந்தார். அப்பொழுது அவருடைய முகத்தில் ஒரு தனி ரகமான ஆத்மிக ஒளி தாண்டவமாடியது. அம்மாதிரி ஆத்மிக ஒளி இந்த உலகத்தில் சிற்சில சமயம்தான் காணப்படுகிறது.

4

ஆறு மாதங்கள் ஓடிவிட்டன.

சதானந்தம் உடல் நலம் கெட்டுப் படுத்த படுக்கையாக இருந்தார். அவருக்குத் தம் ஆயுளில் இதுவரை அம்மாதிரி உடல் நலம் கெட்டதில்லை. சந்தோஷ குமார சர்மா அவருடைய உடல் நலம் சரியாக வேண்டும் என்பதற்காக அவர் அருகில் உட்கார்ந்து ச்லோகங்கள் சொல்லிக் கொண்டிருந்தார். அவர் வைத்தியரோ, டாக்டரோ இல்லை. அவருக்கு மருந்து தெரியாது; மாயம் தெரியாது. அவருடைய மருந்து



எங்கே கிளம்புகிறீர் என்று கேட்கிறீரா? பத்திரிகை ஒன்றில் ஜோஸ்யப் பகுதியில் எனக்கு தூரப் பிரயாணமும் வீண் அலைச்சலும் நேரிடும் என்று போட்டிருந்தது. அதனாலே ஒரு முப்பது ரூபாய் சரம்பு டிக்கட் வாங்கிக் கொண்டு புறப்பட்டேன்!



சென்னை, மேல மாம்பலம் ஸ்ரீ தேவி உயர்தர ஆரம்பப் பாடசாலையின் வருஷாந்திர விழா, ஏப்ரல் மாதம் 29ந் தேதி கனம் நிதி மந்திரி சி. சுப்பிரமணியம் அவர்களது தலைமையில் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. விழா சிறப்புற நடைபெறுவதற்கான ஏற்பாடுகளைச்செய்த நிர்வாகக் குழுவினரைப் படத்தில் காணலாம்.

சுலோகங்கள் சொல்வதுதான். அவர் தம் ஆத்மாவின் முழுச் சக்தியையும், மனத்தின் பூரண சிரத்தையையும் உபயோகித்துப் பிரார்த்தனை செய்தார். மருந்து மாயத்தைக் காட்டிலும், பிரார்த்தனை தான் மேலானது என்பது அவருடைய மேன்மையான அபிப்பிராயம்.

ஒரு நாள் சதானந்தம் கட்டிலில் படுத்திருந்தார். அவருக்கு அருகிலேயே அவருடைய கிழத் தாயார் உட்கார்ந்திருந்தாள். தனயனின் வெளிறி வாடிப் போயிருந்த முகத்தைக் காண அவளுக்கு வருத்தமாயிருந்தது. இமைகளை மூட்டிய கண்ணீரை வெளியே விடாமல் எப்படியோ அடக்கிக் கொண்டாள். அவளுக்குக் கொஞ்ச தூரத்தில் சதானந்தத்தின் மனைவி துயரமே உருவாக நின்று கொண்டிருந்தாள். பக்கத்தில் கிடந்த பெஞ்சியில் உட்கார்ந்து சந்தோஷ குமார சர்மா பகவத் கீதையைப் பாராயணம் செய்துகொண்டிருந்தார்.

திடீரென்று அச்சமயம் சதானந்தம் ஏனோ மூர்ச்சையாகி விட்டார்.


சர்மா கீதையை அப்படியே வைத்து விட்டுச் சதானந்தத்தின் தலைமாட்டில் போய் உட்கார்ந்து கொண்டார். சதானந்தத்தின் மனைவி பால் கொண்டு வருவதற்காக உள்ளே ஓடினாள். தாயார் பிள்ளையின் நிலையைக் கண்டு பயந்து போய்க் கூச்சலிடத் தொடங்கினாள். இந்தச் சமயம் சந்தோஷகுமார சர்மாவுக்குச் சதானந்தத்தின் தலைமாட்டில் ஏதோ ஒரு கடினமான பொருள் உறுத்துவது போலத் தோன்றியது. அவர் தலைமாட்டின் கீழே கையை விட்டுத் துழாவி அந்தப் பொருளை எடுத்தார். சர்மாவுக்கு ஏற்பட்ட வியப்புக்கு ஓர் எல்லையில்லை. அந்தக் கடினமான பொருள் வேறு ஒன்றும் இல்லை; அதே ஆல்பம்தான். அதைக் கல்கத்தா ஸேட் யாரும் விலைக்கு வாங்கி விடவில்லை. சதானந்தம்தான் வாங்கியிருந்தார். ஆனால் அவ் விஷயத்தை அவர் சர்மாவுக்குச் சொல்லவில்லை. ரகசியமாகவே வைத்திருந்தார். சர்மாவுக்கு அது சம்பந்தமாக எவ்விதமான சந்தேகமும் ஏற்படாத வகையில் பாதுகாத்து வந்தார்.

சந்தோஷகுமார சர்மா சதானந்தத்தின் கடனைத் தீர்த்து விட்டதாக எண்ணி இதுவரை மனத்துள் மகிழ்ந்து கொண்டிருந்தார். ஆனால் இன்று, 'கடன் சுமை இறங்கவில்லை. ஆனால் முன்னைக் காட்டிலும் இரு மடங்கு ஆகிவிட்டது' என்பதை நினைத்தபொழுது அவருடைய உள்ளம் புண்பட்டது. முன்னால் நூறாக இருந்தது. இப்பொழுது ஆயிரமாக அல்லவா ஆகிவிட்டது!

அவர் மூர்ச்சையற்றுக் கிடந்த சதானந்தத்தின் அருகில் உட்கார்ந்த வண்ணம் ஒரு நீண்ட பெருமூச்சு விட்டார். பிறகு, "இந்தக் கடன் சுமை எப்பொழுதுமே இறங்காதா?" என்று தமக்குள் முணு முணுத்துக் கொண்டார்.

சிறிது நேரத்துக் கெல்லாம் சதானந்தம் சுய நினைவுக்கு வந்தார். சர்மாவின் கையில் ஆல்பத்தைக் கண்டதும், வெடுக்கென்று அதைப் பிடுங்கிக்கொண்டு, 'இந்த ஆல்பத்தைக் கல்கத்தா ஸேட்டிட மிருந்து நான் சமீபத்தில்தான் வரவழைத்தேன்!" என்றார்.

சதானந்தம் பொய் சொல்கிறார் என்பது சர்மாவுக்குத் தெரியாமல் இல்லை. அவர் சதானந்தத்தை முன்னைக் காட்டிலும் அதிக நல்லவராகவும், உபகார சிந்தை உள்ளவராகவும், உயர் நோக்கம் படைத்தவராகவும் எண்ணத் தலைப்பட்டார். "நீங்கள் பொய் சொல்கிறீர்கள்!" என்று அவரால் சொல்ல முடியவில்லை. எவ்வளவு சிரமப்பட்டும் அவருக்கு அப்படிச் சொல்லத் துணிவு உண்டாகவில்லை. அவர் பேசாமல் உட்கார்ந்து கீதா பாராயணம் செய்யலானார்.



நீரிழிவு

ஏழு நாட்களில்

குணமாகும்

•

சிறு நீரில் அதிக சர்க்கரை இருப்பின் **நீரிழிவு (DIABETES)** என்று சொல்லப்படும் இப் பயங்கர வியாதியுள்ள நோயாளி நாளுக்கு நாள் தன் முடிவு நெருங்குவதைக் காண்கிறான். இதை நிவர்த்திக்க டாக்டர்கள் இன்ஸுலின் இன்ஜக்ஷன் ஒன்றைத்தான் கண்டு பிடித்தார்கள். இதைக் குத்திக் கொள்வதால் பூரண குணம் ஏற்படுவதில்லை; இன்ஜக்ஷன் மருந்து உள்ளவரை சர்க்கரை தற்காலிகமாக மறைந்து விடுகிறது.

அபரிமிதமான தாகம், பசி, அடிக்கடி சிறு நீர் சர்க்கரையுடன் போதல், எரிச்சல் ஆகியவைகள் இந்த வியாதியின் முக்கிய அறிகுறிகள். வியாதி முற்ற ராஜப் பிளவை கட்டிகள், சாலேஸ்வரம் இதர கொடிய வியாதிகள் ஏற்படும். வீனஸ் சார்ம் நவீன விஞ்ஞான அதிசயமாகும். இதை உபயோகித்ததால் பலர் மரணத்தினின்று தப்பியுள்ளனர்.

வீனஸ் சார்ம் உபயோகித்த 2-வது அல்லது 3-வது நாளில் சிறுநீரில் சர்க்கரை குறைந்து அடிக்கடி போகும் சிறு நீரும் குறைகிறது. 3-வது அல்லது 4-வது நாளில் வியாதி பாதிக்குமேல் குணமடையும். இந்த மருந்துக்குப் பத்தியம் கிடையாது; இன்ஜக்ஷன் கிடையாது. நன்கு விளக்கும் இலவச ஆங்கில புத்தகத்திற்கு எழுதிக் கேளுங்கள்.

•

50 வில்லைகள் கொண்ட புட்டி 1-க்கு ரூ. 6-12-0

(பாக்கிங், தபால் செலவும் இனம்)

•

வீனஸ் ரிஸர்ச் லாபரட்டரி (K.M.)

தபால் பெட்டி நெ. 587, கல்கத்தா



காதல் யாத்திரை

கோமதி ஸ்வாமிநாதன்

கைலாசம் ஆறாவது தடவையாகத் தன் கையிலிருந்த கல்யாண அழைப்பிதழைப் படித்து முடித்தான். ஏழாவது தடவையாக அவன் கண்கள் அந்த அழைப்பிதழில் கண்டிருந்த வரிகள் மீது ஓட ஆரம்பித்தபோது அவன் கைகள் அவன் கண்களுடன் ஒத்துழைக்க மறுத்தன. அத்துடன் நிற்காமல் பிடிவாதமாக அந்த அழகிய அழைப்பிதழை ஒரே கசக்காகக் கசக்கிக் கீழேயும் எறிந்து விட்டன!

கைலாசம் ஒரு கட்டைப் பிரம்மச்சாரி! கல்யாணத்துக்கு நின்று கொண்டிருந்தான். வயதும் வர வர ஏறிக்கொண்டிருந்தது! ஆனால் கல்யாணம் ஆகும் வழியைத்தான் காணோம். அவனுக்கு அப்புறம் பிறந்தவர்களும், அவனது ஆப்த நண்பர்களும் அனாயாசமாக அப்பப்போது தங்கள் கல்யாணங்களை முடித்துக் கொண்டு ஆனந்தமாக இல்வாழ்க்கையில் ஈடுபட்டார்கள். அதுமட்டுமா? கைலாசத்திற்குத் தங்கள் திருமண அழைப்பிதழ்களையும் அனுப்பி வைத்து அவன் வயிற்றெரிச்சலையும் கொட்டிக் கொண்டார்கள்.

எனவே, கைலாசம் ஒரு கடும் தீர்மானத்திற்கு வந்து விட்டான். 'யாரையாவது காதலித்து எப்படியாவது கல்யாணம் செய்து கொண்டு விடவேண்டியது' என்பதுதான் அந்தத் தீர்மானம்.

அந்தத் தீர்மானம் உருவாகவும், அவனுக்கு வெகு சமீபத்தில் புத்தம் புதிய ஒரு சிவப்பு ஆஸ்டின் கார் வந்து நிற்கவும் ஒத்திருந்தது. அப்ஸரஸ் போன்ற ஒரு ஆரணங்கு அனாயாசமாக டிரைவர் சீட்டிலிருந்து இறங்கினாள். அவளைத் தொடர்ந்து ஒரு அழகிய நாய்க் குட்டியும் இறங்கியது. அதை அவள் அப்படியே வாரிச் சுருட்டிக் கையில் அணைத்துக் கொண்டு அருகிலிருந்த புல் தரைக்குப் போனாள். கைலாசத்தின் தலை பம்பரம்போல் சுற்றியது. இந்த உலகத்திலே அந்த நாய்க்குட்டி செய்திருக்கும் பாக்கியம் எந்த ஜீவராசியும் செய்திருக்க முடியாது என்று தோன்றியது அவனுக்கு. அந்த நாயிடம் காண்பிக்கும் அன்பில் ஆயிரத்தில் ஒரு பங்கு அவனிடம் அவள் காண்பித்தால் அவன் கிருதார்த்தனாகி விடுவான். ஆனால் அவள் அவன் பக்கம் திரும்பியதாகவே தெரியவில்லை. கைலாசம், காதல் சாஸ்திரத்தின் முதல் பாடங்களை எங்கோ புஸ்தகங்களில் படித்தவன். ஆகவே, சிறிதும் மனம் தளரவில்லை. முதல் படியாக அவள் கார் நம்பரை ஜபிக்க ஆரம்பித்தான். அடுத்தபடியாக அவள் நாயின் பெயர் காதில் விழுந்தால் அதையும் பாராயணம் பண்ணத் தீர்மானித்தான். பி. எம். 2038 என்ற நம்பரைத் தவிர வேறு நம்பரே உலகத்தில் இல்லை என்றுகூட எண்ணி விட்டான்!

வந்த வேகத்திலேயே அந்தக் காரிகை கிளம்பி விட்டாள், தன் காரின் நம்பரை அந்தக் கட்டை பிரம்மச்சாரியின் மனத்திலே பதிய வைத்து விட்டு!

காதற் சுழலில் சரியாகச் சிக்கித் தவித்த கைலாசத்தின் கண்களில் அப்புறம் அந்தக் கார் என்னவோ தட்டுப்படவே இல்லை!

தன் அறையில் உட்கார்ந்திருந்த கைலாசத்திற்கு வாசல் பக்கத்தில் யாரோ கலகலவென்று இனிய குரலில் பேசிக் கொண்டே வருவது காதில் விழுந்தது. நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டான். அடுத்த விநாடியில் அவன் முன் இரண்டு நாகரிக யுவதிகள் கண்களைக் கவரும் உடைகளில் காட்சி யளித்தார்கள். அவர்களில் ஒருத்தி அதே இருபது முப்பத்தெட்டு நம்பருள்ள காரின் சொந்தக்காரியாக இருக்கவே, கைலாசத்துக்கு ஏற்பட்ட ஆனந்தத்தைச் சொல்லி முடியாது. தன் கல்யாணக் கற்பனையில் ஈடுபட்டுக் கைலாசம் அவர்களை உபசரித்து உட்கார வைக்கவே மறந்துவிட்டான். சில கணங்களுக்குப் பிறகு தான் சுய நினைவு வந்து அவர்களை வரவேற்று உட்கார வைத்தான்.

"மிஸ்டர்! எங்கள் கல்லூரி கலாசார சங்கத்தின் சார்பில் 'காதலர் கஷ்டம்' என்னும் நாடகம் நடக்கப் போகிறது, அடுத்த ஞாயிற்றுக்கிழமை மாலை. தங்களைப் போன்ற ரசிகர்கள் அவசியம் முதல் வரிசையில் அமர்ந்து பார்த்து ரசிக்க வேண்டும்"



என்றாள் இருபது முப்பத்தெட்டின் சொந்தக்காரி. அவளைத் தொடர்ந்து, "நாடகம் மிக நன்றாக இருக்கும். அதன் மூலம் வரும் நிதி எங்கள் கலாசார சங்கத்தின் கட்டிட நிதிக்குப் போகிறது!" என்றாள் இன்னொருத்தி. கைலாசம் முதல் அழகியின் கையைக் கவனித்தான். பத்து ரூபாய் டிக்கட் ஒன்று அவள் கையில் ஊசலாடிக் கொண்டிருந்தது.

ஒரு பத்து ரூபாயென்ன? ஒன்பது பத்து ரூபாய் டிக்கட்டுகள்கூட அவள் கையிலிருந்து வாங்க அவன் தயார்தான். அத்தகைய அழகி கேட்கும்போது மறுத்தால் கௌரவமாக இருக்குமா? அந்தச் சந்தர்ப்பத்தை நழுவ விட்டால் அப்புறம் அவன் காதல் என்ன ஆவது? எனவே, அவன் கை அவனை அறியாமலே பர்சை நோக்கிப் போயிற்று. அதற்குள்ளாக அவன் மனத்தில் வேறு ஒரு யோசனை பளிச்சிட்டது. டிக்கட்டை வாங்கி விட்டால் அப்புறம் அவளை மீண்டும் சந்தித்துப் பேசச் சந்தர்ப்பம் கிட்டுமோ, கிட்டாதோ? காதல் புரிந்து கல்யாணம் செய்து கொள்வதென்றால் பல சந்தர்ப்பங்கள் கிட்டினால் அல்லவா முடியும்? எனவே, டிக்கட் வாங்குவதை ஒருநாள் ஒத்தி போட்டால் என்ன என்று எண்ணினான்.

அதற்கேற்றபடி சமயோசிதமாக, "ஒன்று என்ன, இரண்டு டிக்கட் கூட எடுத்துக் கொள்கிறேன்......! ஆனால் வேலையாள் இப்போதுதான் பாங்கிற்குப் பணம் வாங்கி வரப் போயிருக்கிறான்! வரத் தாமதமாகலாம்......! நாளைக்கு நீங்களே இந்தப் பக்கம் வருவீர்களா? வந்தால் பணம் கொடுத்து விட்டு டிக்கட் பெற்றுக் கொள்கிறேன்" என்றான். பிறகு, "டேய் பையா......! கடையிலே போய் கிரஷ் வாங்கிக் கொண்டு வாடா!" என்றான் உள் பக்கம் பார்த்து. அங்கு ஆள் ஒருவரும் இல்லை என்று அவனுக்குத் தெரியாதா? இருந்தாலும் சந்தர்ப்பத்தில் தமது கௌரவத்தை விட்டுக் கொடுக்கலாமா?

"வந்தனம், வீணில் நீங்கள் சிரமப் படுத்திக் கொள்ள வேண்டாம்! நாங்கள் இப்போதுதான் காப்பி சாப்பிட்டோம்......! உங்கள் உதவிக்கு வந்தனம். நாளைக் காலை நாங்கள் வருகிறோம். இரண்டு முதல் வகுப்பு டிக்கட்டுகள் வாங்கிக் கொள்ள வேண்டும். மறந்து விடாதீர்கள்!" என்றாள் இருபது முப்பத்தெட்டின் சொந்தக்காரி. அப்பொழுது அவள் காதில் தொங்கிக் கொண்டிருந்த லோலாக்குகள் வெகு அற்புதமாக அசைந்தாடின.

அவர்கள் போய் வெகு நேரமாகியும், கைலாசத்திற்கு அவர்கள் நின்று கொண்டிருப்பது போலவே பிரமை ஏற்பட்டது.

அவனுக்கு இரவு முழுதும் தூக்கமில்லை. பொழுது எப்பொழுதடா விடியப் போகிறது என்று புரண்டு புரண்டு படுத்தான். ஆறு மணிக்கே எழுந்திருந்து ஜோராக உடை அணிந்துகொண்டு ஹாலில் வந்து உட்கார்ந்தான். கடிகாரத்தின் சிறிய முள் தயங்கித் தயங்கி ஒன்பதைக் கடந்து விடவே அவன் நம்பிக்கை இழந்தான். அந்தச் சமயம்தான் வீடு கூட்டும் வேலைக்காரி உள்ளே வந்து, "ஐயா! கல்லூரியிலிருந்து யாரோ உங்களை..." என்றாள். அவள் சொல்லி முடிப்பதற்குள்ளாகவே மின்னல் வேகத்தில் வெளித் திண்ணைக்கு வந்தான் கைலாசம்.

கண்களைக் கசக்கிக் கொண்டு பார்த்தான். காரிகைகளைக் காணோம். கட்டைத் தடியனாக முறுக்கிய மீசையுடன் கன்னங்கரேலென்று ஒருவன் நின்று கொண்டிருந்தான். ஒருவேளை அவர்கள் பக்கத்து வீடுகளுக்குள் போயிருக்கிறார்களோ என்று நினைத்தான்.

"ஐயா!" என்ற அந்தக் கட்டை ஆசாமியின் குரல் கைலாசத்தை நிறுத்தியது. "நான் காலேஜ் பியூன் கண்ணுசாமிங்க! நாடக டிக்கட் வேண்டுமென்று சொன்னீங்களாம்! கமலி அம்மா இதைக் கொடுத்துப் பணம் வாங்கி வரச் சொன்னாங்க!" என்று சொல்லி இரண்டு டிக்கட்டுகளை நீட்டினான்.

"அவங்க எங்கே?" என்ற ஈனமான கேள்வி கைலாசத்தின் அடித் தொண்டையிலிருந்து வந்தது. கமலிதான் இருபது முப்பத்தெட்டின் சொந்தக்காரி என்பதை முதல் நாளே தெரிந்து கொண்டிருந்தான் கைலாசம்.

"அந்த அம்மாவுக்கு இன்றைக்குத் திடீரென்று கல்யாண நிச்சயதார்த்தம் வைத்து விட்டார்களாம்! அதனாலே காலேஜு சங்க வேலை நிற்கக் கூடாதுன்னு என்னை அனுப்பிச்சாங்க!" என்றான் கண்ணுச்சாமி.

உலகமே குடை ராட்டினமாகச் சுற்றுவது போலிருந்தது கைலாசத்துக்கு. காசி யாத்திரை புறப்படுவதாகக் கனவு கண்டு கொண்டிருந்தஅவனுக்கு நிஜமாகவே தான் காஷாயம் தரித்துக் கொண்டு, காசி கங்கை என்று புறப்படுவது போன்ற பிரமை ஏற்பட்டது.

சகுனத் தடை

டி. ஆர். வி.

கதை எழுத உட்கார்ந்தேன். சிந்தனைப் பறவை சிறகடித்துப் பறக்க ஆரம்பித்தது. உள் கட்டிலிருந்து எழுந்த பேச்சுக் குரல் அச் சிந்தனையைத் தடை செய்தது.

"ஏண்டி, ராஜம்! விஷயம் தெரியுமோடி, உனக்கு? வக்கீல் வீட்டுப் பெண் பிரேமாவுக்குக் கல்யாணம் திடீரென்று நின்றுபோய் விட்டதாமே!" — பழக்கமான குரல்தான். அடுத்த வீட்டு அம்புஜம்மாளின் குரல்!

"சரிதான்! கதை ஆரம்பிக்கும் போதே சகுனம் சரியாயில்லை! இனிமேல் எழுதினாற் போலத்தான்!" என்று அலுத்துக் கொண்டவாறு பேனாவை மூடி வைத்தேன்.

அம்புஜம்மாளின் வழக்கம் அது. தனக்குத் தெரிந்த எந்த விஷயத்தையும், கண், மூக்கு ஒட்ட வைத்து, நாலுபேர் அறிய ஒலிபரப்பா விட்டால் தூக்கம் வராது அந்த அம்மாளுக்கு! எந்த விஷயமானாலும், 'விஷயம் தெரியுமோடி, உனக்கு......?' என்ற கேள்விதான் முன்னுரையாக அமையும். ஏதாவது ஓரிரண்டு ரூபாய் கடன் கேட்க வந்திருப்பாள்! இப்படி ஊர் விஷயம் ஒன்றை, ஒன்றுக்கு நாலாக உளறிக் கொட்டி, வந்த காரியத்தை நாசுக்காக முடித்துக் கொண்டு போவதில் கை தேர்ந்தவள் அந்த அம்மாள்!

"என்ன மாமி விஷயம்? நிச்சயதார்த்தம் கூட நடந்து விட்டதே! ஏன் நின்று விட்டது?" இது ராஜத்தின் கேள்வி.

"அது என்னமோடி, அம்மா! முகூர்த்தத்திற்கு நாள்கூட வைத்தாகி விட்டது! ஏற்பாடுகள் எல்லாம் நடந்து கொண்டிருக்கின்றன. நேற்று திடீரென்று பிள்ளையின் தகப்பனாரிடமிருந்து கடிதம் வந்ததாம்!......என்னவோ சகுனம் சரியாயில்லையாம்!......பெண் பிடிக்க வில்லையென்றால், நொண்டிச் சாக்கு ஆயிரம் சொல்வார்கள்......!"

அதற்கு மேலே சொன்னது என் காதுகளில் விழவில்லை. சகுனம் சரியாக இல்லையாம்!...சீ...சீ...நல்ல சகுனம்! தும்மினால் சகுனம் சரியில்லை! இருமினால் ஆபத்து! மனித சமுதாயத்திலே இப்படிப்பட்ட மூட நம்பிக்கைகள் என்றைக்கு மாய்ந்தொழிகின்றனவோ, அன்றைக்குத்தான் நல்ல காலம்!

கண் இமைகளை மூடியவாறு சாய்வு நாற்காலியில் சாய்ந்திருந்தேன். எண்ணச் சுழலிலே என்னை இழந்து கொண்டிருந்தேன்.

திடீரென்று மல்லிகையின் இனிய மணம் என்னை ஆட்கொண்டது. புடவையின் சலசலப்பு; தொடர்ந்து வளைகளின் இன்னிசை!

"மாலை வேளையில் என்ன தூக்கம்?" என்று கொஞ்சும் மொழிகளால் கேட்டவாறு அருகில் வந்து உட்கார்ந்தாள் ராஜம்.

"கடன் கேட்கத்தானே அந்த அம்மாள் வந்து போனாள்?" என்று கேட்டேன்.

"வக்கீல் வீட்டுப் பெண் பிரேமாவின் கல்யாணம் நின்று போய்விட்டதாம்! சகுனம் சரியாக இல்லையாம்!" என்றாள் ராஜம் சம்பந்தமின்றி.

"சகுனமாவது, மண்ணாங்கட்டியாவது? எல்லாம் மூட நம்பிக்கை!"

"...எது மூட நம்பிக்கை?"

"இதுபோல் சகுனம் பார்ப்பதும், அதை ஒரு பொருட்டாக மதித்துக் கல்யாணத்தை நிறுத்தி விடுவதும் தான்!"

"ஐயே! இந்த நல்ல புத்தி அப்போது எங்கே போயிருந்தது? என்னைக் கல்யாணம் செய்து கொள்ளுமுன் நீங்கள் படுத்தின பாடு!......மறந்து விட்டீர்களா? 'வெடுக்'கென்று தெறித்த அவள் வார்த்தைகள் என் நெஞ்சில் 'சுருக்'கென்று தைத்தன.

தொட்டிலில் தூங்கிக் கொண்டிருந்த சேகர் திடீரென்று அழ ஆரம்பித்தான். அவனைக் கவனிக்க ஓடினாள் ராஜம்.

என் சிந்தனையும் பழங்கால நினைவு ஏடுகளைப் புரட்டிப் பார்க்க ஆரம்பித்துவிட்டது!




நான் பி.ஏ. பாஸ் பண்ணின புதிது. ஒருநாள் என் தந்தை என்னிடம், "டேய், ரகு! பத்து மணி வண்டிக்குத் திருச்சி போக வேண்டும். பெண் பார்ப்பதற்குத் தயாராக இரு!" என்று கட்டளை யிட்டார்.

தஞ்சையில் பெரிய மிராசுதார் என் தந்தை. நஞ்சை, புஞ்சை ஏராளம். அந்த வட்டாரத்தில் செல்வாக்குப் பொருந்தியவர். தந்தையிடம் எனக்கு ஒருவித பயம் உண்டு. நேரில் நின்று பேசத் தைரியம் கிடையாது. அப்படிப் பழக்கப்பட்டு விட்டேன்.

"......எனக்கு, இப்போது கல்யாணத்திற்கு என்னம்மா அவசரம்?" என்றேன் மெதுவாக. அந்தக் கேள்வியைத் தந்தையிடம் கேட்கும் நெஞ்சழுத்தம் எனக்கில்லை.

"அதது காலா காலத்திலே நடக்கவேண்டாமா? இந்த இடம் ரொம்ப நல்ல இடமாம்!" என்றாள் என் தாய். தந்தையின் கட்டளையை மீற அவளுக்கு மட்டும் தைரியம் ஏது?

குதிரை வண்டி 'ஜல்...ஜல்' என்று பெண் வீட்டின் முன்பு போய் நின்றது. "வாங்கோ! வாங்கோ!" என்று தந்தையை அழைத்தார் பெண்ணின் தகப்பனார். "வாங்கோ, மாப்பிள்ளை!" என்று முன் கூட்டியே உறவு முறை கொண்டாடி, வரவேற்றார் என்னை.



உபசாரங்கள் ஒருவாறு முடிந்தன. ஹாலின் நடுவில் பட்டுப்பாய் விரித்திருந்தது. போய் உட்கார்ந்தோம். வெள்ளித் தட்டு நிறைய கற்கண்டு சர்க்கரை, மற்றும் பூ, வெற்றிலை, பாக்கு, பழம், சந்தனப் பேலா இவை காட்சி அளித்தன. வெள்ளிக் குத்து விளக்கு ஹாலின் நடுவில் கம்பீரமாக நிமிர்ந்து நின்று சுடர்விட்டுப் பிரகாசித்தது. அருகில் வீணை ஒன்று காட்சி அளித்தது. அடுத்த அறையிலிருந்து பெண்களின் 'கசமுச' வென்ற பேச்சும், இடையிடையே 'களீர்' என்ற சிரிப்பொலியும் கேட்டன.

"அம்மா, ராஜம்! வந்து பெரியவாளுக்கு நமஸ்காரம் செய், அம்மா!" என்று பெண்ணின் தகப்பனருடைய கட்டளை பிறந்தது.

"ராஜம்! போய்ப் பாடம்மா! இதில் வெட்கம் என்ன? இதெல்லாம் கழுத்தில் மஞ்சள் கயிறு ஏறுகிற வரையில்தான்......!" என்று யாரோ கேலி செய்வதும், தொடர்ந்து, "போங்கடி......! எப்பவும் உங்களுக்கு விளையாட்டுத்தான்!" என்று எழுந்த பதிலுடன் 'களுக்' கென்ற சிரிப்பொலியும் எனக்குக் கேட்காமலில்லை.

அன்ன நடை நடந்து, ஓர் மெல்லியலாள் வந்து நமஸ்கரித்தாள். ஓரக் கண்களால் அவளை விழுங்கினேன். கொடியை அணைத்திருக்கும் பசுமைபோல், பருவ எழில் அவளைத் தழுவிக் கொண்டிருந்தது. கனி பொருந்திய மதி முகத்தில் குறுகுறுப்புத் தவழ்ந்தது. மருண்ட விழிகளிலே குறும்பு மிதந்தது. இதழ் ஓரத்திலே தெரிந்த வசீகரப் புன்னகை என்னை வசமிழக்கச் செய்து விட்டது!

"அம்மா, குழந்தாய்! இரண்டு கீர்த்தனம் பாடு, அம்மா!" என்று பணித்து விட்டு, "......ராஜம் நன்றாக வீணை வாசிப்பாள்!" என்று என்னைப் பார்த்துக் கூறினார் அவள் தந்தை நடேசய்யர்.

லாகவமாக வீணையைக் கையில் ஏந்திய வண்ணம் கம்பீரமாக என்னெதிரில் அமர்ந்தாள். வண்ண மலரின் அருகே வண்டு ரீங்காரம் செய்வது போல் இருந்தது, அவள் வீணையுடன் சேர்ந்து பாடியபோது. பற்பல திசைகளிலும் பாய்ந்தோடும் காட்டாறு போல், ராகத்தின் கற்பனை ஸ்வரங்கள் பற்பல ஸ்தாயிகளிலும் விரிந்து ஓடின! எழுந்தது வீணையின் நாதமா? அல்லது அவள் குரலா? என்னால் வித்தியாசம் காண முடியவில்லை! அவள் என் இதய வீணையையே அன்றே மீட்டி விட்டாள்!

ஒரு கணம்......ஒரே கணம்தான்!—எங்களிருவர் நயனங்களும் சந்தித்தன.

பாட்டு நின்றது. சுய நினைவுற்றேன். மறுபடி நமஸ்கரித்தாள். சாட்டை போன்ற பின்னல் முகத்திற்கு நேராக விழுந்து, தரையை முத்தமிட்டது. நழுவிய மேலாக்கை வெகு லாகவமாகச் சரி செய்து கொண்டு,



பையன்:—அம்மா, யாரோ வந்திருக்கிறார்கள். அப்பா அவர்களுக்குக் காப்பி கொடுக்கச் சொன்னார்.

அம்மா:—போடா! டிகாக்ஷன் இல்லே. காப்பி இல்லே என்று சொல்லு போ!

பையன் (போய்த் திரும்பி வந்து):—அம்மா, உன் மாமா வந்திருக்கிறாராம்!

அம்மா:— அப்படியா? இதோ அரை நொடியில் காப்பி போட்டுக் கொண்டு வருகிறேன் என்று சொல்லு!

உள்ளே சென்றாள். உள்ளே சென்றவள் சும்மாச் சென்றாளா? என் நெஞ்சினையும் அல்லவா கவர்ந்து சென்று விட்டாள்!

ஏதோ லௌகிக விஷயமாகப் பெரியவர்களுக்குள் பேச்சு நடந்தது. என் உள்ளம் 'அவள்' பால் குழைந்து ஓடியது.

"சரி, வருகிறோம்! ஊருக்குப் போய்க் கடிதம் போடுகிறேன்......" என்று கூறி எழுந்தார் என் தந்தை.

இயந்திரம் போல் பின் தொடர்ந்தேன். வாசற்படியை விட்டுக் கீழிறங்கினேன். அப்போது திடீரென்று, 'டமார்' என்று யாரோ தலையில் இடித்துக் கொண்டு-விட்ட சப்தம் கேட்டது! திரும்பினேன்......என் தந்தை 'ஐயோ!' என்று தலையைப் பிடித்த வண்ணம் உட்கார்ந்து விட்டார்! நிலைப் படியில் தலையை மோதிக் கொண்டு விட்டார், அஜாக்கிரதையாக. உச்சந் தலையிலிருந்து இரத்தம் 'குபு குபு' வென்று ஓடி வழிந்தது. எனக்கு அடி வயிற்றில் 'பகீர்' என்றது. பெண் பார்க்க வந்த இடத்திலா இப்படி ரத்தக் காயம் ஏற்பட வேண்டும்? செய்வது இன்னதென்றறியாமல், வாயடைத்துப் பிரமித்து நின்று விட்டேன்! அம்மா 'ஓ' வென்று கதறி அழுதே விட்டாள்!

தலைக் காயத்திற்கு மருந்து போட்டுக் கட்டுக் கட்டியாகி விட்டது. எதிர் பாராத விதமாக ஏற்பட்டு விட்ட 'அபசகுனம்' போன்ற இச் சம்பவத்தைக் கண்டு, பெண் வீட்டார் கலங்கி விட்டனர்.

ஒருவாறாக, மௌனமாக நாங்கள் விடை பெற்றுக் கொண்டோம்.

குதிரை வண்டி ஸ்டேஷனை நோக்கி விரைந்து கொண்டிருந்தது. தந்தையின் முகத்தைப் பார்க்க, ஏனோ, ஒரு மாதிரியாக இருந்தது. ஒருவரும் பேசவில்லை. பேச வேண்டியது என்ன இருக்கிறது?

தஞ்சையை நோக்கிப் பறந்து கொண்டிருந்தது புகை வண்டி.

"......நல்ல இடம்தான்! பெண் மூக்கும் விழியுமாக லக்ஷ்மி தேவி மாதிரி இருக்கிறாள்......! போன இடத்திலே இப்படி இரத்தக் காயம் செய்து கொண்டு விட்டீர்களே, அச்சான்யம் போல!"—என் தாயின் குரல் தழு தழுத்தது.

"......என்ன அதைப் பத்திப் பேச்சு? ரகுவுக்கு அந்த இடம் வேண்டாம்! பெண் பார்க்கப் போகும்போதே இவ்வளவு ரகளை! அவள் நம் வீட்டுக்கு வேறு வந்து புகுந்து விட்டால்,......நிர்மூலம்தான்!"

என் உள்ளம் கொதித்தது. அலை மோதியது!

"......இன்னுமொரு விஷயம் காதிலே விழுந்தது! பெண்ணுக்கு ஜன்ம நட்சத்திரம் மூலமாம்! பெண் மூலம், புகுந்த வீடு நிர்மூலம் என்று சொல்வார்கள்! அதை மறைத்து வைத்துக் 'கேட்டை' நட்சத்திரம் என்று சொல்லி மழுப்புகிறார்கள். இந்தச் சம்பந்தமே வேண்டாம்......!"

என் தலையில் ஆயிரமாயிரம் சம்மட்டிகள் கொண்டு அறைவது போல் ஒலித்தன, அச்சொற்கள்! என் நெஞ்சம் குமுறியது. கட்டிய மனக் கோட்டைகள் மண்ணாகி விட்டன. மூல நட்சத்திரம்! என் தந்தையின் தலையில் இரத்தக் காயம் ஏற்பட்டதற்கு, பாவம் அந்தப் பேதைப் பெண்ணா பொறுப்பாளி? நல்ல கூத்து! நல்ல மூட நம்பிக்கை!

வீடு திரும்பினோம். அதைப் பற்றிப் பேச்சே இல்லை. மாதங்கள் ஐந்து ஆயின.

பெண்ணின் தகப்பனாரிடமிருந்து கடிதங்கள் வந்தன. ஒரு கடிதத்திற்காவது என் தந்தை பதில் எழுத வேண்டுமே?

ஓர் முறை, மிகவும் உருக்கமான கடிதம் ஒன்று வந்தது. "செய்து கொண்டால் உங்கள் பிள்ளையைத்தான் மணம் செய்து கொள்வேன் என்று ஒரே பிடிவாதமாக இருக்கிறாள் ராஜம். ஜாதகம் மிகவும் நன்றாகப் பொருந்தியிருக்கிறது. சீர், செனத்தியைப் பற்றி நீங்கள் கவலையே பட வேண்டாம்! என் ஒரே குழந்தை அவள்...! தயவு செய்ய வேண்டும்!" என்று எழுதியிருந்தது அந்தக் கடிதத்தில்.

"உங்கள் பிள்ளையைத்தான் கல்யாணம் செய்து கொள்வேன் என்று பிடிவாதமாக இருக்கிறாள்!" இந்த வரியைக் கண்டபோது என்னுள்ளம் மகிழ்ச்சியால் பூரித்தது. எனக்காக – என் அன்பிற்காக – ஓர் உள்ளம் -

எங்கோ பிறந்து வளர்ந்த - ஒருத்தியின் உள்ளம் ஏங்கித் தவிக்கிறது! என் மனத்திலே என்ன அலைகள் குமுறின.

"நான் அவளைத்தான் கல்யாணம் செய்து கொள்வேன்! அப்பாவிடம் தீர்மானமாகச் சொல்லி விடுங்கள், அம்மா!" என்று என் உள்ளத்தைத் திறந்து காட்டி விட்டேன்.

இதைக் கேட்டுக் கொண்டே வந்த என் தந்தை, "ஏய், என்னடா தீர்மானம்? அந்தப் பெண்ணை மறந்து விடடா! பெண் 'மூலம்' வீட்டிலே அடியெடுத்து வைத்தால் நான் போய் விடுவேன். அல்லது உன் அம்மா போய் விடுவாள்! பெண் பார்க்கப்போன இடத்திலே சகுனம் சரியாக இல்லை! தலையில் கட்டுடன் திரும்பி வந்தேன்! நாங்கள் உயிரோடு இருக்கணும் என்கிற எண்ணம் உண்டா இல்லையா, உனக்கு?" என்று மிரட்டினார். அவர் சுபாவம் அப்படி!

பதில் ஒன்றும் கூறாமல், தலையைத் தொங்க விட்டவாறு என் அறைக்குள் சென்று கதவைத் தாழிட்டுக் கொண்டேன். ஒரு குரல் அழவேண்டும் போலிருந்தது! நானோ, ஓர் ஆண் மகன்! இவள் இல்லாவிடில், வேறு ஒருத்தி! நான் ஏன் கலங்க வேண்டும்? எனக்கே விளங்கவில்லை! விவரிக்க முடியாத ஓர் துக்கம் என் நெஞ்சை அழுத்தியது!


"என் பிள்ளைக்கு இப்போது கல்யாணத்திற்கு அவசரமில்லை...பெண்ணுக்கு மூல நட்சத்திரம் என்பதையும் மறைத்து வைத்து எங்கள் தலையில் கட்டப் பார்த்தீர்கள். அதன் பலனை அவ்விடத்திலேயே அனுபவித்து விட்டேன்! அந்த வடு இன்னும் தலையில் இருக்கிறது. வேறு இடம் பார்த்துக் கொள்ளவும்..." இந்த ரீதியில் கடிதம் ஒன்று எழுதியும் விட்டார் தந்தை.

நாட்கள் ஓடின. அவளை என்னால் மறக்க முடியவில்லை. அவளைப் பற்றிய இன்ப நினைவுகள் என் உள்ளத்தின் அடித்தளத்திலே பொங்கி வழிந்த வண்ணமிருந்தன. வீணையின் நாதத்தோடு குழைந்து இழைந்து வந்த அவள் குரல் என் செவிகளில் ரீங்காரம் செய்து கொண்டிருந்தது. பாடும் போது என்னையறியாமலே நானும் தாளம் போட்டேன். தாளம் சரியாகப் போடவில்லையோ, என்னவோ, பால் வழியும் அவள் வதனத்திலே குறும்பும் கேலியும் கலந்த குமிழ்ச் சிரிப்பு தெளித்தது. சின்னஞ்சிறிய அச்சிரிப்பினால், என் சிந்தையில் இன்பம் நிரப்பினாள்! அதை இப்போது நினைத்துக் கொண்டாலும், என்னுடலும், உள்ளமும் புல்லரிக்கின்றதே! அவளை என்னால் மறக்க முடியுமா?

இரண்டு மூன்று இடங்களிலிருந்து எனக்குப் பெண் கொடுப்பதாகச் சிலர் வந்தார்கள். ஆனால், ஒரே பிடிவாதமாகக் கல்யாணமே வேண்டாம் என்று மறுத்து விட்டேன். பெற்றோர்க்கு என் போக்குப் புதிராக இருந்தது.


இடையே, கேள்விப்பட்ட ஓர் விஷயம் என் உள்ளத்தைக் கலக்கி விட்டது. ராஜத்தைப் பார்க்க வந்த ஒரு சிலர், முன்பே ஏதோ அபசகுன நிகழ்ச்சியினால் எனக்கும் அவளுக்கும் நடக்க இருந்த கல்யாணம் திடீரென்று நின்றுவிட்டது என்பதைக் கேள்வியுற்று, என்னவோ ஏதோ என்று பயந்து போய் விட்டார்களாம்! தம் பெண்ணுக்குக் கூட கல்யாணம் ஆகுமா என்று அவள் தகப்பனார் ஏங்கித் தவிப்பதாகவும் கேள்விப்பட்டேன். என் உள்ளம் அப்போது பட்டபாடு...தாளம் படுமோ, தறி படுமோ, யார் அறிவார்! நைந்த உள்ளத்துடன், கண்களில் நீர் தேக்கி, தழுதழுத்த குரலில் அவள் என்னெதிரில் நின்று கெஞ்சி அழுவது போல் தோன்றியது. 'நீ குற்றவாளிதான்!' என்று என் மனம் பறைசாற்றியது. என்னால் ஓர் அபலைப் பெண்ணின் வாழ்க்கை வீணாவதா? முடியாது! முடியாது!! பெற்றோரை விரோதித்துக் கொள்ள நேர்ந்தாலும் சரி, ராஜத்தையே மணம் செய்து கொள்வது என்று தீர்மானித்தேன். முடிவைத் தெரிவிக்கத் தருணம் எதிர்பார்த்திருந்தேன்.

அப்போது தான் என் தந்தை என் அறைக்குள் ஓடி வந்தார். 'ரகு' நான் ஒரு முட்டாளடா! அந்தப் பெண்ணை மகராஜனாக நீ செய்து கொள் அப்பா! நீங்கள் சௌக்கியமாக இருந்தால் சரி! நான் தலையில் இடித்துக் கொண்டுவிட்டாள், பாவம்! அதற்கு அந்தப்



யுனைடெட் கமர்ஷியல் பாங்க் பினாங்கு கிளை ஆபீஸைச் சார்ந்த சிரஞ்சீவி எம். கே. ராமச்சந்திரனுக்கும், சௌபாக்கியவதி லலிதாம்பாளுக்கும் பினாங்கில் 3-5-53 அன்று திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

வாழ்க லலிதாம்பாள் — ராமச்சந்திரன்



"என்ன அக்கிரமம்? என்னிடமிருந்து சம்பம் மரம் அறுக்க வேண்டும் என்று சொல்லி இரவல் வாங்கிக் கொண்டுபோய், மைதுர்பாக்கை அறுத்து சம்பத்தைப் பாழ் செய்து விட்டீரே?"

பெண் என்ன செய்வாள்? உனக்குக் கடிதம் எழுதியிருக்கிறாள். இதுதான் என் கண்களைத் திறந்து விட்டது. பிராப்தம் இருந்தால், நடந்துதானே ஆகவேண்டும்?" என்று தழு தழுத்த குரலில் சொன்னார். அவர் கண்களில் கண்ணீர் தேங்கி நின்றது. அவர் கூறியதை ஆமோதிப்பவள் போல் கலங்கிய கண் களுடன், மௌனமாக நின்று கொண்டிருந் தாள் என் தாய்.

ராஜம் எனக்குக் கடிதம் எழுதியிருக் கிறாளா? துணிச்சல்காரிதான்! ஆவல் என்னை உந்திற்று. வரிகளை விழிகள்தாவ, இதயத் தால் படித்துப் பார்த்தேன்.

"கடிதம் நான் எழுதக் கூடாதுதான்! ஏன் எழுதக் கூடாது? நீங்களும், உங்கள் தந்தை யும் ஒன்று கூடி எனக்கு அநீதி இழைத்து விட்டீர்களே! என் இன்ப வாழ்வைக் குலைத்து விட்டீர்களே! பெண் பார்க்க வந்தீர் களா? நிலைப்படியில் தலையை மோதிக் கொண்டு துரதிர்ஷ்டம் பிடித்த பெண் என்று என் தலையில் அபாண்டமாகப் பழி சுமத்த வந்தீர்களா? உங்கள் தந்தையின் தலையில் ஏற்பட்ட காயத்திற்கு நானா பொறுப்பாளி? பி. ஏ. பட்டம் பெற்ற நீங்கள், யோசித்தீர் களா...? என்னைப் போல் உங்களுக்கு ஓர் சகோதரி இருந்து அவள் கல்யாணம் தடைப்பட்டுக் கொண்டு வந்தால், உங்க ளுக்கு எப்படி இருக்கும்? என் மேல் பழி சுமத்தினீர்களே! உங்கள் பேரில் நானும் சுமத்துகிறேன். எந்தத் துரதிருஷ்டம் பிடித்த வேளையில் எங்கள் வீட்டினுள் காலடி எடுத்து வைத்தீர்களோ? என்னைப் பெண் பார்க்க வருபவர்கள், உங்கள் தந்தையின் தலையில் இரத்தக் காயம் ஏற்பட்ட சம்பவத்தைக் கேள்வியுற்று, என்னைக் கண்டு மிரண்டு ஓடி விடுகிறார்கள்! அபசகுனம் மாதிரி முதன் முதலில் நீங்கள் வந்தீர்களே, என்னைப் பார்க்க!"—என்னால் மேலே படிக்க முடிய வில்லை. மிதமிஞ்சிய துக்கம், ஏமாற்றம், வருத்தம் இவை, கோபமும், வெறுப்புமாகப் பீறிட்டிருந்தது, அந்த வார்த்தைகளிலே! நைந்து போன உள்ளத்தின் எதிரொலி அந்தக் கடிதம்!

ராஜத்தின் அந்தக் கடிதம் என் பெற்றோ ரின் கண்களைத் திறந்து விட்டது! ராஜம் என்னுடையவள் ஆனாள்!

★

"என்ன, பிரமாதமான யோசனை?" ராஜத்தின் கேள்வி என்னைக் குலுக்கியது. சிந்தனைக் கயிறு அறுந்துக் கொண்டது.

கைக்குழந்தையுடன் ஒய்யாரமாக என் னெதிரில் நின்று கொண்டிருந்தாள். மூன்று குழந்தைகளுக்குத் தாயாகியும் கூட, இள மையின் குறுகுறுப்பு வதனத்தில் மிதந்தது.

"அமுதூற்றினை யொத்த இதழ்களும், அறிவூறித் ததும்பும் விழிகளும், பத்து மாற் றுப் பொன்னொத்த மின்மேனியும்...!" இன்ப எழுச்சியில் கவிதை பிறந்தது! பாடிக் கொண்டே, அவளது பின்னலைப் பற்றி இழுத்தேன்.

"...உஸ்! மூன்றாவது மனுஷன் ஒருவன் பார்த்துக் கொண்டிருக்கிறானே என்றுகூட வெட்கம் இல்லாமல்......என்னை விடுங் கோன்னா! கோவிலிலிருந்து உங்கள் அப்பா, அம்மா வருகிற சமயம்!" என்றாள், குழந்தை யைச் சுட்டிக் காட்டிக் கொண்டே.

எல்லாம் புரிந்துகொண்டு விட்டவன்போல் கன்னங் குழிய ஒரு முல்லைச் சிரிப்புச் சிரித்தான் சேகர்!



கார், ட்ரக், ட்ராக்டர் அல்லது மண் அகற்றும் சாதன வண்டி எதுவாயினும் அதற்கு ஏற்றதாயும் உங்கள் முதலீட்டிற்கு அதிக மதிப்பை அளிக்கக்கூடியதுமான ஒரு பயர்ஸ்டோன் டயர் உள்ளது. சிக்கனமே பிரதானமாக கருதப்படும் இந்நாட்களில், நீண்ட நாட்கள் உழைக்கும் வண்ணமும், புத்தம் புதிய பற்பல கடின பரிசோதனைகளில் தேர்ந்தெடுத்த சிறந்த மூலப் பொருள் சேர்க்கை நாளுக்கு நாள் கையாளப்படும் சிறந்த கம் டிப்பிங் முறை கொண்ட பயர்ஸ்டோனின் பிரத்தியேக அம்சங்கள் மிகவும் கவனிக்கப்பட வேண்டியவை. அரை நூற்றாண்டுக்கு மேலாக சேவை செய்து முன்னணியில் நிற்கும் பயர்ஸ்டோனின் நுண்ணிய அனுபவமே, சிறந்த மூலப் பொருள்கள், நேர்த்தியான டிசைன்கள், திறமை மற்றும் உங்களுடைய பணத்திற்கு கூடுதலான மதிப்பு இவைகளுக்குச் சிறந்த சான்று.

பயர்ஸ்டோன் டயர் & ரப்பர் கம்பெனி ஆப் இந்தியா லிமிடெட்



வெண்மையாக
சலவை செய்யப் பட்டுள்ளன
பிரகாசமாக
சலவை செய்யப் பட்டுள்ளன
ஸன்லைட் சோப்பில் தான்
துணிகளை அடித்துத் துவைக்காமலே வெண்மையாகவும் பிரகாசமாகவும் சலவை செய்கிறது!
SUNLIGHT SOAP

S. 204-50 TM

மயிலை மாடு

மருதன்

"இன்றைக்கு எவ்வளவு கிடைத்தது!"

"முக்கால் ரூபாய்."

"எடுங்கள் பணத்தை; அரிசி வாங்கணும்."

"பணமா! அதைத்தான் கடன்காரனுக்குக் கொடுத்து விட்டேனே!"

"அப்போ துண்டை நனைத்து வயிற்றிலே போட்டுக் கொள்ள வேண்டியதுதான்."

அந்தி வேளையில் பரமசிவனுக்கும் அவனுடைய மனைவி பாக்கியத்துக்குமிடையே நடந்த சம்பாஷணைதான் இது.

பாக்கியம் கோபமாக உள்ளே போய் விட்டாள். பரமசிவம் முழங்காலைக் கட்டிக் கொண்டு உட்கார்ந்து விட்டான்.

"என்ன பரமசிவம் கிராக்கி வந்திருக்கு, உன் மயிலை மாட்டை வித்து விடுறியா!" என்று கேட்டுக் கொண்டே வந்து நின்றான் தரகுக்காரன். அவனுக்குப் பின்னால் மாடு வாங்க வந்த மனிதனும் நின்றுகொண்டிருந்தான்.

"வித்துவிட வேண்டியதுதான்" என்று சொல்லிக் கொண்டே பரமசிவன் எழுந்தான். வீட்டின் பின் புறத்துக்கு அவர்களை அழைத்துச் சென்றான். அங்கு புளியமரத்தின் கீழ் ஒரு கிழட்டு மாடு நின்றது. அசைப்பில் பார்த்தவர்கள் அதை மாடு என்று சொல்ல மாட்டார்கள்; எலும்பும் தோலும் மாட்டைப் போன்ற உருவத்தில் வைக்கப்பட்டிருக்கின்றன என்றுதான் சொல்வார்கள்!

தரகன் மாட்டைச் சுற்றிப் பார்த்து விட்டு "என்ன விலை சொல்றே" என்றான்.

"விலை இருக்கட்டும்; மாட்டை எதுக்கு வாங்கப் போறீங்க!" என்று கேட்டான் பரமசிவன்.

"கசாப்புக் கடைக்குத்தான்! வேறே எதுக்கு இந்த மாட்டை வாங்குவாங்க!"

"மாடு கொடுக்கிறதில்லை."

"டயர் போட்ட வண்டிக்கு மாடு அகப்படாமல், உன் காளை மாட்டைத் தேடிக்கிட்டு வரப் போறாங்க, காத்துக்கிட்டு இரு" என்று கோபமாகச் சொல்லி விட்டு, மாடு வாங்க வந்தவனை அழைத்துக் கொண்டு, தரகன் போய்விட்டான்.

பரமசிவம் முழங்காலைக் கட்டிக் கொண்டு மறுபடியும் வாசலில் உட்கார்ந்து கொண்டான். இது வரையில் ஒட்டுக் கேட்டுக் கொண்டிருந்த பாக்கியம், "இந்த மாட்டுக்கும் வயசாச்சு. இது இனிமேல் எதுக்குப் பிரயோசனப்படும்! கசாப்புக் கடைக்காரனுக்கு வித்து விடுங்க என்று நானும் மூணு மாசமா சொல்லிக்கிட்டிருக்கேன்" என்றாள்.

"உன் அம்மாவுக்கும் வயதாகிவிட்டது, அம்மாவால் என்ன பிரயோசனம்! கழுத்தைத் திருகி விடுவோமா!" என்று சீறினான் பரமசிவம்.

"எதுக்காக! அம்மா இருக்கிறது உங்கள் கண்ணை உறுத்துதா!" என்று சொல்லி அழுது கொண்டே அவள் உள்ளே போய்விட்டாள்.

"பிரயோசனமில்லையாம். கசாப்புக் கடைக்காரனுக்கு வித்து விடணுமாம்: ஏன், மூன்று மாசத்துக்கு முந்தி வரை அது சம்பாதித்துப் போட்டதைச் சாப்பிட்டாள்! அதுக்குள்ளே மறந்து விட்டாளே! சீ, இந்தப் பெண்களுக்கே நன்றி, தயவு தாட்சண்யம் கொஞ்சம் கூட கிடையாது" என்று வாய்க்குள் முணுமுணுத்தான்.

பரமசிவன் எண்ணச் சுழலில் சிக்கிவிட்டான்.

சோமபுரத்தில் ஒற்றை மாட்டு வண்டி ஓட்டிப் பரமசிவன் பிழைத்து வந்தான். சுமார் எட்டு வருஷங்களுக்கு முன்பு அவன் மயிலை மாட்டை வாங்கினான். அதன் சதங்கைச் சத்தத்தைக் கேட்டால் சோமபுரம் ஒற்றை மாட்டு வண்டிக்காரர்களின் குலை நடுங்கும். அவனுடைய வண்டி ஒரு பர்லாங்குக்குப் பின்னால் வரும்போதே மற்ற வண்டிக்காரர்கள் தங்கள் வண்டிகளைச் சாலையின் ஓரத்துக்கு ஒதுக்கி ஓட்டி நிறுத்திக் கொள்வார்கள். அவன் வண்டி அவர்களைத் தாண்டிப் போனதும்தான் அவர்கள் தங்கள் வண்டிகளை ஓட்டவேண்டும். இல்லையோ அவர்களுடைய வண்டி தெருக் கம்பங்களில் மோதும்படியாகவோ பாதசாரிகளின் மீது ஏறும்படியாகவோ செய்துவிடும், பரமசிவத்தின் மயிலை மாடு. குதிரை வண்டிக்காரர்கள் கூட அவனுடைய வண்டிக்கு வழி விடுவார்கள்!

பரமசிவத்தின் மயிலை மாட்டைப் பார்த்தாலே, அது இழுக்கும் வண்டியில் சவாரி செய்ய வேண்டுமென்று யாருக்கும் ஆசை தட்டும்! தள தளவென்றிருக்கும் உடல்; பளபளப்பான மயிலை நிறம்; உருண்டு திரண்ட தொடைகள்; கத்தியால் அழகாகச் சீவப்பட்ட நீண்ட கொம்புகள்; கொம்புகளின் நுனியில் வெட்டுக் குஞ்சங்கள் கட்டிய பித்தளைக் கொப்பிகள். சக வண்டிக்காரர்கள் பரமசிவத்திடம், "மாடுன்னா, இது தான் மாடு" என்பார்கள். பரமசிவன் அதன் மீது ஒரு தூசி சேர விடமாட்டான். சவாரியை விட்டு வந்ததும், அதன் உடலை வைக்கோலால் தேய்த்துச் சுத்தம் செய்வான்.

மயிலை மாட்டின் நடையில் ராணுவ வீரனின் மிடுக்கு இருக்கும். அதனுடைய தலை அசைப்பில், தேர்ந்த நாட்டியக்காரியின் ஒயிலும், தாளக் கட்டும் இருக்கும். தலையில் கட்டப்பட்டிருக்கும் சதங்கையின் தாளத்துக்கு ஏற்றாற்போல் நடை போடும். அது சாட்டைக் குச்சியைத் தன்மீது போட விடாது. அழகுக்காகத்தான் பரமசிவன் தன் அலங்காரமான சாட்டைக் குச்சியை வண்டிக் கூண்டில் தொங்க விட்டிருப்பான்!

நாக்கை மேல் அண்ணத்தில் வளைத்து, "ட்......ச்......ச்......சீ......ரு......றை" என்று சொல்லி, உருளும் சக்கரத்தில் சாட்டைக்குச்சியை நீட்டி, "கடகட" என்ற சத்தத்தை உண்டாக்கினால் போதும்; மயிலை மாட்டின் கால்கள் இரட்டை நடை போடும்! அதனுடைய தலை துரித காலத்தில் அசைந்தாடும்!

சோமபுரம் வண்டிக்காரர்களிலேயே பரமசிவம்தான் தினம் அதிகமாகச் சம்பாதிப்பான். அவன் தன் வண்டியில் சவாரி ஏற்றிச் செல்லாத கிராமமே அந்தச் சுற்று வட்டாரத்தில், கிடையாது. எப்பேர்ப்பட்ட மணல் ரஸ்தாவிலும் தார் போட்ட நல்ல சாலையில் போவதுபோல் வேகமாகப் போகும், மயிலை மாடு. கிராமத்திலிருந்து திரும்பும்போது மயிலை மாட்டின் தலைக் கயிற்றைக் கூண்டில் கட்டிவிட்டு அவன் வண்டியில் நிம்மதியாகப் படுத்துத் தூங்கிவிடுவான். மாடு தானாகவே வீடு வந்து சேர்ந்து விடும்.

இன்று, "இந்த மாடு எதுக்குப் பிரயோசனப்படும்" என்று இரக்கமில்லாமல் கேட்டாளே, பாக்கியம்; அவள் பரமசிவத்தின் வீட்டுக்கு வருவதற்கே அதுதானே உதவி செய்தது! இதை நினைத்ததும் பரமசிவத்தின் மனம் குமுறியது; கூடவே சிரிப்பும் பொங்கி வந்தது.

அன்று ஒருநாள் பக்கத்துக் கிராமத்தில் சவாரியை இறக்கிவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருக்

தான். வழக்கம்போல் வண்டியில் காலை நீட்டிப் படுத்துத் தூங்கி விட்டான்.

"ஏ, வண்டிக்காரரே!......ஓய், வண்டிக்காரரே! என்னா ஐயா நீங்க வண்டி ஓட்டுவது!" என்ற சத்தத்தைக் கேட்டு விழித்துக் கொண்டான். சாலையின் ஓரத்தில் வயது வந்த இளம் பெண் ஒருத்தி நின்று கொண்டிருந்தாள். அவள் காலடியில் சிதறிக் கிடந்த புல் கட்டை மயிலை மாடு ஆசையுடன் தின்று கொண்டிருந்தது.

பரமசிவம் நடந்ததை ஊகித்துக் கொண்டான். சாலையின் ஓரத்தில் நடந்து கொண்டிருந்த அவளுடைய தலையிலிருந்த புல் கட்டை மயிலை மாடு பின்னாலிருந்து இழுத்துத் தள்ளி விட்டது!

மாட்டின் தலைக்கயிற்றைப் பரமசிவம் இழுத்துப் பிடித்தான். "என்னா குட்டி! தலையிலே புல் வைத்திருக்கிற நீ ஜாக்கிரதையா நடக்கிறதில்லே! எதுவுமே நல்லா இருந்தா யாரும் ஆசைப்படுவாங்கதான். உன் புல் நல்லா இருக்கு; என் மாடு ஆசைப்பட்டுது. நீயும் அழகா இருக்கிறே. உனக்கும் இன்னும் கல்யாணம் ஆகவில்லை......" என்று இழுத்தான் பரமசிவன்.

"உம். ஆசைப்படுவீங்க, ஆசைப்படுவீங்க! ஆசைப்பட்டால் என்ன நடக்கும் தெரியுமா!" என்று அதட்டினாள். தன் கரிய பெரிய கண்களை ஒருமுறை விழித்து உருட்டினாள்.

பரமசிவம் சளைக்கவில்லை. "என்ன நடக்கும்! உன் கழுத்திலே தாலி ஏறிவிடும்!" என்றான். இருவரும் சிரித்து விட்டனர்.

"......சரி. அது இருக்கட்டும். புல் என்ன விலை!" என்று கேட்டான்.

"ஒரே விலை, ஆறு அணா."

"சரி, எட்டு அணா போட்டுக் கொள்! புல்லை வண்டியிலே போடு." அவள் வண்டியில் புல் கட்டைப் பொத்தென்று போட்டாள்.

"உப்பு புளி வாங்குவதற்குச் சோழ புரத்துக்குப் போகவேண்டாம்! சரி, வண்டியில் ஏறிக்கொள்" என்றான்.

அவள் வண்டியில் ஏறிக்கொண்டாள். இரண்டு மாதங்களுக்குப் பிறகு அவனுடைய வீட்டிலும் ஏறிக் கொண்டாள்!

மயிலை மாட்டின் உழைப்பால் பரமசிவம் சம்பாதித்த பணத்தைக் கொண்டு மாடி வைத்த வீட்டை அவனால் கட்ட முடியவில்லை. ஆனால் தனக்கென்று சொந்தமான ஒரு குடிசை கட்டிக் கொண்டான். அவனுடைய வளரும் குடும்பத்தின் வயிற்றை அன்றாடம் கழுவப் போதுமான பணத்தைச் சம்பாதித்துக் கொடுத்தது, மயிலை மாடு. பாக்கியம், பரமசிவத்தின் வீட்டுப் படி ஏறி இரண்டு வருஷங்களுக்குள் ஒரு வாரிசைப் பெற்றெடுத்தாள்.

மயிலை மாட்டின் உடல் இளைக்காதிருக்க நல்ல புஷ்டியான தீனி அதற்குப் போட்டான். ஊற வைத்த பிண்ணாக்கும், அரைத்த பருத்திக் கொட்டையும் அதற்குப் 'பாதாம் கேக்கும்', 'காசி அல்வாவும்' போல!

எந்தத் தீனிதான் வைத்து என்ன பிரயோசனம்! காலம் யாரை விட்டது! உலகத்தையே ஆட்டித் தங்கள் கைக்குள் அடக்கி வைத்திருப்பதாக நினைப்பவர்கள் கூட மண்ணைக் கவ்வி மறைந்து விடுகின்றனர்! கேவலம் ஒரு மாட்டால் காலத்தை எதிர்க்க முடியுமா, என்ன! பரமசிவம் காணாத வகையில் மாட்டின் உடல் இளைத்தது; அதன் கம்பீரமான நடை தளர்ந்தது.

இதுவரை மயிலை மாட்டோடு போட்டி போடப் பயந்த வண்டிக்காரர்கள், போட்டியிடத் தொடங்கினர்; சில சமயங்களில் ஜெயித்தும் விட்டனர்!

காலம் உருண்டு சென்றது. எல்லோரும் மயிலை மாட்டுக்கு வயதாகி விட்டது என்றனர். பரமசிவமும் இதை ஒப்புக்கொள்ள வேண்டியிருந்தது.

மயிலை மாடு தனக்கென்று ஏற்படுத்தியிருந்த ஸ்தானத்திலிருந்து சரிந்து விழுந்து கொண்டிருந்தது. மற்ற வண்டி மாடுகளைப் போல் அதுவும் கூட்டத்தில் ஒன்றாகச் சேர்ந்து விட்டது. அதனுடைய ஓட்டமும், நடையும் தலை ஆட்டமும் பழங்கதையாய்ப் போய் விட்டன!

காலம் தன் போக்கிலேயே போய்க் கொண்டிருந்தது. இனி மயிலை மாடு வண்டி இழுக்க லாயக்கில்லை என்பதைப் பரமசிவம் அறிந்து கொண்டான். ஆனால், மயிலை மாட்டை விற்றுவிட அவனுக்கு விருப்பமில்லை. யாராவது அதை விற்றுவிடும்படி கேட்டால், "இதுவரை அது எனக்கு உழைத்துப் போட்டது. இனி அது சாகும் வரை நான் அதுக்குத் தீனி போடப் போகிறேன்" என்று பரமசிவன் சொல்வான். அதற்குப் பிடித்தமான ஊற வைத்த பிண்ணாக்கும் அரைத்த பருத்திக்கொட்டையும் போட்டு வந்தான்.

திடுதிப்பென்று ஒரு நாள் சோழபுரம் முனிசிபாலிடியார் டவுன் பஸ் விட்டனர். அவ்வூர் வண்டிக்காரர்களின் பிழைப்பில் மண் விழுந்தது! "இந்தக் கண்டைக் காய் சோழபுரம் முனிசிபாலிடிக்கு 'டவுன் பஸ்' ஒரு கேடா! சாலையின் குழிகளில் ஒரு ஆளை போட்டுப் புதைக்கலாம் போலிருக்கும்! அதைச் சீர் பண்ண முடியவில்லை; 'டவுன் பஸ்' விட்டாளுக டவுன் பஸ்!" என்று அவர்கள் முணுமுணுத்தனர். மண்ணெண்ணெயையும், 'பெட்ரோலையும்' கலந்து ஓட்டை உடைசல் மோட்டார் கார்களைச் சிலர் வாடகைக்கு விட்டனர். அதனால் பக்கத்துக் கிராமங்



களுக்குச் செல்லும் சவாரிகளும் வண்டிக்காரர்களின் கைகளிலிருந்து நழுவின. அவர்களுக்குப் பிழைப்பே இல்லாமல் போயிற்று.

சிலர் வண்டி ஓட்டுவதையே நிறுத்தி விட்டனர். பரமசிவத்தால் அப்படிச் செய்ய முடியவில்லை. ஏனென்றால் அவன் வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்க வேண்டியிருந்தது. அவனுக்கு வேறு தொழிலும் தெரியாது.

பசியும் பட்டினியுமாய்ச் சவாரிக்காகக் கடை வீதியில் காத்துக் கிடந்தான். கிடைத்ததைக் கொண்டு காலத்தை ஓட்டி வந்தான். மயிலை மாட்டின் நிறம் சாம்பல் நிறமாக மாறிவிட்டது. அதன் பற்கள் விழுந்து விட்டன. வைக்கோலை அதனால் தின்ன முடியவில்லை. பிண்ணாக்கும் பருத்திக் கொட்டையும் அதற்குப் போட பணத்துக்கு எங்கு போவான்! மயிலை மாட்டை விற்க முடியாது என்று சொல்லிக் கொண்டிருந்த அவன் கசாப்புக் கடைக்காரர்களைத் தவிர வேறு யாருக்கும் அதை விற்றுவிடத் தயார் என்றான். ஆனால் கசாப்புக் கடைக்காரர்கள்தான் அதை வாங்க வந்தனர்; வேறு யாரும் முன் வரவில்லை.

கசாப்புக் கடைக்காரனிடமே அதை விற்றுவிடும்படி தரகர்கள் எவ்வளவோ சொல்லிப் பார்த்தனர். "இதை விற்றால் ஏழெட்டு ரூபாய் வரும். இதைப் போல எத்தனையோ ஏழெட்டு ரூபாய் அது எனக்குச் சம்பாதித்துக் கொடுத்தது. இந்தக் காசுக்காக கசாப்புக்காரனுக்கு மாட்டை விற்க மாட்டேன்!" என்று சொல்லி விட்டான்.

"உன்னால்தான் அதற்குத் இனி போ...

இருப்பதை அவன் உணர்ந்தான். ஆனால் தன் உயிருக்குயிராய்ப் பாவித்த மாட்டைக் கொன்று விடும்படி விட்டுவிடுவது, மனத்தாலும் எண்ண முடியாத காரியமாய் அவனுக்குத் தோன்றியது.

"தனக்கும் பிரயோசனமில்லாமல் பிறருக்கும் உபயோகம் இல்லாமல் அவஸ்தைப் பட்டுக் கொண்டு இருக்கும் இந்த மாட்டைக் கொன்றால் அதுக்குக் கருணை காட்டியது மாதிரி" என்று கூட ஒரு சமயம் நினைப்பான்.

அடுத்த வினாடியே, "கருணை காட்டுகிறேன் என்று சொல்லிவிட்டு அதன் உயிரைப் பிடுங்குவது நியாயமா!" என்று அவனே திருப்பிக் கேட்டுக் கொள்வான். அவன் மனம் குழம்பியது.

ஒரு முறை மயிலை மாட்டைக் கசாப்புக் கடைக்காரனுக்கே விற்று விடுவதென்று பரமசிவம் தீர்மானித்தான். ஆனால் அதன் வயோதிகத் தன்மையையும் உலர்ந்த உடலையும் பார்த்ததும் அவனுக்குத் தைரியம் வரவில்லை.

அவன் பலமுறை தன் குடும்பத்துடன் பட்டினி கிடந்தான். ஆனால் மயிலை மாட்டைக் கசாப்புக் கடைக்காரனுக்கு விற்கத் துணியவில்லை.

* * *

பசியால் பரமசிவத்தின் உடல் களைத்து விட்டது. சோர்வுற்றுத் தன்னையும் அறியாமல் அயர்ந்து தூங்கி விட்டான்.

காலையில் எழுந்ததும் அவனுக்குக் கண்கள் இருண்டன; காது அடைத்தது. வீட்டின் பின்புறம் போனான். மயிலை மாடு தலையைத் தரையில் ...ச்சிறியது.

சோறு போடப்போகிறது" என்று புலம்பினான். கசிந்த கண்ணீரை அவசரமாகத் துடைத்தான்.

எதிரில் வந்த வண்டிக்காரன், "டவுன் பஸ்காரனுங்க இன்று 'ஸ்ட்ரைக்' பண்ணிவிட்டானுங்க. சவாரி காத்துக் கிடக்கு; வண்டியை வேகமா ஓட்டு" என்று சொல்லிக் கொண்டே போனான்.

அன்று சவாரிகளை ஏற்றிக் கொண்டு சோழபுரத்தில் பரமசிவம் அலைந்தான். அவன் சவாரி ஏற்றிப் போகாத மூலை முடுக்கே இல்லை. அவ்வளவு சவாரிகளை அவன் வாழ்க்கையில் ஏற்றிச் சென்றதேயில்லை. வீட்டை மறந்தான். ஆவேசம் வந்தவனைப்போல் வண்டியை ஓட்டினான். இரட்டிப்புக் கூலியும் வாங்கினான்.

மடியில் பணம் கனத்தது. மாலை ஐந்து மணிக்குத்தான் வீட்டு நினைவு வந்தது. வீட்டின் நினைவு என்றால் மயிலை மாட்டின் நினைவுதான்! கையில் தான் பணம் சேர்த்து விட்டதே; இனி மயிலை மாட்டை விற்கத் தேவை இல்லை!

வண்டியை வேகமாக வீட்டுக்கு ஓட்டினான். வழியில் மாட்டுக்காகப் பிண்ணாக்கும் பருத்திக் கொட்டையும் வாங்கிக் கொண்டான். திடீரென்று அவனுடைய உள்ளம் 'திக் திக்' என்று அடித்துக் கொள்ள ஆரம்பித்தது. "ஒரு வேளை மயிலை மாட்டைப் பாக்கியம் விற்றுவிட்டாளோ! கொலைகாரன் அதைக் கொன்று விட்டானோ!" என்று சந்தேகப்பட்டான். "இவ்வளவு நாள் காத்திருந்து மோசம் போனேனே!" என்று அலறிக் கொண்டான்.

வீட்டை நெருங்க நெருங்க அவனுக்கு மூச்சு நின்று விடும் போலிருந்தது. வீட்டை அடைந்ததும், மாட்டைக் கூட வண்டியிலிருந்து அவிழ்த்து விடாமல் உள்ளே ஓடி, "பாக்கியம், மயிலை மாட்டை விற்று விட்டாயா!" என்று கத்தினான்.

"இல்லை. யாரும் வாங்க வரவில்லையே."

பரமசிவம் அப்படியே உட்கார்ந்து விட்டான். பாக்கியம் "என்னவோ, ஏதோ" என்று பயந்து விட்டாள். அவனுக்குப் படபடப்பு இன்னும் நிற்கவில்லை. பாக்கியம் அவனை ஆசுவாசப் படுத்தினாள். கை கால்களின் நடுக்கம் சற்று நின்றதும் "என்ன விஷயம்" என்று கேட்டாள்.

"மயிலை மாட்டை விற்று விட்டாயோ என்று பயந்து விட்டேன். இன்றைக்கு நிறைய சம்பாத்தியம், இந்தா பணம். முதலில் இந்தப் பருத்திக் கொட்டையை மயிலை மாட்டுக்காக அரை; நான் வண்டியை அவிழ்த்து விட்டுவருகிறேன்" என்று சொல்லி விட்டு வெளியில் போனான்.


பரமசிவத்துக்கு இதுவரையில் இல்லாத ஒரு சந்தோஷமும் திருப்தியும் ஏற்பட்டிருந்தது. பணம் வந்தால் மனசு சந்தோஷமடையும் என்று சொல்லுவார்களே அது போன்ற சந்தோஷம் மட்டுமில்லை. ஒரு அசாதாரணமான திருப்தியும், மனத்தில் நல்ல அமைதியும் இருந்தது. அவன் மயிலைக் காளையை வாங்கிய புதிதில் இப்படித்தான் தினம் தினம் மடி நிறைய சம்பாதித்துக் கொண்டு வருவான். அது அவனுக்குப் பணம் மட்டுந்தானா சம்பாதித்துக் கொடுத்தது! வாழ்க்கைத் துணைவியையே அல்லவா கொடுத்தது! அந்த மயிலைக் காளையை அவனால் எப்படி மறந்து விடமுடியும்!


அரைத்த பருத்திக் கொட்டையில் தவிட்டைப் போட்டுக் கிளறி எடுத்துக் கொண்டு வீட்டின் பின்புறம் போனான். அங்கே அவனுக்கு ஒரு அதிசயம் காத்திருந்தது.

மயிலை மாடு பரமசிவத்தையும் பாக்கியத்தையும் ஏன் இந்த உலகையும் விட்டே போய்விட்டது.

பரமசிவம் மயிலை மாட்டைப் பார்த்தபடியே செயலற்று நின்று கொண்டிருந்தான்.

என்னால் முடியாது!





சிவப்பு மோட்டார்

சண்முகம்

“இங்கே உங்கள் பிள்ளையை வந்து பாருங்கள்” என்று சமையலறைக் குள்ளிருந்து குரல் கொடுத்தாள் சிவகாமி.

தன் அறையில் காரியாலயக் கட்டுகளுடன் போராடிக் கொண்டிருந்த ஜம்புலிங்கம் “என்ன வாம்” என்று எரிந்து விழுந்தான். பகல் முழு தும் காரியாலயத்தில் உழைத்தது போதாது என்று இரவிலும் அதே வேலையைக் கட்டிக் கொண்டு அழவேண்டியிருக்கிறதே என்ற சலிப்பு கலந்த வெறுப்பு அவன் குரலில் பிரதிபலித்தது.

சிவகாமி இடுப்பில் குழந்தை ராமுவையும், கையில் சோற்றுத் தட்டையும் தூக்கிக்கொண்டு உள்ளே வந்தாள். ராமு கையையும் காலையும் உதைத்துச் சிணுங்கித் தன் சத்தியாக்கிரக சக்தியை நிரூபித்துக் கொண்டிருந்தான்.

ஜம்புலிங்கம் காரியாலய வேலைகளில் மனத் தைச் செலுத்தியபடியே “என்னடா கண்ணு!” என்று குழந்தையைக் கேட்டான். இரண்டு மூன்று முனகல்தான் ராமுவிடம் இருந்து பதி லாகக் கிடைத்தது.

ஜம்புலிங்கம் அலுத்துக் கொண்டு “என்ன சிவகாமி, குழந்தையின் தேவைகளைக் கூட நான் வந்துதான் பூர்த்தி செய்ய வேண்டுமா, என்ன வேண்டுமாம் அவனுக்கு!” என்றான்.

“அவனையே கேளுங்கள்” என்று சிவகாமி ராமுவைக் கீழே இறக்கி விட்டாள்.

ராமு நிதானமாக நடந்து வந்த தந்தையின் ஓரமாக ஒட்டி நின்று கொண்டான். ஜம்பு லிங்கம் கண்களை மேஜைமீதிருந்த காகிதங்களின் மீது பதிந்த வண்ணம் ஒரு கையால் ராமுவைச் சேர்த்து அணைத்து, கொஞ்சும் குரலில் “என்னடா கண்ணு வேண்டும்!” என்று கேட்டான்.

“எனக்கு மோட்டார் வேணும்......” என்று தன் மழலை மொழிகளில் கூறினான் ராமு.

ஜம்புலிங்கம் வேலையில் ஆழ்ந்தபடியே “சிவ காமி! அதை எடுத்துக் கொடேன். இதற்குக் கூடவா நான் வரவேண்டும்” என்றான்.

சிவகாமி பொங்கி வரும் சிரிப்பை அடக்கிக் கொண்டு உள்ளே போய் ஒரு பொம்மை மோட் டார் வண்டியுடன் திரும்பி வந்து அதை ஜம்பு லிங்கத்தின் மேஜைமீது வைத்தாள். ஜம்புலிங்கம் அதை எடுத்து ராமுவிடம் நீட்டி “எடுத்துக் கொண்டு போய் விளையாடிக் கொண்டே சாப் பிடு. அப்பா எழுத வேண்டுமல்லவா!” என்றான்.

ராமு தன் சின்னஞ்சிறு கைகளால் அந்த மோட்டார் பொம்மையை வாங்கினான். அடுத்த வினாடி அது ‘கடக்’ என்ற ஓசையுடன் எதிர் சுவரில் மோதிக் கீழே விழுந்தது. அவ்வளவு ஆத்திரத்துடன் ராமு அதைத் தூக்கி எறிந்தான்.

ஜம்புலிங்கம் திடுக்கிட்டுத் திரும்பினான். சிவகாமி விழுந்து விழுந்து சிரித்தாள். ராமு கோபத்தின் சின்னம் முகத்திலே துலங்கக் கோணிக் கொண்டு நின்று கொண்டிருந்தான்.

“என்ன, இது!” என்று ஒன்றும் புரியாமல் சிவகாமியின் முகத்தை நோக்கினான் ஜம்புலிங்கம்.

“விதையொன்று போட்டால் சுரை யொன்று முளைக்குமா! கோபம் வந்து விட்டால் கையில் கிடைப்பதைத் தூக்கியெறியும் அப்பாவின் குணம் பையனுக்கு காலாவது வயதிலேயே பிடித்துப் போய்விட்டது” என்று சிவகாமி சிரித்தாள்.

ஜம்புலிங்கம் ஆசையோடு ராமுவின் கையை எட்டிப் பிடித்தான். அவனோ தந்தையின் கையை உதறிவிட்டு விறைப்பாக நடந்து சென்று தாயின் பின்னால் மறைந்து கொண்டான். “சரி...இன்று வேலை செய்தாற் போலத்தான்” என்று நாற் காலியை விட்டு ஜம்புலிங்கம் எழுந்தான். குழந் தையின் இந்தப் பிடிவாத விளையாட்டு அலுத்துக்



“என்டா, நீ பரீக்ஷைக்குப் போக வில்லையா?”

“வாண்டுகீயிலிருந்து துணி வரவில்லை. பரீக்ஷைக்கு எப்படிப் போவது?”

கிடந்த அவன் மனத்தில் கொஞ்சம் மலர்ச்சியை உண்டாக்கியது. ராமுவின் எதிரில் வந்து மண்டியிட்டு உட்கார்ந்து கொண்டு "என்டா கண்ணு, மோட்டார்தானே கேட்டே, இதோ மோட்டார். அப்புறம் என்ன கோபம்!" என்று கீழே தலை குப்புறக் கவிழ்ந்து கிடந்த பொம்மை மோட்டாரைக் கையில் எடுத்தான்.

"எனக்கு இது வேணாம். அந்த செப்பு மோட்டார்தான் வேணும்......" என்று ராமு ஜன்னல் வழியாகத் தெருப் பக்கம் சுட்டிக் காட்டினான். அங்கே அழகான மாளிகையின் வாசலில் நின்றிருந்த செப்பு நிற மோட்டார் மாளிகையின் முன்புறம் இருந்த மெர்க்குரி விளக்கின் ஒளிப் போர்வையால் குழப்பட்டு பளபளவென்று மின்னிக் கொண்டிருந்தது.

ஜம்புலிங்கம் அசந்து விட்டான். பிறகு சமாளித்துக் கொண்டு "இதுதான் சின்ன மோட்டார். அது எதுக்கும் பூதமாட்டம். எவ்வளவு பெரிசு! கலராவே இல்லே" என்று கொஞ்சிக் கொண்டே பொம்மை மோட்டாரை ராமுவின் முகத்துக்கு நேரே நீட்டினான். அடுத்த நிமிஷம் ராமுவின் ஒரு கால் விட்ட உதையில் அந்த மோட்டார் ஏழெட்டுக் குட்டிக் கரணங்கள் அடித்துக் கொண்டு தரையில் உருண்டது. ராமு பழைய பல்லவியை மீண்டும் தொடங்கினான்.

"எனக்கு......செப்பு மோட்டார் வேணும்... செப்பு மோட்டார்தான் வேணும்...ம்...ம்..."

ஜம்புலிங்கம் நிலைமையைச் சமாளிக்கத் திறனின்றித் திணறவே சிவகாமி கை கொடுக்க முன் வந்தாள். உடனே குழந்தையின் முன்பு ஒரு சிறு நாடகத்தையே நடிக்கத் தொடங்கினாள். ஜம்புலிங்கத்தைப் போலிக் கோபத்துடன் தள்ளிவிட்டு, குழந்தையை அணைத்துக் கொண்டு "உனக்கு செப்பு மோட்டார்தானே வேண்டும்..." என்று அன்பு தவழக் கேட்டாள்.

ராமு "உம்......உம்......" என்று பலமாகத் தலையை ஆட்டினான்.

சிவகாமி அவசரமாக எழுந்து ஒரு காலணாவை எடுத்து ஜம்புலிங்கத்தின் கையில் வைத்து "இதை எதிர் வீட்டில் கொடுத்து அந்த செப்பு மோட்டாரை வாங்கிக்கொண்டு வந்து விடுங்கள். குழந்தை கேட்கும்போது 'இல்லே' என்று சொல்வதா" என்று கர்ஜித்து விட்டுக் கண்களால் ஜம்புலிங்கத்திற்கு ஜாடை காட்டினாள். அவன் சிரித்துக் கொண்டே வெளியே போய் விட்டான். தெருப்பக்கம் கொஞ்ச நேரம் உலாவி விட்டு ஜம்புலிங்கம் உள்ளே வந்தபோது ராமு சாப்பிட்டுத் தூங்கிக் கொண்டிருந்தான்.

"என்ன, மோட்டார் வாங்கி விட்டீர்களா!" என்று கேட்டு விட்டுச் சிவகாமி சிரித்தாள். அந்தச் சிரிப்பில் மெய் மறந்து கலந்துகொண்டு ஜம்புலிங்கம் சத்தம் போட்டுச் சிரிக்கத் தொடங்கவே சிவகாமி ஓடிவந்து அவன் வாயைத் தன் கைகளால் மூடிக் குழந்தையைக் காட்டினாள்.

2

ஜம்புலிங்கம் உயிர் வாழ்வதற்காகக் குறைந்த ஊதியத்தில் ஒரு கம்பெனியின் குமாஸ்தாவாக இருந்தான். எதிர் வீட்டு வக்கீல் வேதாந்தமோ பணம் சம்பாதிப்பதற்காக உயிர் வாழ்ந்து கொண்டிருந்தார். ஜம்புலிங்கத்தின் வருமானம் மார்க்கண்டேய அவதாரம் எடுத்து என்றும் சிரஞ்சீவியாய் ஒரே எல்லைக் கோட்டில் நகராமல் நின்றிருந்தது. வக்கீல் வேதாந்தம் வீட்டிலோ வருமானம் அறுவடை காலத்து வைக்கோல்போல வளர்ந்து கொண்டே வந்தது. மாளிகை வாசலில் வருடத்துக்கு ஒரு மாடல் கார் நின்றது.

ஆனால் இந்த துருவ வித்தியாசத்துக்கு மத்தியில் ஒரு விஷயத்தில் ஜம்புலிங்கம் மிக உயர்ந்து நின்றான். அந்த எல்லையை வக்கீல் வேதாந்தத்தால் நிமிர்ந்துகூடப் பார்க்க முடியவில்லை.

நான்கு வருடத்துக்கு முன்பு ஜம்புலிங்கம் தம்பதிகளுக்கு ஒரு புதையல் கிடைத்தது. அது இப்பொழுது ராமு என்ற பெயருடன் வளர்ந்து கொண்டே இருக்கிறது. பாவம் வேதாந்தத்துக்கு அந்தச் சம்பத்துதான் கிடைக்கவில்லை. இதை நினைக்கும்போதுதான் ஜம்புலிங்கம் தம்பதிகள் ஆகாசத்தில் பறக்க ஆரம்பித்து விடுவார்கள்.

ஒருநாள் மாலை சிவகாமி அடுக்களையில் காப்பி தயாரித்துக் கொண்டிருந்தபோது வெளி தெருப் பக்கம் விளையாடிக் கொண்டிருந்த ராமு தலைகால் தெரியாமல் உள்ளே ஓடி வந்தான். அவன் முகத்தில் படிந்திருந்த ஆனந்தத்தின் சாயலைக் கண்டு "என்னடா கண்ணு" என்றாள் சிவகாமி. ராமு பதில் சொல்லவில்லை. திடீரென ஏற்பட்ட மகிழ்ச்சியின் துடிப்பில் அவனுடைய உளறல் பேச்சு கூட வெளிவர மறுத்துவிட்டது. சிவகாமியின் கையைப் பிடித்துப் பலவந்தமாக இழுத்துக் கொண்டு வெளியே வந்தான். "அதோ......" என்று எதிர் வீட்டுப் பக்கம் கையைச் சுட்டிக் காட்டிவிட்டுச் சந்தோஷம் தாங்கமாட்டாமல் துள்ளிக் குதிக்கத் தொடங்கி விட்டான்.

எதிர் வீட்டில் அந்த வருஷ மாடலான புதிய ரத்தச் செப்பு நிறக் கார் நின்று கொண்டிருந்தது. அதைக் கண்ட உடனே சிவகாமியின் மனம் துணுக்குற்றது. இனம் தெரியாத ஒரு வகைத்



திலே சட்டெனத் தன் இதயத்தில் பரவிப் படிவதை உணர்ந்து அவள் பீதியடைந்தாள். இந்த பீதியின் பொருளென்ன என்பதை அவளால் புரிந்து கொள்ளவே முடியவில்லை.

“வாடா கண்ணு காப்பி சாப்பிடலாம்...” என்று ஒரு விநாடிகூட வெளியே தாமதிக்காமல் தன் செல்வக் குழந்தை ராமுவைத் தூக்கிக் கொண்டு உள்ளே போய்விட்டாள்.

உள்ளே ராமுவுக்குக் காப்பியைப் புகட்டிக் கொண்டிருக்கும் போது காரியாலயத்திலிருந்து திரும்பிய ஜம்புலிங்கம் உள்ளே நுழைந்தான். நுழையும் போதே வேடிக்கையாக “என்ன எதிர் வீட்டிலே திடீரென்று ஒரு அபாயம் வந்திருக்கிறது போலிருக்கிறதே” என்றான்.

‘அபாயம்’ என்ற வார்த்தையைக் கேட்டபோது சட்டென சிவகாமியின் முகத்தில் ஏற்பட்ட கலவரத்தைக் கண்டு ஜம்புலிங்கம் ஒரு கணம் பயந்து போய்விட்டான்.

“பைத்தியமே! எதிர் வீட்டிலே செப்பு கார் புதிதாக நிற்கிறதே என்று கூறினேன்!” என்றான் சிரித்துக்கொண்டு. ஆனால் சிவகாமியின் மனப் பீதி உடனே குறைந்து விடவில்லை. வேலை செய்த அலுப்புடன் ஓய்ந்து போய்த் திரும்பிய ஜம்புலிங்கத்தின் கண்கள் பிறகு இதைக் கவனிக்கவில்லை.

3

விளையாட்டுப் போல் ஆரம்பமான ராமுவின் செப்பு மோட்டார் பித்து அவன் மனத்தில் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே இருந்தது. அவன் மனம் முழு மூச்சாக எதிர் வீட்டுச் செப்பு மோட்டார் மீது படிவதை ஜம்புலிங்கம் கடைசி வரை வெறும் வேடிக்கையாகவே கருதினான். ஆனால் சிவகாமியின் உள்ளத்திலோ இது பயங்கரமான தீயை மூட்டி மூட்டி எரிக்கத் தொடங்கியது. மேலுக்கு ராமுவின் விளையாட்டை ரசித்து மகிழ்பவள் போல் தோன்றினாலும் இதயத்தின் பீதி உள்ளூறப் பெருகிக் கொண்டே வந்தது. சில சமயங்களில் தன் மனக் கலக்கம்பற்றி ஜம்புலிங்கத்திடம் எடுத்துக் கூறுவாள். அவனோ இதை அலட்சியமாக ஒதுக்கிவிட்டு “இந்தப் பெண்களே இப்படித்தான்! சின்னப் பிள்ளைகள் எதையாவது புதுப் பொருளைக் கண்டால் அதில் மனத்தை ஈடு படுத்துவது இயல்பு தானே!” என்று கேலி செய்து சிவகாமியின் வாயை அடக்கி வைத்து விடுவான்.

ஆனால் நாட்கள் செல்லச் செல்ல ஜம்புலிங்கமும் ராமுவின் மன நிலையைப் பற்றிச் சிந்திக்க வேண்டிய கட்டாயத்துக்கு வந்து விட்டான்.



ராமு ஊண் உறக்கமின்றிச் செப்பு மோட்டார் நினைவாக இருந்தான். நாள் முழுவதும் வீட்டு வாசலை விட்டு அசைவதே கிடையாது. எதிர் வீட்டில் மோட்டார் இல்லாத நேரங்களில் எதையோ பறி கொடுத்தவன் போல உட்கார்ந்திருப்பான். மோட்டார் வந்துவிட்டாலோ அவனுக்கு ஒரே மகிழ்ச்சி. வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்தபடியே கார் ஓட்டுவது போல் கைகளால் பாவனை செய்து கொண்டு “பாம்! பாம்!” என்று வாயால் கத்துவான். ஒரு தடவை தன் கற்பனை மோட்டாரை ஓட்டும் வேகத்தில் உயரமான திண்ணையிலிருந்து கீழே உருண்டு விழுந்து விட்டான். தலையில் நன்றாக அடிபட்டு விட்டது. அந்த அதிர்ச்சியின் விளைவாக அவனுக்குக் காய்ச்சல் வந்து விட்டது. காய்ச்சலின் வேகத்தில் இரவு முழுவதும் அவன் செப்பு மோட்டாரைப் பற்றியே பிதற்றிக் கொண்டிருந்தான். அதைக் கண்ட பிறகுதான் ஜம்புலிங்கத்தின் மனமும் கலக்கத்தில் ஆழ்ந்தது.

சில நாட்களில் ராமு குணமடைந்து எழுந்து விட்டான் என்றாலும் ஜம்புலிங்கம் தம்பதிகள் மனத்தில் ஏற்பட்ட அதிர்ச்சி நீங்கவில்லை. ராமுவின் மனத்திலிருந்து செப்பு மோட்டாரை அகற்றாவிட்டால் ஏதாவது விபரீதம் நடந்து விடுமோ என்று இருவரும் அஞ்சினர்.

ஜம்புலிங்கம் தனது சிரமமான பொருளாதாரச் சூழ்நிலையையும் பொருட்படுத்தாது, சாவி கொடுத்தால் ஓடக் கூடிய பொம்மை மோட்டார் ஒன்றை ஐந்து ரூபாய் விலை கொடுத்து வாங்கி வந்தான். ராமு இரண்டு நாட்கள் வரை செப்பு மோட்டாரையும் மறந்து சொந்த மோட்டாரை வீட்டுக்குள் மூலை முடுக்குகளிலெல்லாம் ஓட விட்டு மகிழ்ந்தான். மூன்றாம் நாள் பொம்மை மோட்டார் சலித்துவிட்டது. அதை மூலையில் போட்டுவிட்டுப் பழையபடி தெருவுக்கு வந்து செப்பு மோட்டாரைக் கவனிக்க ஆரம்பித்து விட்டான்.

ஜம்புலிங்கத்துக்கு ஒரு யோசனை புலப்பட்டது. ஒரு நாள் எதிர் வீட்டு வக்கீலைச் சந்தித்துக் ‘குழந்தைக்காக’ என்று மோட்டாரைச் சற்று நேரம் இரவல் கேட்டான். கொஞ்ச நேரம் அந்தக் காரில் உட்கார்ந்து சுற்றி வந்தால் ஒரு வேளை ராமுவின் ஆசை தீரலாம் என்பது அவன் எண்ணம்.

ஜம்புலிங்கத்தின் வேண்டுகோளைக் கேட்டு வக்கீல் மட்டுமல்ல, அப்போது அங்கேயிருந்த ஐந்தாறு கட்சிக்காரர்களும் விழுந்து விழுந்து சிரித்தனர்.

“ஐயா வீட்டு மோட்டாரைக் குழந்தைக்கு விளையாட்டு காட்டுற பொம்மை என்று நினைத்து விட்டார் போலிருக்கு!” என்று அங்கிருக்கும் ஒருவர் கூறவே மற்றவர்கள் பெரிய விகடத் துணுக்கைக் கேட்டவர்கள் போலக் ‘கொல்’லென்று நகைத்தனர். புண் பட்ட நெஞ்சோடு ஜம்புலிங்கம் ஒன்றும் பதில் பேசாது வீட்டுக்குத் திரும்பி விட்டான்.

அன்று சம்பளம் வாங்கும் நாள். பணத்தைக் கையில் வாங்கிக்கொண்டு மாலையில் வீடு திரும்பிய போது ஜம்புலிங்கத்துக்குப் புது யோசனை ஒன்று உதித்தது. திரும்பிப் பார்த்தான், கொஞ்ச தூரத்தில் ஒரு டாக்ஸி நின்று கொண்டிருந்தது. அதைக் கை காட்டி அழைத்தான். டாக்ஸி அவனருகில் வந்ததும் அதில் ஏறிக்கொண்டு தன்னுடைய வீட்டு வாசலில் வந்து இறங்கினான்.

வீட்டு வாசலில் மோட்டார் வந்து நிற்பதைக் கண்டு ஒருகணம் வியப்படைந்த சிவகாமி குழந்தை ராமுவை அழைத்துக்கொண்டு வெளியே வந்தாள். காரிலிருந்து ஜம்புலிங்கம் இறங்குவதைக் கண்டதும் அவள் வியப்பு கரை கடந்து விட்டது.

ஜம்புலிங்கம் ராமுவுக்காகத் தான் போட்ட திட்டத்தைச் சிவகாமிக்கு எடுத்துக் கூறி "ஒரு ஐந்து ரூபாய் போனாலும் போகட்டும். ராமுவின் மோட்டார் ஆசை தீர்ந்தால் சரிதான்" என்றான்.

பிறகு ஜம்புலிங்கம் சிவகாமி, ராமு சகிதம் டாக்ஸியில் கொஞ்ச தூரம் போய்விட்டுத் திரும்பினான். ராமு மோட்டார் பிரயாணத்தை நன்றாக ரசித்தான். கண்டபடி கூச்சல் போட்டு ரகளை செய்து குதித்து விழுந்து காரில் செய்த அட்டகாசம் பெற்றோர்களின் மனத்துக்குப் பெரிய அமைதியைத் தந்தது. வீடு சேர்ந்த பிறகு ஜம்புலிங்கம் குழந்தையை அணைத்துக் கொண்டு "போதுமடா, மோட்டார் சவாரி!" என்றான்.

ராமு அளித்த பதில் இருவரையும் தூக்கி வாரிப் போட்டது. "இது சேப்பு மோட்டார் இல்லே! இது கொஞ்சங்கூட நன்றாகவே இல்லே!"

ஜம்புலிங்கம் தான் செய்த மகத்தான தவறை உணர்ந்தான். அவன் பிடித்த டாக்ஸியின் நிறம் பச்சை. "பிடித்ததுதான் பிடித்தோம், சிவப்பு நிறமாகத் தேடிப் பிடிக்காமல் போய் விட்டோமே!" என்று எண்ணியபோது அரை குறையாக அவன் மனதில் குடிகொண்ட மகிழ்ச்சியும் அந்தக் கணமே பறந்தோடி விட்டது.

4

ராமுவின் வயது வளர வளர அவனுடைய விளையாட்டு மனப்பான்மை சிவப்பு மோட்டாருடன் இணைந்தே வளர்ந்தது. முதலில் தன் வீட்டை விட்டு அக்கம் பக்கத்து வீட்டுச் சிறுவர்களுடன் "சேப்பு மோட்டார்" விளையாட ஆரம்பித்தான். சமயத்துக்குத் தகுந்த மாதிரி கட்டில், மேஜை, நாற்காலி ஆகியவை அவனுக்கும் அவன் நண்பர்களுக்கும் சிவப்பு மோட்டாராக இருந்து உதவி செய்தன. அப்புறம் மெல்ல மெல்ல தெருக்கோடி வரை சென்று வழக்கமான விளையாட்டை விளையாடத் தொடங்கினான். சிவகாமி என்னதான் எச்சரிக்கையாக இருந்தும் அவனைக் கட்டுப்படுத்தி வீட்டில் வைத்துக் கொள்ள முடியவில்லை.

ஒருநாள் ராமு அந்திநேரத்தில் அந்தத் தெருவையே தாண்டி அடுத்த தெருவுக்குப் போய் விட்டான். ஜம்புலிங்கமும் சிவகாமியும் பதறிப் போய்த் தேடிக்கொண்டு வெளியே கிளம்பினர். ராமு அடுத்த தெருவில் ஒரு ஓரத்தில் நின்று கண்களைக் கசக்கிக் கொண்டிருந்தான். இழந்த

உயிரை மீண்டும் பெற்றதுபோல சிவகாமி ஓடிச் சென்று அவனை வாரி யெடுத்துக் கொண்டாள்.

"இங்கே எங்கேடா வந்தே! உன்னை யெல்லாம் தேடிக் கொண்டு அலைவது" என்று ஐம்புலிங்கம் கோபத்தோடு அதட்டினான்.

"செப்பு மோட்டார் பின்னாலேயே ஓடிவந்தேன்... அது என்னை விட்டுட்டு ஓடிப்போயிடுத்து" என்று ராமு தேம்பித்தேம்பி கூறியதைக் கேட்ட ஐம்புலிங்கமும் சிவகாமியும் மின்சார விசையால் தாக்குண்டவர்கள் போல அதிர்ச்சி யடைந்து ஒருவர் முகத்தை ஒருவர் நோக்கினர்.

5

அன்று ஐம்புலிங்கம் வெகு சீக்கிரமாகவே காரியாலயத்தை விட்டுப் புறப்பட்டு விட்டான். அதற்குக் காரணமும் இருந்தது. அன்று சம்பள நாள். பணம் கைக்கு வந்த உடனேயே அவனுக்கு முதலில் ராமுவின் செப்பு மோட்டார் நினைவுதான் வந்தது. இந்தத் தடவை கொஞ்சம் புத்திசாலித்தனமாக நடந்து ராமுவின் ஆசையைத் தீர்த்து விடுவது என்று தீர்மானித்துக் கொண்டு 'டாக்ஸி'கள் நிற்கும் பக்கம் வந்து நல்ல செப்பு நிற டாக்ஸி ஒன்றை அமர்த்திக் கொண்டான். ராமுவுக்கு சில்க் 'தயாரிப்பு சட்டை' ஒன்றும் தின்பண்டங்களும் வாங்கிக் கொண்டு டாக்ஸியில் வீட்டை நோக்கி வந்தான். இந்தச் செப்பு மோட்டாரைக் கண்டதும் ராமு செய்ய இருக்கும் அட்டகாசங்கள் அவன் மனத் திரையில் பற்பல காட்சிகளாகத் தோன்றி மின்னின.

"ராமு இந்தச் செப்புக் காரைப் பார்த்தவுடனேயே பறந்து வந்து காரில் உட்கார்ந்து கொள்வான். தன் பிள்ளையின் சந்தோஷத்தைப் பார்த்துச் சிவகாமியின் மனசு பூரித்துப் போகும். ராமு சிவகாமி எல்லாருடனும் நாலு தெருவையும் சுற்றி வரவேண்டும். ராமு கடைசியில் 'போதும் அப்பா!' என்று சொல்லி விடுவான். அது அவன் மனசில் இத்தனை நாளாக இருந்து வரும் செப்பு மோட்டார் ஆசையைக் குறைத்து விடும். 'ப்பூ செப்பு மோட்டார் இவ்வளவுதானு!' என்று கூடத் தோன்றலாம். அத்துடன் ராமுவின் தீராத இந்த மனக் குறை தீர்ந்துவிடும். எதிர் வீட்டுச் செப்பு மோட்டாரைப் பார்த்தால்கூட 'நான்தான் இந்தச் செப்புக் காரில் ஏறிப் பிரயாணம் செய்திருக்கிறேனே! என்று சொல்லி விட்டு விளையாட ஓடிப் போய்விடுவான்" என்றெல்லாம் எண்ணித் திருப்தியடைந்தான் ஐம்புலிங்கம்.

டாக்ஸி வீட்டை அடைந்த உடனே ஐம்புலிங்கம் முகமலர்ச்சியுடன் கை நிறைய வாங்கிய சாமான்களோடு இறங்கி உள்ளே அடி யெடுத்து வைத்து "ராமு........." என்று கூப்பிட்டான். உள்ளே யிருந்து ராமு ஓடி வருவான் என்று அவன் எதிர் பார்த்தான். ஆனால் சிவகாமிதான் பரபரப்புடன் வந்தாள். அவள் முகத்தில் படிந்திருந்த கலவரத்தின் சாயலைக் கண்ட உடனேயே ஐம்புலிங்கத்தின் பாதி உயிர் போய் விட்டது. "ராமு எங்கே!" என்று படபடப்புடன் கேட்டுவிட்டு உள்ளே கூர்ந்து பார்த்தான்.

"அதுதானே தெரியவில்லை. உள்ளே காப்பி போட்டுக் கொண்டிருந்தேன். எப்படியோ ஏமாற்றி விட்டுப் போய் விட்டான். அடுத்த தெருவில்கூடப் போய்ப் பார்த்து விட்டேன். காணவில்லை. உங்களை எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன்" என்று கூறினாள் சிவகாமி.

ஜம்புலிங்கம் டாக்ஸிக்காரனுக்குப் பணத்தைக் கொடுத்துத் திருப்பி அனுப்பி விட்டு வேகமாகத் தெருவில் இறங்கினான். சிவகாமி செயலற்று வாசலிலேயே நின்றாள்.

இந்தச் சமயத்தில் எதிர்வீட்டுச் செப்பு மோட்டார் அவர்கள் வீட்டு வாசலில் வந்து நிற்கவே ஜம்புலிங்கம் ஒன்றும் புரியாமல் விழித்தான்.

முன் பக்கம் டிரைவர் ஆசனத்திலிருந்த வக்கீல் வேதாசலம் முதலில் கதவைத் திறந்து கொண்டு கீழே இறங்கினார். உடனே மௌனமாக சென்று பின்பக்கக் கதவைத் திறந்துவிட்டார். அங்கிருந்து டிரைவர் கீழே இறங்கினான். ஏந்தியிருந்த அவன் கைகளைப் பார்த்த உடனேயே உள்ளே நின்றிருந்த சிவகாமி 'ஓ'வென அலறி வந்து விழுந்தாள்.

டிரைவர் மெல்ல உள்ளே வந்து கைகளில் துவண்டு கிடந்த ராமுவைக் கீழே கிடத்தினான்.

சிவகாமி ராமுவைக் கட்டிப்பிடித்துக் கொண்டு கதறினாள். ஜம்புலிங்கம் உணர்ச்சியே இழந்து விட்டவன் போலச் செயலற்று நடந்து வந்து ராமு கிடக்கும் நிலையைப் பார்த்தான்.

"மிஸ்டர் ஜம்புலிங்கம்! குழந்தையைக் கொஞ்சம் ஜாக்கிரதையாகப் பார்க்க வேண்டாமா! மூன்றாவது தெருவின் மூலை திரும்பிய போது இவன் திடீரென எங்கிருந்தோ மோட்டாரின் முன்னால் குதித்து விட்டான். டிரைவரின் சாமர்த்தியத்தினால் பையன் பிழைத்தான். அதிர்ச்சியில் சோர்ந்து விட்டான். அபாயம் இல்லை யென்று டாக்டர் கூறி விட்டார். பயப்பட வேண்டாம். இன்மேல் தினம் உங்கள் பையனை நானே என் மோட்டாரில் கொஞ்ச தூரம் அழைத்துப் போய் வருகிறேன். அன்று இந்தக் குழந்தையின் ஆசையைத் தெரிந்து கொள்ளாமல் தங்களிடம் நடந்து கொண்டதற்காக என்னை மன்னிக்க வேணும்" என்று கேட்டுக் கொண்டார் வக்கீல்.

சிவகாமியின் விம்மல் நிற்கவில்லை. ஜம்புலிங்கம் இதயத்தை அழுத்திப் பிடித்துக் கொண்டு காலையிலெல்லாம் குறுக்கே போட்டுக் கொண்டிருந்த அந்த பேசும் பொற்சித்திரம் பேச்சற்றுக் கிடக்கும் காட்சியைப் பார்த்தான்.

இருந்தாற் போலிருந்து ராமுவின் உதடுகள் அசைவது போலத் தோன்றவே ஜம்புலிங்கம் சிவகாமியை வலிய அப்பால் இழுத்து விட்டு ராமு முகத்துக்கு நேரே குனிந்து வேதனையோடு "என்னடா கண்ணு!" என்றான்.


ராமு மெல்ல கண்களை விழித்துத் தந்தையை ஆழ்ந்து நோக்கினான். அவன் உதடுகளில் லேசான புன்னகை பரவியது. "அப்பா...அப்பா...இப்போ இப்போ நான் செப்பு மோட்டாரிலே வந்தேன் அப்பா, தெரியுமா!" என்றான் தட்டுத் தடுமாறிக் கொண்டு. அப்பொழுது அவன் முகத்தில் பரவியிருந்த பெருமிதம்; அவன் கண்களில் தேங்கியிருந்த உணர்ச்சிப் பெருக்கு ஆவலுற்றில் வெற்றியின் சின்னம் படிந்து கிடந்தது.

"என் வயிற்றில் பாலை வார்த்தாயேடா!" என்று ஆவலுடன் கூறினாள் சிவகாமு.

"உங்கள் வயிற்றில் மட்டுமா, என் வயிற்றிலும் தான் பாலை வார்த்தான்" என்றார் வக்கீல்.

ஜம்புலிங்கம் முகத்தில் ஒரு தெளிவு ஏற்பட்டது. அவன் வாய் திறந்து ஒன்றுமே சொல்லவில்லை. ராமுவைப் பார்த்தபடியே இருந்தான்.

பாகவதரின் புது சாகித்யம்!



ஐரோப்பாவின் அதிசய நதி

ஜெயமணி

பல்கேரியா ருஷ்யாவின் நட்பை விரும்பியதால், ஜெர்மனி ருஷ்யா மீது படையெடுத்ததை அந்த நாடு ஆதரிக்கவில்லை. எனவே பல்கேரிய சர்க்கார், ஜெர்மன்-ருஷ்ய யுத்தத்தில் ஜெர்மனிக்கு உதவியாகத் துருப்புகளை அனுப்ப மறுத்து விட்டனர். எனினும் ஜெர்மனியைத் திருப்தி செய்வதற்காக அவர்கள் அமெரிக்கா மீதும் பிரிட்டன் மீதும் மாத்திரம் யுத்தப் பிரகடனம் செய்யத் தயங்கவில்லை.

பல்கேரிய மன்னரும் சர்வாதிகாரியுமான போரிஸ் நாஜியர்களின் அடிச் சுவடுகளைப் பின்பற்ற முற்பட்டார். எனவே பல்கேரியாவில் சர்வாதிகார ஆட்சியின் கொடுமைகள் தலைவிரித்தாடின. அங்கு ஜனநாயக ஆட்சி முறை இருந்த இடம் தெரியாமல் மறைந்தது. யூதர்கள் இரக்கமின்றிக் கொடூரமாகத் தாக்கப் பட்டனர்.

யுத்தத்தின் போக்கு ஜெர்மனிக்குப் பாதகமாகத் திரும்பவே, ருஷ்யாமீது யுத்தப் பிரகடனம் செய்யும்படி ஜெர்மனி பல்கேரியாவை வற்புறுத்தியது.

அதன் சம்பந்தமாக ஹிட்லருடன் பேசி விட்டுத் தமது நாட்டுக்குத் திரும்பிய பல்கேரிய மன்னர் போரிஸ் கொல்லப்பட்டார்.



இந்திரன் மனைவி:—என்ன போங்கள் என் கணவர் என்மேலே கோபித்துக் கொண்டு அநாவஸ்யமாக மின்னுகிறார். இடி, இடி என்று இடிக்கிறார். மழையே பெய்யமாட்டேன் என்கிறார். சற்று நாழியாவது 'அசோகா' போட்டுக் கொண்டால் சந்தோஷமாகக் கொஞ்சம் மழை பெய்வார். நீங்கள் பூலோகத்திலிருந்து திரும்பி வரும்போது நிறைய அசோகா பாக்குத்தான் வாங்கி வாருங்கள்.

உடனே போரிஸ் மன்னரின் மகனான ஆறு வயதுச் சிறுவனைப் பல்கேரிய மன்னராகப் பிரகடனம் செய்தனர். அதிலிருந்து ஹிட்லரைப் பல்கேரிய சர்க்கார் ஆதரித்து வந்தனர்.

அப்படி யிருந்தும், அவர்கள்கூட ருஷ்யா மீது யுத்தப் பிரகடனம் செய்யத் துணியவில்லை. ஏனெனில், அப்போது பல்கேரிய மக்கள் ருஷ்யாவையே ஆதரித்தனர். எனவே அவர்களை விரோதித்துக் கொண்டு ருஷ்யா மீது யுத்தப் பிரகடனம் செய்ய ஹிட்லரின் கைப்பொம்மைகளான பல்கேரிய சர்க்கார் தலைவர்கள்கூடத் துணியவில்லை.

இச்சந்தர்ப்பத்திலே மகாயுத்தத்தின் போக்கில் பெரும் மாறுதல் ஏற்படத் தொடங்கியது. அச்சு நாடுகள் போரில் வெற்றிபெற முடியாது என்பதற்கான அறிகுறிகள் தோன்றலாயின. அமெரிக்கா வெடிகுண்டு விமானங்கள் அடிக்கடி பல்கேரிய நகரங்களைத் தாக்க ஆரம்பித்தன.

அதனால் மனம் கலங்கிய பல்கேரியத் தலைவர்கள் ஹிட்லருக்குச் சாதகமாக இருந்த சர்க்காரை விழ்த்தி விட்டு, வேறு சர்க்காரை அமைத்தனர். மேற்படி சர்க்கார் அமெரிக்காவுடனும் பிரிட்டனுடனும் சமாதானம் செய்து கொள்ள முற்பட்டார்கள்.

எனினும் அமெரிக்கா, பிரிட்டன், பல்கேரியா இந்த மூன்று நாடுகளுக்கும் சமாதானம் ஏற்படுமுன், ருஷ்யா பல்கேரியா மீது யுத்தப் பிரகடனம் செய்தது.

அதன் பலனாக, யூகோஸ்லேவியாவிலும் கிரீஸிலும் இருந்த தன் துருப்புகளைப் பல்கேரியா வாபஸ் செய்து கொள்ளும்படியான நிர்ப்பந்தம் ஏற்பட்டது. ருஷ்யத் துருப்புகள் பல்கேரியாவை ஆக்கிரமித்துக் கொண்டன.

ஏற்கெனவே ஜெர்மனிக்குச் சாதகமாக இருந்த பல்கேரியத் தலைவர்கள் ருஷ்யர்களால் தூக்கிலிடப் பட்டார்கள்.

1946-ம் வருஷம் பல்கேரியாவில் பொது ஜன வாக்கு எடுக்கப்பட்டது. அப்போது முப்பத்தெட்டு லட்சம் ஜனங்கள் குடியரசை ஆதரித்து வாக்குக் கொடுத்தனர். இரண்டு லட்சம் ஜனங்கள்தான் முடியரசை ஆதரித்தார்கள். அதன் பலனாக அந்த நாட்டில் முடியரசு மறைந்து குடியரசு ஏற்பட்டது.

அதே ஆண்டில் நடந்த பொதுத் தேர்தலில் கம்யூனிஸ்டுக் கட்சியினரே பெரும்பாலான ஸ்தானங்களைப் பெற்றதால், அவர்களே சர்க்கார் நிர்வாக அதிகார பீடத்தில் அமர்ந்தனர். அதனால் மேற்படி நாடு இரும்புத் திரைக்குள் அகப்பட்டுக் கொள்ள நேர்ந்தது.

* * *

பல்கேரியாவின் நில வளத்தையும் நீர் வளத்தையும் பற்றிக் குறிப்பிடுமுன், ஐரோப்



பாவின் அதிசய நதியாக விளங்கும் டனூபியைப் பற்றிச் சில வார்த்தைகள் கூற வேண்டியது அவசியம். ஏனெனில் டனூபி நதி நூற்றுக்கணக்கான மைல் தூரம் பல்கேரியா தேசத்தின் வடக்கு எல்லையாக, பலம் வாய்ந்த அகழ் போல அமைந்திருக்கிறது.

ஐரோப்பாவில் உள்ள பெரிய நதிகளில் டனூபி இரண்டாவது ஸ்தானம் வகிக்கிறது. ஆயிரத்து எழுநூற்றைம்பது மைல் நீளம் உள்ள டனூபியைக் காட்டிலும் பெரிய நதிகள் உலகில் இருக்கின்றன. எனினும் டனூபியைப் போல் பல நாடுகளைக் கடந்து செல்லும் நதி வேறு எதுவும் இல்லை.

ஜெர்மனியில் ஆரம்பமாகும் டனூபி நதி ஆஸ்திரியா, ஹங்கேரி, யூகோஸ்லேவியா, பல்கேரியா, ருமேனியா வழியாகச் சென்று இறுதியில் கருங்கடலில் போய் விழுகின்றது.

மேற்படி நதி ஆழமாக இருப்பதால், கப்பல் மூலமாக மத்திய ஐரோப்பாவின் வியாபாரப் போக்கு வரத்துக்கு அது மிகவும் உபயோகமாக இருக்கிறது.

ஐரோப்பாவின் சரித்திரத்திலும் ஐரோப்பிய கவிகளின் பாடல்களிலும் கூட டனூபி இடம் பெற்றிருக்கிறதெனில், அதன் மகத்துவத்தை அறிந்து கொள்ளலாம்.

ஆஸ்திரியாவின் தலைநகரான வியன்னா, ஹங்கேரி நாட்டின் தலைநகரான புடாபெஸ்ட், யூகோஸ்லேவியா தேசத்தின் தலைநகரான பெல்கிரேட் முதலிய மற்றும் பல நகரங்கள் டனூபி நதியின் கரையில் வெகு அழகாக அமைந்திருக்கின்றன.

• • •

சுமார் நாற்பதாயிரம் சதுர மைல் விஸ்தீரணம் உள்ள பல்கேரிய நாட்டின் ஜனத்தொகை அறுபது லட்சம் ஆகும்.

பல்கேரியாவில் செழுமையான பிரதேசங்கள் ஏராளமாக இருக்கின்றன. மற்ற பால்கன் நாடுகளைப் போல் பல்கேரியாவில் அவ்வளவு அதிக மலைகள் இல்லை.

பல்கேரிய மக்களில் ஐவருக்கு நால்வர் விதம் விவசாயிகள் தான். அந்த நாட்டில் முக்கியமாக கோதுமையும் சோளமும் ஏராளமாக விளைகின்றன.

வாசனைத் தைலங்களுக்கு உபயோகிக்கப்படும் ரோஜா அத்தர் பல்கேரியாவில் அபரிமிதமாக உற்பத்தியாகிறது.

பல்கேரியாவில் உள்ள குடியானவர்கள் கால்நடைப் பண்ணைத் தொழிலில் திறமை வாய்ந்தவர்களாக இருப்பதால் அங்கிருந்து வெளி நாடுகளுக்கு ஏராளமாகப் பால் சாதனங்கள் ஏற்றுமதியாகின்றன.

பல்கேரியா சிறிய நாடாயினும் அந்த நாட்டில் உள்ள தொழிற்சாலைகளிலிருந்து சர்க்கரை, பட்டு, பருத்தி நூல் துணிகள், பலவித மாவு, சைக்கிள் வண்டிகள், குழந்தைகளின் கைவண்டிகள், காகிதம், பாத ரட்சைகள், மோட்டார் டயர்கள் முதலிய முக்கிய வாழ்க்கைச் சாதனங்கள் உற்பத்தியாகின்றன.

இரும்புத் திரைக்கு உட்பட்ட அல்பேனியாவைப் போல் பல்கேரியாவிலும் கிராமங்களே அதிகமாக இருக்கின்றன. பல்கேரியாவில் ஒரு லட்சம் ஜனத்தொகைக்கு மேற்பட்ட நகரம் ஒன்றுக்கு மேல் இல்லை.

நாலு லட்சம் ஜனத் தொகையுள்ள சோபியா, பல்கேரியாவின் தலைநகராக விளங்குவதுடன் முக்கிய வியாபார ஸ்தலமாகவும் இருக்கிறது. மேற்படி தலைநகர் விடாஸ்கா மலைத் தொடருக்கும் பால்கன் மலைத் தொடருக்கும் மத்தியில் இருக்கிறது.

சோபியாவில் ஏராளமான மிகப் பெரிய தொழிற்சாலைகள் இருக்கின்றன.

1879-ம் வருஷத்துக்குப் பின் சோபியா புதிய முறையில் நிர்மாணிக்கப்பட்டதால், அது உலகில் உள்ள நவீன நகரங்களில் ஒன்ருக இருந்து வருகிறது.

பல்கேரியா, ஐரோப்பாவிலிருந்து ஆசியாவுக்குச் செல்லும் முக்கியமான பாதைகளில் ஒன்ருக விளங்குகிறது.

மேற்படி நாட்டிலிருந்து அதைச் சுற்றியுள்ள சகல நாடுகளுக்கும் செல்லுவதற்கு ரயில் பாதைகள் இருப்பது அந்த நாட்டில் இருக்கும் ஒரு விசேஷ அம்சமாகும்.

ரயில் பாதைகளைப் போல் டனூபி நதியும், மாரிட்ஸா நதியும் பல்கேரியாவின் வியாபாரப் போக்கு வரத்துக்கு முக்கியமான பாதைகளாக இருந்து வருகின்றன. பல்கேரியாவிலிருந்து ஜெர்மனிக்கு ஏற்றுமதியாகி வரும் கோதுமை, புகையிலை முதலிய சாதனங்கள் டனூபி நதி வழியாகத் தான் அனுப்பப்படுகின்றன. கருங்கடலில் உள்ள துறைமுகங்களைக் காட்டிலும் டனூபி நதியில்தான் அதிகமாக வியாபாரச் சரக்குகள் ஏற்றுமதி, இறக்குமதி செய்யப்படுகின்றன.

அந்த நாட்டில் பல்கேரியர்களைத் தவிர எட்டு லட்சம் முஸ்லிம்களும் இருக்கிறார்கள். அங்கு துருக்கி சாம்ராஜ்யம் வியாபித்திருந்த போது அவர்கள் மதம் மாறியவர்களாதலால், அந்த நாட்டில் சிறுபான்மையோராக இருக்கும் அவர்களைத் தங்கள் நாட்டுக்கு அழைத்துச் செல்லும் விஷயமாகத் துருக்கி, பல்கேரியாவுடன் பல ஆண்டுகளுக்கு முன்பே ஜனப் பரிவர்த்தனை ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது.

படித்துப் பாருங்கள்!

மயூரன்

ஆயிரத்தைந்நூறு ஆண்டுகளுக்கு முன், மயூரசர்மன் என்ற பிராம்மணன், கர்நாடக சாம்ராஜ்யத்தில் கதம்ப வம்சத்தை ஸ்தாபித்தான். இந்தச் சரித்திர நிகழ்ச்சியைக் கூறும் கல்வெட்டு ஒன்றை ஆதாரமாகக் கொண்டு, திரு. நி. கா. சுப்பிரமணியன் காதல் வீரம், முதலிய ரஸங்கள் நிரம்பிய கதை புனைந்திருக்கிருர். பிரசுரம்: கலைமகள் காரியாலயம் சென்னை-4. விலை: ரூ. 2-0-0.

SAINT OF SHIRDI

பாரமார்த்திகத் துறையில் மக்களுக்கு விழிப்பூட்ட நம் நாட்டில் அவ்வப்போது எத்தனையோ மகான்கள் தோன்றி அற போதனைகளைச் செய்து உய்வித்திருக்கின்றனர். அவரவர்களுக்குள் ஸ்ரீ சாயிபாபா சமீபத்தில் தோன்றி, மக்களுள்ளத்தில் ஞானவிளக்கைத் தூண்டி விட்டவர். அந்த மகானின் ருசிகரமான வாழ்க்கை வரலாறு இந்நூலில் ஆங்கிலத்தில் எழுதப் பட்டிருக்கிறது.

எழுதியவர்: ஸ்ரீமதி மணி ஸாஹுகார்; பிரசுரம்: Hindkitabs Ltd. Publishers, Bombay; விலை: ரூ. 2—8—0.

அனுமான்

அசோக வனத்தில் சிறை வைக்கப்பட்டு, ஸ்ரீ ராமனைப் பிரிந்து வருந்திய சீதா தேவியின் துயரத்தை நீக்கி, ராமாயண மகா காவியத்தில் தனக்குத் தனி இடம் தேடிக்கொண்ட வாயு புத்திரனை அனுமானைப் பற்றிய வரலாறுகள் இந் நூலில் தொகுக்கப்பட்டிருக்கின்றன.

தொகுத்தவர்: குமாரி க. க. ராஜம், பி. ஏ., வெளியிடுவோர்: புனித

வருந்தத்தக்க நிலை என்னவென்ருல், தங்களுக்கு வந்திருக்கும் நோய் இன்னதென்று தெரியாமலே இந்தக் கொடிய நோயினுல் அவதியுற்று எண்ணிறந்த பாமர மக்கள் இறந்து விடுவதுதான்.

இந்த நூலில் மேற்படி நோயின் தன்மை, அது உண்டாகும் விதம், அதை அறிந்து கொள்ளும் விதம் எல்லாம் மிகவும் தெளிவாக ஆங்கிலத்தில் கூறப்பட்டிருக்கிறது. அந்த நோய்க்கு ஆரம்ப சிகிச்சை, வீட்டு சிகிச்சை, ஆரோக்கிய வாசஸ்தல சிகிச்சை எல்லாம் கூறப்பட்டிருப்பதுடன் அந்த நோய் வராமல் காத்துக் கொள்ளும் வழியும் தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது.

எழுதியவர்: டாக்டர் எம். சந்தோஷம்; கிடைக்குமிடம்: Crystal Publishing House, Hendrick's Lane, Vepery, Madras; விலை: ரூ. 4—12—0.

குழந்தை வைத்தியம்

சுதந்திர பாரதத்தின் வருங்காலப் பிரஜைகள் மிகவும் பலசாலிகளாக இருக்க வேண்டுமானுல், நம் நாட்டில் குழந்தைகளை நோயற்றவர்களாக வளர்க்க வேண்டும். குழந்தை பிறந்தது முதல் வாலிப வயதை அடையும் வரையில் அதைத் தொல்லைக்குள்ளாக்கும் நோய்களுக்கு எல்லையே யில்லை. அந்த நோய்களைப் பற்றிய விவரங்களெல்லாம் இந்நூலில் கொடுக்கப் பட்டிருக்கின்றன. மேற்படி நோய்களைத் தடுக்கும் வழிகளும் விஞ்ஞான ரீதியில் புரிந்து கொள்ளும் முறையில் விளக்கமாகக் கொடுக்கப் பட்டிருக்கின்றன.

எழுதியவர்: டாக்டர் என். திரிபுரசுந்தரி; பிரசுரம்: இன்ப நிலையம், மயிலாப்பூர், சென்னை-4; விலை: ரூ. 3—4—0.

"இது உண்மை...

லக்ஸ் டாய்லட் சோப் உபயோகித்தால் நீங்கள் அதிக அழகோடு விளங்குவீர்கள்"

என்று கூறுகிறார்

மங்களம்



மங்களம் கூறுவதாவது: "லக்ஸ் டாய்லட் சோப்பின் சருமத்திற்கு ஊட்டமளிக்கும் சக்தி என் சருமத்தில் அற்புத மாறுதலை ஏற்படுத்தியிருப்பதைக் காண்கிறேன். இந்த சுத்தமான, வெண்மையான டாய்லட் சோப்பை நான் தினமும் உப யோகிப்பதால் என் சருமம் மிகவும் மென்மையாக இருக்கிறது."



லக்ஸ் டாய்லட் சோப்

சினிமா நட்சத்திரங்களின் அழகு தரும் சோப்

LTS. 373-X 30 TM

REGD. No. M. 4392

Registered as a newspaper in Ceylon



RP 107-50 TM